
கல்கி
KALKI
2.5.1965
35 காசு

சாமி மோட்டார் சர்வீஸ்

தில்லை நகர் – திருச்சி-3 – போன் நெ. 633



ஸ்தாபகர்
T. B. A. முத்துசாமி செட்டியார்

நற்செய்தி

* *

திருச்சி – பண்ருட்டி நேர் டீலக்ஸ் பஸ்

12–3–65 முதல் திருச்சி - பண்ருட்டிக்கு எங்கள் புது பஸ் – டீலக்ஸ் டைப் மாடல்–கீழ்க்கண்ட கால அட்டவணைப் படி ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பொதுமக்கள் வியாபாரிகள் அனைவரின் ஆதரவைப் பெரிதும் விரும்புகிறோம்

கால அட்டவணை

திருச்சி சேர்.-புற.	பெரம்பலூர் சேர்.-புற.	லப்பைகுடி சேர்.-புற.	தொழுதூர் சேர்.-புற.	உ. பேட்டை சேர்.-புற.	பண்ருட்டி சேர்.-புற.
- 6-00 A.M.	7-45 - 8-00	8-50 - 8-55	9-05 - 9-10	10-30-10-40	11-45 -
6-50 P.M. Halt	4-50 - 5-05	3-55 - 4-00	3-40 - 3-45	2-15 - 2-20	- 1-10 P.M.

கட்டணம் வழக்கம்போல்




திருச்சி - பண்ருட்டி புதிய டீலக்ஸ் பஸ்


மானேஜ்மெண்டார்

கல்கி

பொருளடக்கம்



விசுவாவசு, சித்திரை 20 — மே 3


பத்திரிகைகள்
வியாபாரம்
விளம்பரக் கட்டுப்பாடு
ஒரு வேட்டில்
மூன்று பறவைகள்!
சர்க்கார்
சர்வாதிபத்தியம்
நிறுத்து
என்னையும்
ஏற்றிக் கொள்
இந்திய சர்க்கார்



மலர் 24 ● இதழ் 40

விளம்பர வரம்பு: ஒருகாலும் கூடாது!

'அதிகாரபலம் சித்தத்தைக் கெடுத்துவிடுகிறது' என்பது சாணக்கியரும், அவருக்கு நீண்ட காலத்துக்குப் பிறகு ஆக்டன் பிரபுவும் கண்ட இயற்கை விதி. இந்தக் கருத்தின் உட்கருத்தைத் தனித்துத் தற்கால அறிஞரொருவர் 'அதிகார பலமானது விஷயங்களைச் சீர் தூக்கிப் பார்க்கும் திறனைக் குறைத்து விடுகிறது' என்கிறார். அதிகாரம் பெற்றவர்கள் தங்களை மிகவும் சாமர்த்திய சாலிகளாக எண்ணி விடுகிறார்கள். தங்களுக்குத் தெரியாத விஷயத்தை எல்லாம் தெரிந்ததாக நினைத்துவிடுகிறார்கள். தங்கள் தவறுகளை அவர்கள் ஒருபோதும் ஒப்புக் கொள்வதில்லை. அரசியல் தலைவர்களுக்குள்ள அதிகார பலம் வியாபாரிகளுக்கு இராததால் அவர்கள் அடக்கத்துடனே முடிவெடுக்கிறார்கள். அவர்களுக்குச் சிக்கலான காரியங்களை நடத்துவதில் அநுபவமும் இருப்பதால் அரசியல் தலைவர்களைப் போல் அவர்களுடைய செயல்களில் தவறு இருப்பதில்லை. விளம்பரத்துக்கு வரம்பு ஏற்படுத்துவதில் இந்தப்படியே நடந்திருக்கிறது.

ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் இப்போது அதிகார பலம் பெற்ற ஆட்சித் தலைவர் எனினும் முன்பு வியாபாரியாகவும் இருந்தவர். விளம்பரம் செய்வதென்பது நல்ல லாபம் கண்ட வியாபாரிகள் செய்கிற ஆடம்பரச் செலவு என்று வருமானவரி இலாகா அதிகாரிகள் நினைத்த போதிலும் நிதி மந்திரிக்கு உண்மை நிலை என்ன என்பது தெரியும். 'தொழிலைத் தொடங்கு **முன்பே** விளம்பரம் செய்ய வேண்டும். தொடங்கிய தொழிலை விஸ்தரிப்பதெனினும், அவ்வாறு விஸ்தரிப்பதற்கு **முன்பே** விளம்பரம் செய்ய வேண்டும். அதன்பின்தான் லாபமோ, நஷ்டமோ வரும்; எனவே தொழிலைத் தொடங்கவும், வளர்க்கவும் ஆதாரமாகவே விளம்பரம் செய்யப்படுகிறது ; முன் வருஷத்திய வியாபாரத்தின் அளவில் பின் வருஷத்திய விளம்பரச் செலவு இருக்க வேண்டும் என்பது முட்டாள்தனம். விளம்பரச்செலவு ஓர் அத்தியாவசியச் செலவு என்பதை நிதி மந்திரி அறிவார். எப்படியாயினும், ஜனநாயக நாடுகளில் ஒரு தொழிலகத்தின் செலவுகளைப் பற்றி முடிவெடுக்கும் உரிமை அதன் நிருவாகிகளுக்கே உரியது என்பதை அவர் ஒப்புக்கொள்ள வேண்டும்.

தொழிலக நிருவாகிகளின் சுதந்திர உரிமையை விட நாட்டின் ஜனநாயக வாழ்வுக்குப் பத்திரிகைகளின் சுதந்திரக் கருத்துரிமை முக்கியமானது. விளம்பரச் செலவுக்கு விதிக்கும் வரம்பு, தொழில் துறையை மட்டுமின்றிப் பத்திரிகைகளையும் பலமாகத் தாக்கும். அவை விளம்பரத்துக்காகச் சர்க்கார் தயவை நாடுமாறு செய்யும்; இதன் விளைவாகப் பத்திரிகைகளின் கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும். இது தேச வாழ்வுக்கு மகத்தான தீங்கு விளைவிக்கும். சட்டசபைகளும் பார்லிமெண்டும் கூடுகிற சமயங்களில் எதிர்க் கட்சிகள் புரியும் சேவையைப் பத்திரிகைகள் எப்போதுமே புரிந்து வருகின்றன. சர்க்காரின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துப் பரிசீலித்து விமரிசித்து வரும் பத்திரிகைகளின் ஜன

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

நாயகப் பணி எதிர்க் கட்சிகளின் பணியை விட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். விளம்பரத்துக்கு வரம்பு விதித்தால், தொழில் துறை நிர்வாகிகளின் சுதந்திரம் பறிக்கப்பட்டு, அவர்கள் எந்தப் பத்திரிகைக்கு விளம்பரம் செய்யலாம், எந்தப் பத்திரிகைக்குச் செய்யக் கூடாது என்றெல்லாம் ஆட்சியாளர்கள் நிர்ப்பந்தம் செய்யக் கூடும் என்பது ஒருபுறமிருக்க, சர்க்காரின் தவறுகளை எடுத்துக் காட்டி எதிர்ப்புப் பணி புரியும் பத்திரிகைகள் ஆட்சியாளரின் கைக்குள் அடக்கமாகிவிடக்கூடிய பயங்கர வாய்ப்பும் உள்ளது. இதன்பின் அரசாங்கம் பூரண சர்வாதிகாரப் பாதையில் வெகு எளிதில் முன்னேறிவிட முடியும்.

ஏற்கனவே பத்திரிகைகளுக்கு எத்தனையோ இடுக்கண்கள். வாழ்க்கைச் செலவு உயர்ந்துகொண்டே போகும்போது அதற்கேற்பத் தொழிலாளிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் ஊதியத்தையும் உயர்த்த வேண்டும் என்பதை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால் வாழ்க்கைச்செலவு எதனால் உயர்ந்தது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். வாழ்க்கைச் செலவு உயருவதற்குத் தொழிலதிபர்களோ, பத்திரிகை நிர்வாகிகளோ காரணமல்ல. அரசாங்கத்தின் பண வீக்கக் கொள்கையால்தான் வாழ்க்கைச் செலவு உயர்ந்து வருகிறது. அரசாங்கத்தின் தவறான நிதிக் கொள்கை காரணமாக ஏற்படும் விளைவுகளுக்குப் பத்திரிகைகளும் மற்ற எல்லாத் தொழில்களின் நிருவாகமும் பொறுப்பேற்றுப் புதுச் செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. டம்பாச்சாரித் திட்டங்கள் உள்ள வரை வாழ்க்கைச் செலவு உயர்ந்து கொண்டேதான் இருக்கும். இதற்கேற்பத் தொழில் நிறுவனங்களும் தங்கள் செலவைப் பெருக்கிக் கொண்டே போவது சாத்தியமல்ல. முக்கியமாக, பத்திரிகைத் தொழில்களிடம் சர்க்கார் இவ்வாறு எதிர்பார்ப்பதற்கு நியாயமில்லை. ஏனெனில் இந்தத் தொழிலின் வளர்ச்சிக்கு அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை. இயந்திரங்களோ, காகிதமோ பெறுவதற்கும், செலாவணியைப் பெருக்கிக் கொள்வதற்கும் அரசாங்கத்தால் பலவிதமான தடைகள் ஏற்பட்டுள்ளன. பத்திரிகைகள் தமது வருமானத்தை உயர்த்திக் கொள்ள எவ்வித வசதியும் செய்து தராத அரசாங்கம் அதன் செலவினங்களை மட்டும் சட்டப்படி பெருக்குவது நீதியல்ல. தொழிலாளிகளின் ஊதியம் மதிப்பில் குறைந்து போவதற்குக் காரணகர்த்தா அரசாங்கம் தான். அரசாங்கத்தின் பணவீக்கக் கொள்கையைக் கட்டுப்படுத்துவது ஒன்றுதான் விலைவாசி உயர்வுக்கு நிரந்தரப் பரிகாரமாகும். எனவே இனியேனும் சர்க்கார் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தத்தான் முயல வேண்டுமே யன்றி ஊதியங்களை உயர்த்திப் பணவீக்கத்தை அதிகரிக்கக் கூடாது.

எண்ணற்ற இன்னல்களுக்கு இடையே பாராட்டத் தக்க முறையில் சுதந்திரத்தைக் காத்து வரும் பத்திரிகைத் தொழிலின் மீது புதிய பாரங்களைச் சுமத்தினால் அவற்றின் சுதந்திர சக்தி குன்றத் தொடங்கி காங்கிரஸ் யதேச்சாதிகாரம் ஓங்கலாகும். விளம்பரத்துக்கு வரம்பு விதிப்பது பற்றி அமெரிக்க சர்க்கார் யோசித்தாலே அது சட்ட விரோதமெனக் கருதித் தடுக்கப்பட்டிருக்கும். நம் நாட்டிலும் சர்க்கார் உத்தேசத்துக்கு ஏகோபித்த எதிர்ப்பு வெளியாகியுள்ளது. எனவே தான் விதி தற்போதைக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதைத் தாற்காலிக ஏற்பாடாகக் கருதாமல் ஒருபோதும் இத்தகைய வரம்பைப் பற்றி எண்ணிப் பாராமல் இருப்பதே புத்திசாலித்தனமாகும்.

நட்புக்கு வழியல்ல!

கம்யூனிஸ ஆக்ரமிப்பை எப்பாடுபட்டேனும் தடுக்க வேண்டும் என்ற கருத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜான்ஸன் அவர்கள் வியட்நாம் போரில் முழுமூச்சுடன் பிரவேசித்துள்ளதை உலகம் நன்கறியும். எந்த விநாடியில் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கு மிடையே நேரடி மோதல் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சக்கூடியவாறு விவகாரம் முற்றி வருகிறது. எனவே இச்சமயத்தில் அமெரிக்க ஜனாதிபதியவர்கள் வெளி நாட்டுத் தலைவர்களைத் தகுந்த முறையில் வரவேற்று உபசரிப்பதோ, உரையாடுவதோ ஓரளவுக்குச் சிரமசாத்தியமான காரியம் என்று ஜான்ஸன் அவர்கள் காரணம் காட்டிப் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான், பாரதப் பிரதமர் லால் பகதூர் ஆகியோரது அமெரிக்க விஜயத்தைத் தள்ளி வைத்தார். முதலில், இவ்வாரம் அமெரிக்கா செல்லவிருந்த அயூப்கானை அமெரிக்க ஜனாதிபதி வேண்டுமென்றே அவமானப்படுத்தி விட்டார் என்று மகிழ்ந்தனர் பலர்; பிறகு நமது பிரதமரையும் அவமானப்படுத்தி விட்டதாகக் கருதிப் பார்லிமென்டிலும், பத்திரிகைகளிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. பாரத சர்க்காரும் இதனை ஒரு மரியாதைக் குறைவான செயலாகவே கருதி ஆட்சேபனை தெரிவித்துள்ளது. இது ராஜநீதி யறியாமல் செய்த காரியம்.

வியட்நாமில் அமெரிக்கா புரியும் போர் நம் நாட்டு நலனுக்காகவும் மேற்கொள்ளப்பட்டுள்ள போர். எனினும் அமெரிக்கத் தலையீட்டை நமது சர்க்கார் வரவேற்று, தரும ரீதியில் தனது பலத்தை அதற்கு அளிக்க இன்றளவும் தயங்கி வருகிறது.

அமெரிக்க சர்க்காரைக் குறைகூறச் சந்தர்ப்பம் கிடைக்குமா என்று இந்திய சர்க்கார் எப்போதுமே காத்துக் கொண்டிருப்பதாக அமெரிக்க மக்களிடை ஒரு கருத்துண்டு. அதற்கு இசைவாகவே நம் நாட்டு சர்க்காரும் நடந்து வந்துள்ளது. உயிராபத்தான சமயத்தில் அமெரிக்கா அளித்த ராணுவ உதவிக்கும், அனவரதமும் நிதி உதவி பெறுவதற்கும் மனமார நன்றி தெரிவிக்க நமது சர்க்கார் தயங்குகிறது. ஆனால் அமெரிக்கா

வைக் கண்டிக்க மட்டும் தயங்குவதில்லை. சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறார்கள். அமெரிக்க ஜனாதிபதி தெளிவாகக் காரணம் காட்டி இந்தியப் பிரதமர் லால்பஹாதூரின் விஜயத்தைத் தள்ளி வைத்துள்ள போதிலும் அதற்கு வேறு நோக்கங்கள் கற்பிக்கப்படுகின்றன. இது நட்புக்கு வழியல்ல. நமக்கு அமெரிக்க அரசின் நட்பு மிக அவசியம்.

மக்கள் சபைப் பிரச்னையல்ல; மக்களின் பிரச்னையே!

'பாரத சேவக சமாஜத்திடம் நீங்கள் பட்சபாதமாக நடந்துகொண்டிருக்கிறீர்கள். காங்கிரஸுக்கு எதிராக நீங்கள் வேலை செய்திருக்கிறீர்கள்' என்று பொதுக் கணக்குக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ ஆர். ஆர். மொரார்க் அவர்களிடம் உள்துறை மந்திரி ஸ்ரீ நந்தா அவர்கள் மக்கள் சபையின் தாழ்வறையில் கூறியதாக ஆசாரிய கிருபளானி அவர்கள் தெரிவித்திருக்கிறார். மந்திரி இன்னும் கடுமையாகப் பேசினார் என்றும் தாம் அதை 'நாசூக்காக'த் தெரிவிப்பதாகவும் ஸ்ரீ கிருபளானி கூறியிருக்கிறார். மக்கள் சபை அங்கத்தினரான ஸ்ரீ மொரார்க்கிடம் உள்துறை மந்திரி இவ்வாறு பேசியது சபையின் கௌரவத்தைக் குறைக்கும் உரிமைப் பிரச்னை எனச் சில அங்கத்தினர் கருதினர். ஆனால் தாழ்வறையில் நடந்த சம்பவத்தை சபை நடப்பாகக் கருதுவதற்கில்லை என்று கூறி, உரிமைப் பிரேரணையைச் சபாநாயகர் தள்ளுபடி செய்துவிட்டார்.

விஷயம் இதோடு தீர்ந்து விட்டதாக எண்ணி விடலாகாது. உள் துறை மந்திரி ஸ்ரீ நந்தா பொதுக் கணக்குக் கமிட்டித் தலைவரிடம் தகாத வார்த்தைகளைக் கூறவில்லை என்று இப்போது நிரூபணமாகிவிடவில்லை. அவர் 'அந்தரங்கமாக' அப்படிக் கூறினார் என்றே வாதிக்கப்பட்டதால், லோக சபையின் உரிமைகளுக்கு இவ்விஷயம் அப்பாற்பட்டது என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அவ்வளவுதான். லோக சபையின் உரிமைப் பிரச்னை குறித்து எழுந்த விஷயம், நாடு முழுவதும் கவனித்து உஷாராக வேண்டிய பயங்கரப் போக்குக்கு ஓர் உதாரணமாகியுள்ளது. காங்கிரஸுக்கு விரோதமாகத் தணிக்கை செய்யக் கூடாது என்று பொதுக் கணக்குக் கமிட்டித் தலைவரிடம் சாட்சாத் சதாசார மந்திரியே கூறினார் என்றால் கட்சியின் ஏகாதிபத்தியம் நிர்வாகத்தில் எப்படிப் புரையோடியிருக்கிறது என்பதை எளிதில் ஊகிக்க முடியும். இன்னும் எந்தெந்த மந்திரிகள் எந்தெந்த விசாரணைக் கமிட்டிகளை இதேபோல் 'அந்தரங்க'மாக அச்சுறுத்தி வருகிறார்களோ என்ற சந்தேகம் மக்களுக்கு எழுவது நியாயம். இந்தச் சூழ்நிலையில் ஜனநாயகம் எப்படி உயிர் வாழும் என்று மக்கள் கவலைப்படுகிறார்கள். மக்கள் சபை தள்ளுபடி செய்துவிட்ட விஷயத்தைத் தாங்களும் அதேபோல் எளிதில் தள்ளுபடி செய்வதற்கில்லை என்றே மக்கள் எண்ண வேண்டும்.

தண்டச் செலவுகள்

பொதுக் கணக்குக் கமிட்டியின் அறிக்கையிலிருந்து பத்திரிகைகள் வெளியிட்டுவரும் சில விஷயங்களை அடியில் தந்திருக்கிறோம். இது குறித்து நமது விமரிசனம் ஏதுமே தேவையில்லை.

இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்சிலின் நிதி நிலைமையைப் பரிசீலனை செய்யாமலும், அதன் திட்டங்களைச் சரிவரத் தணிக்கை செய்யாமலும் உணவு—விவசாய மந்திரி காரியாலயம் அதற்கு ஆண்டுதோறும் மானியம் அளித்துக் கொண்டே வந்திருக்கிறது. ஆராய்ச்சிக்காகக் கொடுக்கப்பட்டு வந்த தொகைகளை இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்சில் பல ஆண்டுகளாகச் சர்க்கார் கடன் பத்திரங்களில் முடக்கியுள்ளது.

உணவு தானிய விநியோகத்தில் உணவு-விவசாய மந்திரி காரியாலயத்துக்கு மொத்தத்தில் ரூ. 32.57 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இது நஷ்டமாகக் காட்டப்படவில்லை; உதவித் தொகையாக கப்பட்டதாகவே கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

அகில இந்திய கைத்தறி போர்டு கலந்து கொண்ட பல்வேறு சர்வதேசக் கண்காட்சிகளில் விற்பனையாகாமல் திரும்பிய சரக்குகள் மகா மோசமான இடங்களில் கவனிப்பாரற்றுப் போடப்பட்டிருந்ததால் ரூ. 3.85 லட்சம் மதிப்புள்ள துணி வகைகள் நாசமாகியுள்ளன.

ஆறு தனியார் வைத்தியக் கல்லூரிகளிடமிருந்து எழுத்து மூலமாக வேண்டுகோள் பெறாமலும், அவற்றின் நிதி நிலைமையைப் பரிசீலனை செய்யாமலும் அவற்றுக்குச் சுகாதார மந்திரி இலாகா ரூ. 72 லட்சம் மானியம் அளித்திருக்கிறது. சில ஸ்தாபனங்கள் கேட்டதைவிட அதிகமாகச் சுகாதார மந்திரி இலாகா மானியம் வழங்கியிருக்கிறது. இதற்கு நிதி மந்திரி காரியாலயம் எப்படிச் சம்மதம் அளித்தது என்பது பற்றி கமிட்டி ஆச்சரியம் தெரிவித்திருக்கிறது.

என்ன சேதி?

தண்டிப்பது யார்?

ஒரு மணியல்ல; ஒரு மூட்டையல்ல; 19 வாகன்களில் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து கேரளத்துக்கு வந்த அரிசி மனிதர் உபயோகிக்க லாயக்கின்றிப் பாழாகி யிருந்ததாம். இந்த அரிசியைக் கேரள உணவு தானியக் கார்ப்பரேஷன் ஏற்க மறுத்து விட்டதாம். நல்ல காலம், கேரள மக்கள் பிழைத்தார்கள்!

அரிசிப் பஞ்சம் தலைவிரித்தாடும் இக்காலத்தில் இப்படித் தானியத்தைப் பாழாக்கியவர்கள் யாராயிருப்பினும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். உணவு தான்ய வியாபாரம் தனி நபர்களிடம் இருந்தால் குற்றவாளிகளைச் சுலபமாகக் கண்டுபிடித்துத் தண்டிக்கலாம். ஆனால் இவ்வியாபாரத்தைச் சர்க்காரல்லவோ மேற்கொண் டிருக்கிறது? சர்க்காரைத் தண்டிக்கும் அதிகாரம் பெற்றவர்கள் மக்கள். மக்களுக்குத் தண்டிக்கச் சந்தர்ப்பம் வருவது தேர்தலின்போதுதான்! ஆனால் அந்தச் சமயத்தில் ஆளும் கட்சியினர் வேறு ஏதேனும் அற்ப ஆசைகளை நிறைவேற்றுவதாகச் சொன்னால் மக்கள் ஏமாந்து போவதை இன்று நம் நாட்டில் சர்வசாதாரணமாகப் பார்க்கிறோம். வியாபாரியாக வந்த ஆங்கிலேயன் நம் மக்களிடம் கண்ணாடிச் சாமான்களையும் பீங்கான் பொம்மைகளையும் காட்டி நாட்டைப் பிடித்ததாகச் சரித்திரத்தில் படித்திருக்கிறோம். அதே தந்திரத்தை இன்றும் ஆளும் கட்சி கடைப்பிடிக்கிறது. முன்பு போலவே நம் மக்கள் இன்றும் ஏமாந்து வருவதுதான் பரிதாபம்.

பர்மா தமிழர் சங்கத்தின் பதில்

சில நாட்களுக்கு முன் மந்திரி திரு ராமையா அவர்கள், பர்மாவிலிருந்து தமிழர்கள் தங்கள் வீடு வாசல்களைத் துறந்து இந்தியாவுக்குக் கூட்டம் கூட்டமாக வருவதற்குக் காரணமே பர்மா தமிழர் சங்கம்தான் என்று அறிவித்தார். இதைப் படித்த போதே தமிழர்கள் நெஞ்சம் இக் கூற்றை ஏற்கத் தயங்ியது. இப்பொழுது பர்மா தமிழர் சங்கம், மந்திரியின் குற்றச்சாட்டை முற்றும் மறுத்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இப்பொழுதுதான், தாய் நாட்டில் உள்ள தமிழர்கள் ஆறுதல் அடைந்திருக்கிறார்கள்.

பர்மா தமிழர் சங்கம், பர்மாவில் குடியேறியுள்ள தமிழர்களின் நலனுக்காகப் பாடுபட்டு இருக்கிறதே யன்றி, அங்குள்ளவர்களை வெளியேற்றி அவர்களின் வாழ்வைச் சீர்குலைப்பதற்காகச் செயல்படவில்லை. மந்திரி ராமையா அவர்கள், பர்மா சர்க்காருடன் நமது அரசினர் பேச்சு வார்த்தை நடத்தி அங்கு குடியேறியுள்ள இந்திய மக்களின் நலனைப் பாதுகாக்கத் தவறியதை இப்படி மூடி மறைக்க முயன்றிருக்கிறார்.

இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரின் விஷயத்தில் பிரதமர் லால்பஹாதுர் ஸ்ரீமதி பண்டார நாயகாவுடன் செய்து கொண்ட அநீதியான உடன்படிக்கைக்கு உடன் பாடியவர் மந்திரி திரு ராமையா அவர்கள்தான். இவர் பர்மா தமிழர்கள் விஷயத்திலும் அநீதி ஏற்பாட்டைக் கடைப்பிடித்ததைக் கண்டு யாரும் வியக்கவில்லை. பர்மா தமிழர் சங்கம், அநீதியான குற்றச்சாட்டுக்கு ஆணித்தரமாகவும் தைரியமாகவும் பதிலிறுத்ததை வரவேற்கிறோம்.

வங்கம் தரும் செய்தி


நிறம் மாறியிருந்த அரிசியைச் சாப்பிட்டதனால் ஆறு பேர் உயிர் இழந்தனர் என்று வங்கத்தில் நாடியா ஜில்லாவிலிருந்து செய்தி வந்திருக்கிறது. இந்த அரிசியைச் சமைத்துச் சாப்பிட்டவர்களுக்கு உடனே வலியும், ஒருவகை ஜுரமும் ஏற்பட்டன என்று அரசாங்க அதிகாரிகள் கூறினர். சர்க்கார் பரிசோதனை சாலையில் இந்த அரிசியை எலிகளுக்கும் இன்னும் சில மிருகங்களுக்கும் ஊட்டிய போது அவையும் இறந்து விட்டனவாம். விவசாயத் துறை அதிகாரிகளும், சுகாதார அதிகாரிகளும் நிறம் மாறிய அரிசியைப் பற்றி ஜாக்கிரதையாக இருக்கும்படி வங்க மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்களாம். அரிசியைக் கிடங்கில் சேமித்து வைத்ததில் தான் ஏதோ கோளாறு ஏற்பட்டு இப்படி நிறம் மாறிக் கெட்டிருக்கிறது என்று அதிகாரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

உணவு தானிய வியாபாரத்தை அரசினர் மேற்கொள்வது குறித்து இதற்குமேல் நாம் சொல்ல இன்னும் என்ன இருக்கிறது?

தில்லியில் திருமலையப்பன்

'வடவேங்கடவன்' எனப்படும் வேங்கடேசுவரப் பெருமான் திருப்பதிக்கும் மிக வடக்கிலுள்ள தில்லிமாநகரில் கோயில் கொள்ள இருக்கிறார். முன்னாள் ஸுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ என். ராஜகோபால அய்யங்காரைத் தலைவராகக் கொண்ட செல்வாக்குள்ள ஒரு குழுவினர் வட நாட்டாரின் அன்புத் தெய்வமான பாலாஜிக்கு ஆலயமெழுப்பும் நன் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆலயத்துக்கு இணைந்தவாறு வேத பாடசாலை ஒன்றும் அமைக்கவிருப்பது பாராட்டுக்குரிய விஷயம். பாரதத்தின் தலைநகரில் எழும்ப விருக்கும் ஆலயத்துக்காக ராமகிருஷ்ணபுரத்தில் பாரத அரசாங்கம் 1200 சதுர கஜம் நிலம் ஒதுக்கியுள்ளது. நிலத்தை வாங்கி ஆலயம் நிர்மாணிப்பதற்குச் சுமார் ஐந்து லட்சம் ரூபாய் தேவைப்படும். ஒரு சதுர கெஜம் நிலத்துக்குரிய ரூ. 35-ஐ அனுப்பி வைத்து ஆஸ்திகர்கள் திருப்பணியில் பங்கு பெறலாம். அல்லது அவரவர் சௌகரியப்படி அதிகமாகவோ குறைவாகவோ **பொருளாளர், ஸ்ரீ வேங்கடேசுவர மந்திர் சொசைட்டி, ஏ-20-38, ஜோதி காலனி, புதுதில்லி — 3** என்ற முகவரிக்குத் திரவியம் அனுப்பலாம்.

ராஜாஜியின் கருத்துக்கள்



ஆளும் கட்சிக்காரராயினும் சரி, எதிர்க் கட்சிக்காரராயினும் சரி, ஹிந்தி வழங்காத பகுதித் தலைவர்கள் யாவரும் என் வார்த்தைக்குச் செவிசாய்க்க வேணும்:

தோல்வி மனப்பான்மையை விட்டு, நாம் தீவிரமாகப் போராடினால் ஆங்கிலத்தை நிச்சயமாக நீடிக்கச் செய்ய முடியும். இதுவரை இருந்தது போல் ஆங்கிலம் மட்டும் மத்திய ஆட்சிமொழியாக நீடிக்குமானால், ஹிந்தியும் அதற்குரிய இடத்தைப் பெற்று, அதன் நியாயமான உரிமைகளை அனுபவிக்கும். காரியசாத்தியமற்றதும், ஆபத்தானதுமான பேராசைகளை ஹிந்தியர்கள் கைவிடுவார்கள். 'ஹிந்தி எப்படியும் வந்தே தீரும்' என்று சொல்வது பிதற்றல். இனப் பத்திரிகைகளின் செலாவணி பிரத்யட்சமாக நிதரிசனமாக்கி வருவதிலிருந்து ஆங்கிலம் எப்படியும் நீடித்தே தீரும் என்பதை உணருகிறோம். தோல்வி மனப்பான்மையை விட்டுத் தள்ள வேண்டும். ஜனநாயகத்தில் கோடிக்கணக்கான மக்களின் தீவிர எதிர்ப்பை எப்படி அரசாங்கம் புறக்கணிக்க முடியும்?

***

'ஷேக் அப்துல்லா யுத்த மிரட்டல் செய்கிறார்' என்பது போன்ற தலைப்புக்களை எல்லாப் பத்திரிகைகளிலும் காண்கிறோம். மக்களுக்குத் தங்கள் ஆட்சியை சுயநிர்ணயம் செய்துகொள்வதற்குள்ள உரிமை பற்றியும், அந்த உரிமையைச் சமாதானமான முறையில் நிலைநாட்டிக் கொள்ள முடியாவிட்டால் என்ன செய்ய நேருமென்பதைப் பற்றியும் தர்க்கரீதியில் அப்துல்லா ஆராய்வதாகவே தோன்றுகிறது. இதை 'யுத்த மிரட்டல்' என்று கூறுவது நியாயமல்ல. சுய நிர்ணய உரிமை கோரியவர் எவருமே இதுபோன்ற கருத்துத் தெரிவித்ததுண்டு. அதையெல்லாம் யுத்தமாக இதுவரை யாரும் வியாக்கியானம் செய்ததில்லை. ஷேக் அப்துல்லாவுக்கு இது ஒரு துர்பாக்கிய தசையென்றும், அவர் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறார் என்றும் தோன்றுகிறது. அது எப்படியாயினும் இது ஷேக் அப்துல்லா என்ற ஒரு தனி மனிதரைக் குறித்த பிரச்னையல்ல என்பதையும் காச்மீரத்தின் மக்கள் அனைவரையும் குறித்த பிரச்னை என்பதையும் நினைவில் கொள்வோம். அந்த மக்களைப் பழைய சகாப்தத்துச் சக்கரவர்த்திகள் போல் நடத்தாமல், பொதுஜன நல்லெண்ணத்தை நாடும் ஜனநாயக சர்க்கார் எப்படி நடத்த வேண்டுமோ அப்படி நடத்துவோமாக!

***

''ஹிந்தி அகில இந்திய ஆட்சிமொழியாகி விட்டது. இதை யாரும் மாற்ற முடியாது'' என்று பாரதப் பிரதமர் ஹிந்தி வெறியருக்கு வாக்குறுதி கூறியுள்ளார். இங்கோ திரு காமராஜ் அவர்கள் தி. மு. க. வை மடக்குவதற்காகத் தந்திரமாகப் பேசுகிறார்: 'ஹிந்தி படிக்க வேண்டுமென்று வற்புறுத்த இவர்கள் யார்?' என்று வட இந்திய சகோதரர்களைச் சாடுவதாக வேஷம் போடுகிறார். இங்குள்ள மக்களின் ஏகோபித்த எதிர்ப்பை உணர்ந்து அந்த மெட்டுக்கு ஏற்ப ஆடுகிறார்.

ஸ்ரீ லால் பகதூர், ஸ்ரீ காமராஜ் இவர்களின் இரு வேறு பாவனைகளிலிருந்தே சர்க்காரின் தடுமாற்றத்தை உணரலாம். ஒருபுறம் ஹிந்தித் திணிப்பைத் தீவிரமாக எதிர்க்கும் ஹிந்தி பேசாத மக்கள்; மறுபுறம் ஹிந்திக்கு சாஸனம் அளித்த அந்தஸ்தைச் சிறிதும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதில் அதே போல் தீவிரமாக இருக்கும் ஹிந்தியர். இவ்விருவரில் அந்தந்தப் பிரிவினரையும் அவ்வப்போது திருப்திப்படுத்துவதிலேயே காங்கிரஸ் முனைந்திருக்கிறதேயன்றி, நியாயமான முறையில் பிரச்னையைத் தீர்க்க முயலவில்லை. இந்தப் போக்கின் நிகர விளைவாகப் பிரச்னை கொழுந்து விட்டெரிகிறது; மௌனமான முறையில் தேசப் பிரிவினை நிகழ்ந்து கொண்டே வருகிறது. தெய்வங்கள்தான் கருணைபுரிந்து நிலைமையைச் சீர்ப்படுத்தவேண்டும். சாஸனத்தில் உள்ள ஆட்சி மொழி ஷரத்தைநீக்கி அதன்மூலம் மக்கள் பிரச்னையை மறக்குமாறு செய்ய வேண்டும். நூறாண்டுகளாக இருந்துவரும் அமைப்பைப் பின்தொடருவதே பிரச்னைக்குத் தீர்வு என்பதை ஆண்டவன்தான் பிரதமருக்கு உணர்த்த வேண்டும். ஆட்சிமொழி குறித்த எவ்வித சட்டமும் இல்லாத கடந்த காலத்தில் இன்றைவிட நிர்வாகம் சிறப்பாகவும் சுறுசுறுப்பாகவும் நடைபெற்றது. சட்ட வரம்புக்கு உட்படுத்தத் தேவையற்ற ஆட்சிமொழி பற்றி எதற்காகப் புதிய சட்டங்கள் இயற்ற வேண்டும்?

ஹிந்தி பேசாத மக்கள் விடை காண வேண்டிய வினா இதுதான்: நமது உண்மையான உணர்ச்சிகளை நாம் ஹிந்தியருக்கு எப்படி உணர்த்துவது? தேச ஐக்கியத்துக்குள் ஓர் ஆப்பைப் புகுத்தாமல் நாம் அவர்களுடைய இதயத்தில் புகுவது எவ்வாறு? முரண்பட்ட இரு சாராரின் கருத்துக்களைத் தேசத்தின் பொது நலனுக்குப் பணிய வைக்கும் விவேகத்தை நாம் ஹிந்தியருக்கு அறிவுறுத்துவது எங்ஙனம்? இதுதான் நாம் கவனிக்க வேண்டிய விஷயம்.

வெண்ணிற ஆடை

அவள் பைத்தியம். அந்தப் பைத்தியத்தைத் தெளிவிக்க மனத்தத்துவ டாக்டர் வந்தார். பைத்தியத்துக்கு மூலகாரணத்தை அறியத் துடித்தார் டாக்டர். சஸ்பென்ஸ் அதில் தானே இருக்கிறது? இடைவேளையின்போது அறியாப் பருவத்தில் மணக்கோலம் ஏற்ற சௌபாக்கியவதி இரண்டு மணி நேரத்தில் கார் விபத்தில் தன் கணவனை இழந்து, பூவும் பொட்டும் இழந்து அதிர்ச்சிக்குள்ளானாள் என்பது தெரிய வருகிறது. டாக்டரின் மனத் தத்துவச் சிகிச்சைக்குப் பிறகு அவள் பைத்தியம் தெளிந்தது. ஆனால் காதல் பைத்தியம் அவளைப் பற்றிக் கொண்டது. மனத்தத்துவ டாக்டருக்கு ஏற்கனவே காதலி இருப்பது வெளிப்படவே, அந்தக் காதலிக்கு டாக்டரை மணம் முடித்து வைத்து, அறியாப் பருவத்தில் பெற்ற விதவைப் பட்டத்தை இப்பொழுது தான் நிஜமாகவே அடைந்து விட்டதாகக் கருதி விதவைக்கோலம் பூண்டு விடுகிறாள் அவள்.

அழுத்தமான கதை, புது முகங்களின் அபார நடிப்பு, கோடைக்கானலின் இனிய காட்சிகள் இவை வெண்ணிற ஆடையின் விசேஷ அம்சங்கள். ஒருசில காதல் காட்சிகள், நடனங்கள், பைத்தியக் கோலங்கள், குளிக்கும் காட்சிகள் வெண்ணிற ஆடைக்கு 'அடல்ஸ் ஒன்லி' பட்டத்தைத் தேடித் தந்துவிட்டன. இருக்கிற ஒருசில தரக்குறைவான காட்சிகளைத் தவிர்த்து விட்டாலும் நல்ல வசனங்களுக்காகவும் நடிப்புக்காகவுமே ஓடக்கூடிய படம்தான்.

பைத்தியமாக நடிக்கும்போதும் — ஆபாசமாகக் கைகளைத் தூக்குவது தவிர! — பைத்தியம் தெளிந்து கண்ணியமாக நடிக்கும் போதும் ஜெயலலிதா முன்னுக்கு வரக்கூடிய நட்சத்திரம் என்பதை நிரூபிக்கிறார்.

புது முகங்களைப் போட்டுத் தைரியமாகப் படம் எடுக்கிறார் ஸ்ரீதர். 'பெர்ஸனாலிடி கல்ட்' திரை உலகிலிருந்து வெளியேற இது போன்ற துணிகர முயற்சிகள் உதவும்.





"நட்டி புரொபஸர்"





அசட்டுப் பேராசிரியர் ஒருவர் தமது ரசாயன சாலையில் என்னவெல்லாமோ பரிசோதனைகளைச் செய்து ஒரு புது திரவத்தைச் சிருஷ்டிக்கிறார். அதைக் குடித்த மாத்திரத்தில் விகார உருவம் படைத்த பேராசிரியர் கன்னியர் கருத்தை இழுக்கும் மன்மத ரூபனாகவும், சங்கீத விற்பன்னனாகவும் மாறி விடுகிறார். ஆனால் அந்தோ பரிதாபம்! இந்த மாறுபட்ட சௌந்தரிய வடிவம் நீண்ட நேரம் நீடிப்பதில்லை. மருந்தின் வீரியம் உடலில் குறைய ஆரம்பித்தவுடன் பழைய உருவத்தின் கோணங்கி சேஷ்டைகளும், காக்கைக் குரலும் மெள்ள மெள்ள வெளிப்பட்டு, பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்தி விடுகிறது. முழு உண்மையைப் பார்ப்பவர்கள் அறியுமுன் சௌந்தரிய வடிவினன் ஓடி ஒளிகிறான்!

கோணங்கிப் பேராசிரியர் இந்த மாறுபட்ட உருவத்தை எடுப்பதற்கே காரணம் காதல் தான். தன் மாணவியாக வந்துள்ள சௌந்தர்யவதியைப் பேராசிரியர் உள்ளத்துக்குள் காதலிக்கிறார். ஆனால் தம் விகார உருவத்தைக்கண்டு எந்தப் பெண்தான் மையல் கொள்ள முடியும் என்று அழகனாக மாறுகிறார். ஆனால் அவளோ அழகனாகத் தோன்றியவனைக் காதலிக்க வில்லை. அவளுக்கு உண்மையான காதல் அந்த அசட்டுப் பேராசிரியரிடம் அல்லவா! இந்த உண்மையைப் பேராசிரியர் உணரும்போது அந்த அசட்டு முகம் இன்னும் எவ்வளவு அசடாகி வழிகிறது!

அசடனாகவும் — அழகனாகவும் முற்றும் மாறுபட்ட இரண்டு வேஷங்களில் தோன்றி ஜெர்ரிலூயி அசாத்தியமாக நடித்து வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கிறார். ஸ்டெல்லா ஸ்டீவன்ஸ் மாணவியாகவும் காதலியாகவும் தோன்றி நன்றாக நடித்திருக்கிறார். சிரிக்கத் தெம்பு இருந்தால் நட்டி புரொபசரைப் பார்க்கத் தவறாதீர்கள் என்று சொல்லத் தோன்றுகிறது.

அத்தியாயம் 7

தாமரையின் தவிப்பு

சிறுபிள்ளைத்தனமாகத் தான் விவரமறியாமல் கூறிய வார்த்தைகளைத் திரும்பச் சொல்லி ஆயிரத்துக்கு மேற்பட்ட கண்டங்களிலிருந்து கேலிச் சிரிப்பு அலைகளை எழுப்பிய தினதயாளு அடுத்த சில கணங்களுக்குள்ளாக அதே ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களின் பாராட்டுதலையும் கைதட்டலையும் தான் சொன்ன அதே வார்த்தைகளுக்காகப் பெற்றுத் தந்ததை அறியாமல் வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தான் தங்கப்பன்.

வாசல் திண்ணையைத் தாண்டி, மாலை நேரமாதலால் திறந்து வைக்கப்பட்டிருந்த கதவைக் கடந்து உள்ளே சென்றதும், முற்றத்தின் மூன்று புறங்களிலும் சூழ்ந்திருந்த ரேழியில் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியின் துணியைப் படபடக்கச் செய்து தூசி போக உதறியவாறே, ''அக்கா! அக்கா!'' என்றழைத்தார் முருகேசன்.


தாமரை அடுக்களையிலிருந்துவெளியே வந்தாள். ''என்ன தம்பி! இப்பத்





காலச் சக்கரம்

கி. ராஜேந்திரன்



தான் வர்றியா? சாயந்திரமே வருவா யாக்கும்னு காப்பி போட்டு வைச் சேன். தண்ணியா ஆறிடுச்சு. உட் காரு, சுடப் பண்ணி எடுத்தாறேன். விணுக்காம குடிச்சுடு'' என்று கூறி உள்ளே மீண்டும் போகத் திரும்பினுள் தாமரை.

''காப்பி கிடக்கட்டும், அக்கா! முதல்லே உன் மவனுக்குக் கொழு மோர் காய்ச்சிக் கொடு. ரொம்பப் பயந்துட்டான், பாவம்!'' என்றார் முருகேசன்.

''ஏன், ஏன்? என்ன ஆச்சு?'' என்று இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள் தாமரை.

''அது பெரிய கதை, அக்கா!'' என்று இலேசாகச் சிரித்தவாறே 'ஈஸி சேரி'ல் சாய்ந்தார் முருகேசன். தாம் அறிந்ததையும் கேட்டதையும் ஊகித்த தையும் ரொம்பச் சுவாரசியமாக ரசித்துச் சொல்லிக் கொண்டு வந் தார் அவர்.

கடைசியில், ''தங்கப்பனைக் கூட்டத் திலே பார்த்ததுமே பேச நினைச் சேன். பள்ளிக்கூடத்துப் பசங்களோட கோஷ்டியா நின்னுக்கிட்டிருந்தான். 'அம்மா வீட்டிலே தனியா இருப்பா. இங்கே என்னடா வேடிக்கை வேண்டிக் கிடக்குது' அப்படின்னு சொல்லி

விரட்டி விடலாம்னு யோசிச்சேன். அதுக்குள்ளாற இவனைப் பற்றித் தின தயாளு கிண்டலாகப் பேசியதைக் கேட்டு ஜனங்கள் 'இடி இடி'ன்னு சிரிச்சாங்களா? தங்கப்பன் ஒரேயடியாப் பயந்துட்டான், என்னமோ ஏதோன்னு உளறியடிச்சுக்கிட்டுக் கண்ணு மண்ணு தெரியாம இங்கேயும் அங்கேயுமா ஓடறான்! ஒருத்தன் கையிலேயும் அகப்படாமல் பாய்ச்சல் காட்டறான்! அவனுக்குப் பைத்தியம் கித்தியம் பிடிச்சுடுமோன்னுகூட நான் சந்தேகிச்சுட்டேன்! நாலே எட்டிலே அவனைத் தாவிப் பிடிச்சு, தோளை உலுக்கிக் கன்னத்திலேயும் சடசடன்னு தட்டி அவனுக்குச் சுயபுத்தியைக் கொண்டாந்தேன். ஐந்து நிமிஷத்திலே என்னை பாடு படுத்திட்டான் பயல்!''

தூணில் சாய்ந்தபடி அசைவற்று நின்று கேட்டுக் கொண்டிருந்தாள் தாமரை. இடை இடையே அவள் கண்கள் ஓட்டுக் கூரையை நோக்கும். பிறகு சிரத்தைத் தாழ்த்திப் பார்வையைத் தரையில் பதிய வைப்பாள். பின்னர் ரேழிக்கு அப்பாலிருந்த இரண்டு சிறிய அறைகளுள் ஒன்றின் மீது சூன்யப் பார்வையைச் செலுத்துவாள். ஆனால் தம்பி கூறி வந்ததில் வார்த்தை விடாமல் அனைத்தையும் செவிகளால் விழுங்கி நெஞ்சிலிருத்திக் கொண்டாள்.

'' அந்த மனுஷன்தானாகட்டும், இப்போ எதுக்காக அந்தப் பழங் கதையையெல்லாம் அநாவசியமா இழுக்கணும்? அத்தான் நடத்திய கள்ளுக் கடைகள் முன்னே இவரு மறியல் பண்ணித் தடியடி பட்டதையும் ஜெயிலுக்குப் போனதையும் கண், காது, மூக்கு வைச்சுப் பிரமாதப்படுத்திச் சொல்லிக்கிட்டாத்தான் வோட்டுக் கிடைக்குமா? வேறே வழியொண்ணும் தோணலையா அவருக்கு?'' என்று அலுப்புடன் கூறினார் முருகேசன்.

''செத்துப் போனவருடைய பேரை எதுக்குச் சந்தியிலே இழுத்துச் சிரமப் படுத்தறாங்க ?'' என்றாள் தாமரை நாத் தழுதழுக்க.

''அதுதானே எனக்குப் புரியலே. அவரும் புறப்பட்டுப் போயாச்சு ; கள்ளுக்கடைங்களையும் சட்டப்படியே 'டோரா' தூக்கியாச்சு. ஆனாலும் 'கள்ளுக்கடைக் கண்ணுச்சாமி'ங்கிற பேரு மட்டும் அத்தான் நினைவோடே இன்னைக்கும் ஒட்டிக்கிட்டிருக்குது'' என்று விசனத்துடன் கூறினார் முருகேசன்.

''அந்த மனுசனுக்கு அதையெல்லாம் இப்போ ஞாபகப்படுத்தினது இந்தத் தறுதலைப்பிள்ளை நடந்துக்கிட்டவிதம்தானே?'' என்றாள் தாமரை.

'திடும்'மென்று அவள் துயரம் மகன் மீது ஆத்திரமாக மாறியது. பக்கத்திலிருந்த மகனின் தலை மயிரைக் கொத்தாகப் பிடித்திழுத்து உலுக்கினாள். ஆட்டுக் கல்லில் மாவரைக்கச் சுழலும் குழவி போல் தங்கப்பனின் தலை சுழன்றது. ''ஏண்டா ! இங்கே சோத்துக்கு வழியில்லேன்னு யானை மேலே உட்கார்ந்து பாட்டுப் பாடிப் பிச்சை எடுத்தியா? தூ!'' என்று இரைந்தாள்.

அம்மாவின் சொல்லுக்குச் சாதாரணமாக அடங்கிப் போய் விடுகிற பிள்ளைதான் தங்கப்பன். ஆனால் இன்று என்னமோ பொறுமை இழந்தான். கழுத்துக்கு ஏற்பட்ட வேதனையையும் மீறி அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. காலையிலிருந்து பல் வேறுபட்ட உணர்ச்சிகளை மாறி மாறி அநுபவித்துத் துவண்டிருந்த மனம், தாயாரிடம் அன்பையும், ஆதரவையும், ஆறுதலையும் எதிர்பார்த்து வந்த உள்ளம் ஏமாற்றம் அடைந்ததில் சீறிப் பாய்ந்தது. தாயாரின் இந்தச் சுடு சொற்களைக் கேட்டு உசுப்பிவிடப் பட்ட நாகம் போல் நெளிந்து தன்னை விடுவித்துக் கொண்டு நிமிர்ந்தான் தங்கப்பன்.

''நான் ஏன் பிச்சை எடுக்கிறேன் ? செய்த வேலைக்குக் கூலி கொடுத்தாங்க. நியாயமா சம்பாதிச்ச துட்டுத்தானே? நான் என்ன கள்ளுக் கடை வைச்சு ஊரார் சொத்தையெல்லாமா கரைச்சுக் குடிச்சுட்டேன்?''

தங்கப்பன் என்ன சொல்கிறான் என்பது தங்கப்பன் உள்பட அங்கிருந்த அனைவருக்குமே நன்கு புரிந்தது. ஆனால் அம்மூவரின் மனங்களுமே கேட்டதை நம்ப மறுத்தன சில விநாடிகளுக்கு. 'தங்கப்பன்தானா பேசுகிறான் ? அவனுக்கு இத்தனை துணிச்சல் எங்கிருந்து வந்தது?'

'நான்தானா பேசினேன்? எனக்கு இத்தனை அசட்டுத் தைரியம் எங்கிருந்து வந்தது?' மூவருமே திக்பிரமை பிடித்தது போல் நின்றார்கள்.

சிறிது சிறிதாக, கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய பிரமை விலகியது. தான் கூறிய சொற்களின் அதிபயங்கரத் தன்மையை நன்கு உணர்ந்துவிட்டிருந்த தங்கப்பன் தன் தாயாரின் கண்கள் வெந்தணலாகக் கனன்று சிவப்பதையும் விழிகள் வெறுப்பை உமிழ்ந்து தன்னை உற்று நோக்குவதையும் பற்களை அவள் நறநற வென்ற சத்தத்துடன் அரைத்துக் கடிப்பதையும் கண்டான்.

மெல்லப் பின்நோக்கி அடியெடுத்து வைத்து நகர்ந்தவாறே அவனைப் பீதியுடன் பார்த்தான். ''இல்லேம்மா ! கோபத்திலே தெரியாமெ சொல்லிட்டேன்'' என்று நாக்குளறக் கூறினான்.

மன்னிக்கும்படி கெஞ்சிய அவன் குரல் அவனைத் தடுத்து நிறுத்துவதில் வெற்றி காண முடியவில்லை. உழைப்புக்கு அஞ்சாத கரங்கள் தாமரையுடையவை: காய்ச்சிப் போய் உணர்ச்சி குன்றிய விரல்கள். தடியெடுத்து அடித்தால் தடிக்கு வலி தெரியுமா? தாமரைக்கும் தனது வெறியின் உக்கிரம் புலப்படவில்லை.

பமர் பமரென்று தங்கப்பனின் கன்னத்திலும் முதுகிலும் மாறி மாறி அடியும் குத்துக்களுமாய் விழுந்தன. வெஞ்சினத் திரையிட்டிருந்த அவள் கண்களுக்கு அவன் உடல் வேதனை தாளாமல் ஒடிந்து துவண்டு ஒடுங்குவது தெரியவில்லை: 'நான் என்ன கள்ளுக்கடை வைச்சு ஊரார் சொத்தையெல்லாமா கரைச்சுக் குடிச்சுட்டேன்?' என்ற வார்த்தைகளே மீண்டும் மீண்டும் அலை அலையாக எதிரொலித்துக் கொண்டிருந்த செவிகளுக்குத் தங்கப்பன் கதறித் துடித்துக் கதறியது எட்டவில்லை.

தாம் உட்கார்ந்திருந்த சாய்வு நாற்காலியிலிருந்து அவசரம் அவசரமாக எழுந்திருக்கப் போன முருகேசன் அந்தப் பரபரப்பு காரணமாகவே தடுமாறி விழுந்தார். மறுபடியும் தம்மைச் சமாளித்துக் கொண்டு அவர் எழுந்து வருவதற்கு முன் தங்கப்பனை உயிருடன் பார்ப்போமா என்றே அவருக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது. பிழிந்துப் போட்ட நார் போல முற்றத்தில் விழுந்து கிடந்தான் அவன்.

''உன்னை என்ன பிசாசு பிடிச்சுக்கிச்சா?'' என்று கத்தியபடியே தமக்கையை அப்பால் இழுத்துத் தள்ளினார் அவர். மேல் துண்டை எடுத்து ஒரு தூண் ஓரத்திலிருந்த பானைத் தண்ணீரில் நனைத்தார். தரையில் உட்கார்ந்து தங்கப்பனை மடியில் எடுத்துப் போட்டுக் கொண்டார். துண்டைப் பிழிந்தார், அவன் முகத்துக்கு நேராக. பிறகு கழுத்திலும் கன்னத்திலும் வழிந்த நீரை ஒற்றி எடுத்தார்.

ஒதுக்கித் தள்ளப்பட்ட தாமரைக்குச் சுயநினைவு திரும்பியது. ஒரே பாய்ச்சலாக ஓடி வந்து, தம்பியின் எதிரே அமர்ந்தாள். ''இங்கே கொடு, என் பிள்ளையை!'' என்று கரகரத்த குரலில் கண்ணீர் மல்கக் கூறித் தங்கப்பனை வாரி எடுத்து நெஞ்சோடு சேர்த்துக் கட்டி அணைத்துக் கொண்டு கேசத்தை வருடினாள்.

''பெத்த பிள்ளைன்னு அடையாளம் தெரியுதா? அதிசயம்தான்!'' என்றார் முருகேசன்.

தங்கப்பன் மயக்கம் தெளிந்து மெல்லக் கண் விழித்தான். அவன் அப்போதிருந்த நிலை வலியால் வாடிய உடலுக்கு இதமாக இருந்தது. அந்தச் சுகானுபவத்தை இழக்க விரும்பாமல் மீண்டும் இமைகளை மூடிக் கொண்டு தூங்குவது போலத் தாயின் மடியில் படுத்திருந்தான்.

அத்தியாயம் 8

தங்கப்பனின் திகைப்பு

முதல் நாள் ஏதொன்றும் விசேஷமாக நடக்காதது போல் காலையில் தினப்படி காரியங்களைச் செய்து கொண்டு போனான் தங்கப்பன். எருமை மாட்டுக்கும் கன்றுக்கும் வைக்கோல் பிரியை உதிர்த்துப் போட்டான். கிணற்றடியில் தண்ணீர் இழுத்து இரண்டு வாளிகளை நிரப்பினான்; துணி தோய்த்து உலர்த்தினான்; குளித்தான்; சாலையிலிருந்த குழாயடியில் சமையலுக்கு இரண்டு குடம் தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்து தவலையிலும் பானையிலும் கொட்டினான். எதிர்க் கோடியிலிருந்த தாசில்தார் வீட்டுக்கு ஆழாக்குப் பால் கொண்டு போய்க் கொடுத்து விட்டுத் திரும்பினான். வழக்கம்போல் தானாகவே தட்டை எடுத்து வைத்துக் கொண்டு பழைய சோற்றையும் தயிரையும் அதில் கலந்து உண்டான். தட்டைக் கழுவி வைத்து விட்டுப் பள்ளிக்குக் கிளம்பும்போதுதான் அவனுக்குப் புத்தகப் பை நண்பனிடமே தங்கி விட்டது நினைவு வந்தது.

வகுப்பில் அவனைச் சந்திக்கும் போது வாங்கிக் கொள்ளலாம்தான் என்றாலும் தாயாருக்கு அதைப் பற்றித் தெரிந்து விடக் கூடாதே என்ற கவலை அவனை ஆட்கொண்டது. அதனால் முற்றத்திலிருந்தபடியே, ''ஸ்கூலுக்குப் போய்ட்டு வரேம்மா!'' என்று கூவினான்.

''இங்கே வா!'' என்று அவள் அழைத்த அந்தக் குரலில் அதட்டல்.



"உங்க மிஸஸ் கார் ஓட்டக் கத்துக்கிட்டதை இன்றைய பேப்பர்லே பார்த்துத்தான் தெரிஞ்சுக்கிட்டேன்!"

உருட்டல், மிரட்டல் ஏதுமில்லை. என்றாலும் தயக்கத்துடனேதான் எட்டிப் பார்த்தான் தங்கப்பன். "அங்கே இங்கேன்னு ஊர் சுற்றிக்கிட்டுத் திரியாதே! மணி அடிச்சதும் நேரா வீட்டுக்கு வந்து சேரணும்!" கோபமில்லாமல், ஆனால் அழுத்தம் திருத்தமாய்த் தாயார் கூறியதைக் கேட்டுத் தலையாட்டி விட்டு விரைந்தான் அவன்.

தன் அம்மாவின் சுபாவம் அவனுக்குத் தெரிந்த ஒன்றுதான். கண்டிக்கும் போது கண்டிப்பாள். அன்பு காட்டும் போது அபரிமிதமாகச் சொரிவாள். அடித்த கையோடு கட்டி அணைத்து, "அழாதேடா, ராஜா!" என்று கூறுகிற வழக்கம் அவளுக்கு இல்லை. அப்படிச் செய்தால் மகன் கெட்டுக் குட்டிச் சுவராகி விடுவான் என்று அவளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. நேற்றுக்கூட அவன் தூங்குவது போல் பாசாங்கு செய்திருக்க வில்லையானால் அவள் அவனைத் தூக்கி நிறுத்தி, "போடா! போய்ப் பாடத்தைப் படி!" என்றிருப்பாள், தாட்சிண்யமின்றி!

"ஆனாலும் இத்தனை கண்டிப்பும் கறாரும் உனக்கு உதவாது, அக்கா! உனக்கு விஷயம் தெரிஞ்சிருக்கணும்னு சொன்னேன். இப்படி நீ பத்திரகாளியாக மாறுவேன்னு தெரிஞ்சிருந்தால் வாயையே திறந்திருக்க மாட்டேன்" என்றார் முருகேசன்.

தாயின் நெஞ்சு விம்முவதையும் ஒரு சொட்டுக் கண்ணீர் தன் கன்னத்தில் விழுவதையும் அப்போது உணர்ந்தான் தங்கப்பன். கைநீட்டி அவள் கண்ணைத் துடைக்க வேண்டும் என்று எழுந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு அழுத்தலாகப் படுத்திருந்தான்.

"நெருப்புன்னா வாய் வெந்துடுமா?" என்று கேட்டார் முருகேசன். "உன் புருசனுடைய கள்ளுக் கடைக்கு முன்னால் மறியல் பண்ணின போது போலீஸ்காரங்க கொடுத்த தடியடிகூடத் தீனதயாளு மேலே இத்தனை பலமா விழுந்திருக்காது. கேட்டார் பேச்சைக் கேட்டு ஏதோ தெரியாத்தனமாகச் சொல்லிட்டான். அதுக்காக இப்படியா அடிக்க நொறுக்குவே?"

"ஊரிலேதான் நாலு பேர்கள் நாலு விதமா பேசினாங்கன்னு இவனுக்குச் சுயமாப் புத்தி வேணும்? பின்னே எதுக்குத்தான் படிக்க வைக்கிறது?" என்று துக்கம் தொண்டையை அடைக்க வினவினாள் தாமரை. "இந்த வியாபாரம் வேணும், வேணாமின்னு அவர் கிட்டேதான் எத்தனை தடவை மன்றாடினேன், கேட்டாரா? அதுக்குப் பலன் என்ன? பெத்த மவனே இன்னைக்கு அவரைப் பற்றி இளக்காரமாப் பேசறான்!"

முருகேசன் அந்த விஷயத்துக்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைக்க விரும்பியவர் போல் மௌனமானார். சிறிது நேரத்துக்கெல்லாம், "சரி, பயலுக்குப் பாயை விரிச்சிட்டு நான் வீட்டுக்குக் கிளம்பறேன்" என்று எழுந்தார்.

அவர் சென்ற பிறகு காற்றாட முற்றத்திலேயே தங்கப்பனைப் படுக்க வைத்தாள் தாமரை. துப்பட்டாவை இழுத்துக் கழுத்து வரை போர்த்தி விட்டு அப்பால் நகர்ந்தாள். அப்புறம் நீண்ட நேரம் வரை சுவாமி படங்களை வைத்திருக்கும் அறையிலிருந்து அவளது அழுகைச் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. அது எப்போது ஓய்ந்ததோ தங்கப்பனுக்குத் தெரியாது. இரவு இடையில் ஒரு முறை அவன் ஏதோ சொப்பனம் கண்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்ட போது, எப்போதும் தன்னைத் தனியே விட்டு எட்டப் படுக்கும் அன்னை, இன்று தன் அருகிலேயே புடவைத் தலைப்பை விரித்துப் படுத்திருப்பதையும் தன் கரத்தை அவள் அவளுடைய கன்னத்தோடு சேர்த்து வைத்துப் பிடித்துக் கொண்டிருப்பதையும் நிலவொளியில் கண்டான். தனது உள்ளங்கை முழுவதும் அவள் கண்ணீர் பரவி நனைத்திருப்பதையும் உணர்ந்தான். தான் அசைந்தால் அவள் தூக்கம் கலைந்து எழுந்து அப்பால் போய் விடுவாளோ என்ற சந்தேகம் அவனுக்கு. அமைதியாகக் கண்களை மூடிக் கொண்டான்.

இடைவேளையின் போது தங்கப்பன் தான் வழக்கமாக விளையாடுகிற மறைவிடத்துக்குச் சென்றான். ஆனால் அங்கு 'பாஸ்கெட் பால்' ஆடுவது


இலவசம்!
கவர்ச்சியான
எவர்சில்வர்
டீஸ்பூன்
OVOMALT
1965 மே 1-ம் தேதி முதல் நீங்கள் வாங்கும் ஒவ்வொரு புதிய, சத்து நிறைந்த, கிரானுலர்
ஓவோமால்ட்
டின்னுடன் ஓர் எவர்சில்வர் டீஸ்பூன் இலவசமாக அளிக்கப்படுகிறது. தன்னிகரற்ற ஓவோமால்ட் உணவு பானத்தை அருந்தி, இக் கவர்ச்சி மிகு வெகுமதியையும் பெறுங்கள்.
தயாரிப்பாளர்கள்: ஃபுட்ஸ் ஃபாட்ஸ் & பெர்டிலைஸர்ஸ் பிரைவேட் லிமிடெட்
67, கிடங்கு தெரு, சென்னை-1.
தணுகு ரோடு, தாடேபள்ளிகூடம் A.P.
• ஸ்டாக்குகள் உள்ளவரை மட்டும்தான் இத்திட்டம் அமுலிலிருக்கும்
Ovomalt
EP. 277-9

அவன் முதல் நோக்கமல்ல. 'ஒரு வேளை மீண்டும் அந்த உஷாவை அங்கே சந்திக்க முடியுமானால் பார்த்துச் சொல்லிவிட வேண்டும், அவளும் அவளைச் சேர்ந்தவர்களும் பெரிய கஜப் புளுகர்கள் என்று!' தன் அத்தையின் கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக 'இவன்தான் பந்தை இந்தப் பக்கம் போட்டு விட்டு எடுத்துத் தரச் சொன்னான்' என்று உஷா சிறிதும் தயக்கமின்றித் தைரியமாகப் பொய் சொன்னதை அவன் மறக்கவில்லை. 'ஊராரின் சொத்தைக் கரைச்சுக் குடிச்ச குடும்பம்' என்று உஷாவின் அத்தை சொன்னதும் பொய்தான்! இல்லையானால் தன் தாயார் அத்தனை ஆத்திரம் கொண்டு தன்னை அடித்து நொறுக்கியிருப்பாளா? அப்படியானால் நேற்று சாயங்காலம் தினதயாளு மேடை ஏறிப் பேசினதெல்லாமும் உண்மையாக இருக்க முடியாதுதான்!'

தாபத்துக்கு இடமளித்த இத்தகைய நினைவுகளுடன் உஷாவைக் கண்டு பேச வேண்டும் என்கிற ஆர்வத்தைத் தூண்டும் எண்ணங்களும் தங்கப்பனின் மனத்தில் ஒரு பக்கம் கிளர்ந்தெழத்தான் செய்தன. சென்னைப் பட்டணத்துக்கு அடிக்கடி போய் வந்திருக்கும் அவளிடம் மியூஸியம், பீச், லைட் ஹவுஸ் போன்ற எல்லா விஷயங்களைப் பற்றியும் கேட்டறிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. பந்தை எடுத்து அவன் விளையாடத் தொடங்கிய சற்று நேரத்துக்கெல்லாம் • "ஏய்; தங்கப்பா!" என்ற இனிமை சொட்டும் அதிகாரக் குரல் கேட்டது.

மிடுக்குடன் தலையை ஒடித்து அவளை நோக்கினான் தங்கப்பன். அவள் குரலில் இருந்த கடுமை முகத்தில் பிரதிபலிக்கவில்லை. நட்புரிமையுடன் கூடிய சிரிப்பு தவழ்ந்தது சிறுமியின் முகத்தில். அத்துடன் பெருமிதமும் மிளிர்ந்தது. அவன் உதவியின்றித் தானாகவே எப்படியோ மதில்மீது ஏறி அமர்ந்திருந்தாள் அவள்.

"இங்கேயிருந்து அப்படியே இந்தப் பக்கம் குதிச்சுடட்டா?" என்று கேட்டுப் பயமுறுத்தினாள் அவனை.

"வேண்டாம், கால் ஒடிஞ்சுடும்!" என்று பதறினான் அவன். "வேணும்னா மரக் கிளை வழியா மெள்ள இறக்கி விடறேன். பந்து விளையாடணும்னு ஆசையா? ஆனால் இது 'பாய்ஸ் ஸ்கூல்' ஆச்சே! கோவிச்சுக்குவாங்களே, நீ இங்கே வந்தால்?"

"நான் ஒண்ணும் உன்னோட விளையாட வரமாட்டேன்" என்று கூறித் தலையசைத்தாள் உஷா.

'நறுக்'கென்று தங்கப்பனின் காலில் ஒரு முள் ஏறியது. அதைப் பிடுங்கி எறிந்து கொண்டே கேட்டான்: "ஏன்? நல்ல பட்டுச் சொக்காய் போட்டிருக்காங்க. அது அழுக்காகப் போய்விடும் என்றா?"

"அதெல்லாம் இல்லே; சொக்காய் அழுக்கானா கோவிச்சுக்க மாட்டாங்க. வேறெ சொக்காய் போட்டு விடுவாங்க. உன்னோட விளையாடினால் தான் திட்டுவாங்க!"

"ஏன்?" என்று கேட்டான் தங்கப்பன் திகைப்புடன்.

"ஏன்னா, உன் அப்பா பல பேர் குடியைக் கெடுத்தவர்; என் அப்பா ஜெயிலுக்குப் போகவும் உன் அப்பா தான் காரணமாயிருந்தார்! அதனால் தான் நான் உன்னோடு விளையாட மாட்டேன்!" என்றாள் குழந்தை உஷா.

"பொய், பொய்! நீ பொய் பேசறாப் போலவே, உன் அத்தையும் அப்பாவும்கூட ரொம்ப ரொம்பப் பொய் பேசறாங்க. எனக்குத் தெரியும் உங்க கஜப் புளுகெல்லாம்!"

"பொய்யுமில்லே; ஒண்ணுமில்லே; நிசம்மாத்தான். என் அப்பாவுக்குக் கூட நீ ஏதோ உதவி செய்திருக்கிறயாம் நேத்றைக்கு. ஆனால் அத்தைதான் சொல்றாள், 'போக்கிரிப் பசங்களுடன் பேசாதே' என்று. இந்தப் பள்ளிக்கூடம் கூட ஏழைங்க படிக்கிறதாம். அதனாலே என்னை டவுனிலே 'கான்வென்டிலே' சேர்க்கப்போறாங்க!"

"நான் ஒண்ணும் போக்கிரியில்லை. இன்னொரு தரம் அப்படிப் பேசினால் கன்னம் இரண்டும் வீங்கிடும், பத்திரம்!" என்று சீறினான் தங்கப்பன்.

உஷா அதற்கு அஞ்சியவளாகத் தெரியவில்லை. "போக்கிரி இல்லேன்னா வீட்டுக்குத் தெரியாமே மீட்டிங்கிக்கு வந்துட்டு ஏன் அடி வாங்கிக்கிட்டே?" என்றாள்.

சிறு ரோஜா மொட்டுப் போன்ற தன் உதடுகளைக் கோணி அழகு காண்பித்து விட்டு மறுபுறத்தில் இறங்கி, மறைந்து போனாள்.

தங்கப்பனின் மாமா அவன் கன்னங்களைத் தட்டியதைப் பார்த்து விட்டுப் பேசினாள் உஷா. தங்கப்பனை தன் தாயார் தன்னை அடித்தது இவளுக்கு எப்படித் தெரிந்தது என்று குழம்பியவனாக வகுப்பறையை நோக்கி நகர்ந்தான்.

(தொடரும்)

ராம்தீர்த் பிரஹ்மி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)



கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கரு நிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்குக் குளிர்ச்சி யளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதி யான நித்திரையை அளிக்கிறது.

யோகாசனப் படம்


எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்யமாக வாழ்வீர்கள்

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR, BOMBAY-14

மதராஸ் டிப்போ: 25, நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்–3



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்காரச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414. மதருஸ்-5

தந்தி: 'EVERMANS' போன்: 85834

சேரக் கடைசி தேதி 6-5-1965 ... முதல் ஏலத் தேதி 8-5-1965

25 மாதங்கள்	மாதாந்திரச் சீட்டுகள் (2-வது சனிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

40 மாதங்கள் நீண்டகால ஏலச் சீட்டுகள் 40 அங்கத்தினர்கள்

ஏலத் தேதி: 23-6-1965 (4-வது ஞாயிற்றுக்கிழமை)

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 500/-	ரூ. 20,000/-
B	ரூ. 250/-	ரூ. 10,000/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப் படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது. (போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

இதர கிளைகள்: புது டெல்லி ❁ பம்பாய் ❁ பெங்களூர் ❁ கல்கத்தா


எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

குதித்த கோபாலன்




பாப்பா மலர்


சாமா




"கோபாலன் இப்படித் திமிர்ந்து சுருண்டு படுத்து விட்டானே டாக்டர், உடம்புக்கு ஒன்றுமில்லையே?" என்றாள் தாயார்.




டாக்டர் பலத்த யோசனையுடன் குறுக்கும் நெடுக்கும் நடக்கலானார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராக......




"இன்னும் இரண்டு நாளைக்கு அவன் பள்ளிக்கூடம் போக வேண்டாம்!" என்றார். டாக்டர் அப்படிச் சொன்னதும்.....



படுத்துக் கிடந்த கோபாலன் உடனே குதித்து எழுந்து, 'சபாஷ்! பலே பேஷ்!' என்று ஆரவாரம் செய்தான்.



அப்படிக் குதித்த கோபாலன் தவறித் தொபுகடீரென்று கீழே விழுந்ததினால் அவனுக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.



டாக்டர் ஓடி வந்து காலில் பெரிய கட்டுக் கட்டி, "இன்னும் பத்து நாட்கள் அவன் பள்ளிக்கூடம் போகவேண்டாம்!" என்றார்.

சித்திரக் களஞ்சியம்



''இன்னும் அவள் உன்னை நேசிக்கிறாள் என்று நினைக்கிறாய்?''

''ஆமாம்!''

''என்ன சான்று?''

''நான் அவளுக்கு எழுதிய காதற் கடிதங்கள் எல்லாவற்றையும் திருப்பி அனுப்பிவிட்டாள். ஆனால் நான் வாங்கிக் கொடுத்த நகைகளை மட்டும் வைத்துக் கொண்டிருக்கிறாள், எனக்கே திருப்பிவிடாமல்.''

''என் காருக்கும் பெயிண்ட் அடிக்க என்ன கேட்பீர்கள் ?''

''மணிக்கு எட்டு ரூபாய்!''

''என்ன? எட்டு ரூபாயா? மைக்கேல் மணிக்கு இத்தனை வாங்குவதில்லையே!''

''அது என்னவோ சார்! அப்படிக் குறைவாக வாங்கு பவன் எங்கள் யூனியனைச் சேர்ந்தவனாக இருக்க முடியாது.''





''மூணு லட்சம் ரூபாய் செலவிலே தஞ்சை ராஜ கோபுரத் திருப்பணி நடக்கப் போறதாமே?''

''அந்தக் கோபுரத் திருப்பணி முடிந்தாலும் இந்தக் கோபுரத் திருப் பணி முடியாது போலிருக்கே!''


போலீசில் சேர ஒரு வாலிபன் வந்தான். அவனை அதிகாரிகள் பரிசோதித்தனர்.


''போலீஸ் காரில் நீமட்டும் போகிறாய். உன் கையில் துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் இருக்கின்றன. ஒரு கொள்ளைக் கோஷ்டியினர் வேறு ஒரு காரில் உன்னைத் துரத்திக் கொண்டு வருகிறார்கள். நீ போகும் பாதை ஜனசஞ்சாரமற்ற பாதை. அறுபது மைல் வேகத்தில் அவர்கள் உன்னைப் பின்தொடருகிறார்கள் என்று வைத்துக்கொள். அப்போது நீ என்ன செய்வாய்?'' என்று ஓர் அதிகாரி கேட்டார்.


வாலிபன் முறுவலித்தான், 'இதென்ன பெரிய கேள்வி?' என்று! ''அவர்கள் அறுபதானால் நான் எண்பது; அவர்கள் எண்பதானால் நான் நூறு என்று பறக்க மாட்டேனா?'' என்று பதில் அளித்தான்.



ஸொஜ்ஜி. பஜ்ஜி. ஸஜ்ஜி








"அடுத்த வீட்டுக்காரியை உனக்குப் பழக்கம் உண்டா? நீ அவளோடு பேசுவதுண்டா?"

"பழக்கமுண்டு. அதனால்தான் பேசுவதில்லை!"




ஜான்: என் மனைவி என்னோடு ஆறு மாதமாகப் பேசவில்லை. அதனால் நான் அவளை விவாகரத்து செய்யப் போகிறேன்.

விக்டர்: யோசியாமல் அசட்டுத்தனம் செய்யாதே. அவளைப் போல் இன்னொருத்தி கிடைக்க மாட்டாள். பேசும் மனைவி கிடைத்து விட்டால் வாழ்நாள் முழுதும் உனக்குக் கஷ்டம் தான்!



பிகே





மாலதியின் அறைக்குக் குமார் சென்றபோது...
அவள் எங்கே? 4
ஐயோ, மாலதி!
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி.
எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அப்படியே அவளை விட்டு விட்டுப் போகவும் மனமில்லை. போலீசுக்குத் தெரிவிப்பதானால் தொல்லைகளுக்கு உள்ளாக வேண்டி இருக்கும். ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் குழம்பிப் போனபோதுதான் உங்கள் நினைவு வந்தது.
நீ அந்தப் பெண்ணின் அறைக்குப் போனதை யாராவது பார்த்தார்களா?
பார்த்திருக்க வேண்டாம். அப்போது இரவு ஒன்பது மணிதானே.
மாலதியை இங்கு கொண்டு வந்ததை யாராவது பார்த்தார்களா?
இல்லை. அப்போது மணி பத்தரைக்கு மேலாகிவிட்டதால் ஊரடங்கி விட்டது. ஒருவர் கண்களிலும் படவில்லை.
டாக்டர் சுரேஷ் தம் மகன் குமாரை இந்தச் சிக்கலிலிருந்து விடுவிக்கும் வழிவகைகளையும், ஏதுமறியா தன் தந்தையை இந் நிலைக்கு ஆளாக்கிய அந்த மர்ம மனிதனைக் கண்டுபிடிப்பதற்கான மார்க்கங்களையும் பற்றித் தீவிரமாக விவாதித்து ஒரு முடிவுக்கு வராத நிலையில், அங்கு குமார் இல்லாததைக் கண்டு திடுக்கிட்டார்கள்.


எங்கே போய் விட்டான் இவன் இந்த நள்ளிரவில். எங்காவது போய் அங்கும் ஏதாவது தொல்லைகளில் சிக்கிக் கொண்டு நிற்கப் போகிறானே.
கவலைப் படாதீர்கள் டாக்டர். குமார் இங்கே தான் எங்காவது இருப்பார்.
அவன் காரைக் கூடக் காணோம் அம்மா. எங்கோ போய் விட்டான். அவனுக்குணம் எனக்குத் தெரியும். சீக்கிரமே உணர்ச்சி வசப்படக் கூடிய முட்டாள் அவன்.
மணி ஒன்றாகப் போகிறது டாக்டர். இங்கேயே படுத்துத் தூங்கி விடுங்க காலையில் போகலாம். ப்ளீஸ்!
குமார் எனக்கு ஒரே மகன் அம்மா. தாயை இழந்த அவனை எத்தனையோ செல்லமாக வளர்த்தேன். என் செல்லமே அவனைப் பிடிவாதக்காரனாக்கி விட்டது. அவனைப்பற்றி நான் கண்டு கொண்டிருக்கும் கனவுகள் எத்தனையோ. அத்தனையும்...
வீணாக மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள் டாக்டர். உங்கள் மகனுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது.
ம்... அதைத்தான் நானும் வேண்டுகிறேன். சரி, போய்ப் படுத்துக் கொள்ளம்மா.
இந்த நள்ளிரவில் குமார் எங்கே போயிருப்பான்? டாக்டர் கூறுவது போலக் கொஞ்சம் அவசரக்காரன் தான் போலிருக்கிறது.
ரேணுகா கண்ணயர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் படுக்கை அருகிலுள்ள டெலிபோன் கிணுகிணுக்கிறது.
ஹலோ! யாரது?... ஆமாம், ரேணுகா தான்... யார்?... நீ... நீங்களா? எங்கிருந்து பேசுகிறீர்கள்?

—தொடரும்—

நிகோ
ஜெர்மிஸைடல் சோப்
ஒரு பார்க்-டேவிஸ் தயாரிப்பு


உங்கள் சருமத்தைச் சுத்தமாகவும் ஆரோக்கியத்துடனும் வைத்துக் கொள்ள வும், பருக்கள், கருநிறப் படைகள், வேர்க்குரு மற்றும் இதர சாதாரண சரும நோய்களின்றி இருக்கவும் உதவுகிறது. தவறாமல் தலைமயிரைச் சுத்தம் செய்ய உபயோகித்து வரின், செக்கோவின் கிருமிநாசக நுரை வழுக்கை ஏற்படாமலிருக்க ஒரு நல்ல பாதுகாப்பாக இருக்கும். நிரூபணமான மதிப்பையுடைய கிருமிநாசக சோப்பான நிகோ உங்களுக்கு மும்மடங்கு நன்மையளிக்கிறது— சுத்தமாக்க, நோய்க்கிருமி பரவாமல் தடுக்க, பாதுகாக்க, உதவுகிறது. தினமும் உங்கள் சருமத்திற்குத் தேவையான கவனத்தைச் செலுத்துங்கள்.



தினசரி உபயோகத்திற்கான ஆதி கிருமிநாசக சோப்

NATIONAL PD 9661





1. நாதகர வித்வான் குளிக்கரை பிச்சையப்பாவுக்குத் தேசிய கலாசார கழகத்தின் ஆதரவில் நடந்த பாராட்டு விழாவில் பிரதம மந்திரி லால் பகதூர் அவர்கள் கோப்பை வழங்கிக் கௌரவிக்கிறார்.

2. மேற்கு ஜெர்மனி டெலிவிஷன் நிறுவனம் ஒன்றில் இந்தியாவுக்கான நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு வரும் குமாரி நவீன சுந்தரம்.



3. பிரபல வழக்கறிஞரும் மியூஸிக் அகாடமியின் தலைவருமான ஸ்ரீ கே.வி. கிருஷ்ணசாமி ஐயரின் சதாபிஷேகப் பாராட்டு விழா மியூஸிக் அகாடமியில் டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் அவர்களின் தலைமையில் விமரிசையாக நிகழ்ந்தது. ஸ்ரீ கே. வி. கே. அவர்களின் இல்லம் சென்று ஸ்ரீ டி. எஸ். ராஜம் அவருக்குப் பரிசு வழங்கிக்கௌரவிக்கிறார்.

கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

26. அன்னப்பேடும் இராசாளியும்

இந்திரன் தேவர்களை அழைத்துக் கொண்டு திருக்கயிலாய மலையைச் சென்றடைந்தான். முதல் வாயிலை யடைந்ததும் திருநந்தித் தேவரை வணங்கித் தன் குறைகளைக் கூறினான்.

''சிவபெருமான் சனகாதி முனிவர் நால்வருக்கும் மௌனநிலையை உணர்த்திக்கொண்டிருக்கிறார். ஆகவே, இத் தருணம் அங்கு யாரும் செல்லக் கூடாது'' என்றார் நந்தி தேவர்.

சென்ற இடமெல்லாம் தோல்வியாயிற்றே என இந்திரன் மிகுந்த வேதனை அடைந்தான். நந்தி தேவரை வணங்கிக் கூறினான்: ''எந்தையே! சூரபன்மனுக்கு அடிமை செய்து இளைத்தோம். எங்கள் குறைகளை ஈசுவரனிடம் முறையிடவே வந்தோம். எங்கள் வேண்டுகோளை இறையவர் செவிமடுத்தாராகில் அவரது கருணைப் பண்புக் கேற்ப சூரனை உடனே சம்ஹரிக்க வேண்டியிருக்கும். அவ்வாறு அவர் சூரபன்மனை அழித்தால் அவனுக்கு முன்பு தாமே கொடுத்த வரத்தையும் அழித்ததாகும். சத்திய ஸ்வரூபமான சர்வேசுவரனே சொல் தவறினார் என்று ஏற்படும். மாறாக நாங்கள் விண்ணப்பம் விடுத்த பின்னும் எங்கள் அல்லலை அகற்றாவிட்டாலோ அருள் வள்ளல் என்று இறைவர் பெற்றுள்ள புகழுக்கு இழுக்கு உண்டாகும். ஆதலால் தான் நாங்கள் வேண்டுகோள் விடுத்து அவரை இக்கட்டில் ஆழ்த்தக் கூடாது என்றே மோன நிலையில் வீற்றிருக்கிறாரோ?'' என்று புலம்பினான் இந்திரன்.



இறைவனின் லீலையை யாரே அறிய வல்லவர்? காவிரியைத் தருவித்துக் கங்காதரனுக்கு அபிஷேகித்த இந்திரனும் ஐயனுடைய திருவிளையாடலைப் புரிந்துகொள்ளும் அறிவு பெறவில்லை. இறைவனின் செயலில் ஒன்றுக்கொன்று முரணான இழைகள் ஒருபோதும் மோதிக்கொள்ள மாட்டா. கோடானு கோடி அண்டங்களை ஆண்டவன் அம்மானையாக்கி ஆடும்போதும் அவை சிறிதேனும் கதி தவறாமல், ஒன்றோடொன்று மோதாமல், உரசாமல் சீராகச் செல்வதே போல், இறைவனின் திரு உள்ளத்தில் உள்ள கருத்துக்கள் அனந்தகோடியாயினும் அவை முரணின்றியே செயல்படும். சூரனுக்குத் தந்த வரமும், அமரருக்குப் புரிய வேண்டிய அருளும் ஒன்றுக்கொன்று முரணாகுமோ எனத் தேவர்கோன் திகைத்தான். ஆயினும் ஒன்று மறந்தான். கருமப் பயன் முடிவுறக் காலம் என்ற பெயரில் இறைவன் அமைத்துள்ள விந்தைப் பொருள், தான் நினைத்த முரண்களைத் தீர்க்குமென்பதை மறந்தான். கருமப்படி, தட்சன் வேள்வியில் தேவர்கள் சிவ அபசாரம் செய்ததற்கு ஈடாக அபராதம் செலுத்த வேண்டியவர்கள்.



அதே கரும விதிப்படி, அளவற்ற தவமியற்றிய சூரன் அகிலாண்ட அதிகாரம் பெற உரிமை பெற்றவன். தேவர்களின் தீய கருமப் பயனையும், சூராதியவுணரின் நற்கருமப் பயனையும் இறைவர் ஒன்றோடொன்று இழையவிட்டார். தேவர்களுடைய தீய கரும பயன் முடியும்போதே, அசுரரின் நற்கருமப் பயனும் முடிய வேண்டுமென எண்ணம் கொண்டார். அந்த நாள் வருவதற்கு இன்னும் காலம் இருந்தது. எனவே தான் தேடி வந்த தேவருக்குத் தரிசனம் தராதிருந்தார் தயாநிதி! எல்லையற்ற துன்பமுற்ற இந்திரன் காலம் பிறக்கவில்லை என்பதை மறந்து மனமிடிந்து போனான். இமையவருடன் வெள்ளியம்பொருப்பில் ஒரு புறத்தில் காத்திருந்தான்.

ஃ ஃ ஃ

இந்திரன் திருக்கயிலை சென்ற பிறகு அவன் நினைத்துச் சென்ற காரியம் இனிது நிறைவேறும் பொருட்டு இந்திராணி சீர்காழி வனத்தில் தவம் செய்து கொண்டிருந்தாள். இந்திரன் நெடுநாட்களாகியும் திரும்பி வரவில்லை. கணவன் வராததால் தேய்பிறைச் சந்திரன்போல் தன் உடல் தேய, அழலிடைப்பட்ட மெழுகு போல் உள்ளம் உருகிக் கொண்டிருந்தாள் இந்திராணி.

இந்திராணிக்கு நேர் எதிரான ஒரு படைப்பு அசமுகி. பொறுமை, நாணம், கற்பு, ரூப சௌந்தரியம் யாவற்றிலும் இந்திராணிக்கு மறு துருவம் அசமுகி. இந்திராணி அன்னப் பேடு எனில் அசமுகியோ கோர இராசாளி.

அன்னப்பேட்டிடம் இராசாளி வந்துவிட்டது!

அசமுகி தன்னுடைய தோழி துன்முகியுடன் சூலப் படையை ஏந்திச் சுற்றி வரும்போது இந்திராணி இருக்கும் நந்தவனத்துக்குள் வந்துவிட்டான்!

தவம் செய்து கொண்டிருந்த சசிதேவியைக் கண்டதும் அரக்கருக்கே உரிய இழுக்கான எண்ணம் அசமுகிக்குத் தோன்றியது. 'என் தமையனாகிய சூரபன்மனுக்கு அஞ்சித்தான் இந்திராணி தேவருலகிலிருந்து ஓடி ஒளிந்து இங்கு தவம் செய்து கொண்டிருக்கிறாள். இவளைத் தேடிப் பிடித்து வருவதற்காகவே அண்ணன் பல ஆட்களை அனுப்பியிருக்கிறான். இப்போதோ நானே இவளைக் கண்டு பிடித்து விட்டேன். இவளும் தனியாக இருக்கிறாள்: இவளைக் கவர்ந்து கொண்டு போய் அண்ணனுக்கு அளிப்பேன்' என்று எண்ணினாள்.

இந்திராணியை அணுகினாள் அசமுகி. பூசை வேளையில் பேயாக எதிரே நின்ற அவளைக் கண்ட இந்திராணி அஞ்சி நடுங்கி எழுந்தோட முயன்றாள்.

''நில்!'' என்று அதிரக் கூறியவாறு எதிரே வந்தான் அசமுகி. அச்சத்தில் நடுங்கும் அழகு மங்கையைக் கண்டதும் அவளுக்கும் சிறிது மனம் இரங்கிற்று போலும்! ஆதரவாகப் பேசுவதே போலச் சொன்னாள்: ''இலட்சுமியும் கண்டு பொறாமைப்படத் தக்க இலட்சணவதியான நீ ஏன் உன்னுடைய இளமையை வீணாக்கித் தவம் செய்து கொண்டிருக்கிறாய்? நாட்டை இழந்து ஓடிவிட்ட இந்திரன் உனக்கேற்ற கணவன் அல்லன்; ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் தலைவனாகிய சூரபன்மனே உனக்குத் தகுந்த மணாளன். அவனும் உன்னை விரும்பித் தவம் புரிகிறான். அற்பனாகிய இந்திரனை வெறுத்து

அருமை பெருமை யுடைய என் அண்ணன் சூரபன்மனைக் கணவனாக அடைவாய். என்னோடு விரைந்து என் அண்ணன் நகருக்கு வந்து அரியணை ஏறுவாய்'' என்று கூறினாள்.

அசமுகியின் சொற்களைக் கேட்ட இந்திராணி இடியேறுண்ட மயில் போல் செயலிழந்து கலங்கி நின்றாள். பதிவிரதா தருமத்தைப் பழுதின்றிக் காத்து வரும் தன் காதுகளில் இந்த கைய கடுஞ் சொல் விழலாயிற்றே என்றெண்ணிச் செவிகளைப் பொத்திக் கொண்டாள். சிறிது போதிலேயே தேவராணிக்குரிய கம்பீரமும், கடுங் கோபமும் கொண்டு, அசமுகியை நோக்கிக் கூறினாள்: ''அடி பேதாய்! பெண் குலத்தின் பெருமையை அழிக்கவே நீ பிறந்தாய் போலும்! நிதில்லாத கற்புடைய நான் தேவர் கோமானைத் தவிர ஏனையோரைக் கனவிலும் கருதேன். என் மானத்தையும் உயிரையும் காத்துக் கொள்ள எனக்கு எங்கும் காவல் உண்டு. நீ இங்கிருந்து விரைந்து செல்லாவிடில் அழிந்து போவாய்'' என்று கூறினாள். கற்பு என்ற பெருங் காவலோடு ஐயனாரின் அருட் காவலும் இருந்ததால் அயிராணி இவ்வாறு கூறினாள்.

அசமுகி வடவைத் தீயென வெகுண்டாள். ''அறிவற்ற அமரப் பெண்ணே! நான் உன் நன்மைக்காக நல்லது சொன்னேன். அந்த நல்ல வார்த்தைகள் உன் செவிகளில் ஏறவில்லை. மூவுலகாளும் அசுரர்கோனின் உடன் பிறப்பாகிய என்னைத் தாக்கிப் பேசினாய். உன்னை இப்போதே கொன்று தின்றுவிட என்னால் முடியும். எனினும் என் அண்ணன் உன்னை விரும்புகிறான் என்பதால் உன்னைக் கொன்று புசிக்காமல் விட்டு விட்டேன். நீயாக என்னுடன் வராவிடில் நான் உன்னைப் பிடித்து இழுத்துச் செல்கிறேன், பார்!'' என்று ஆர்ப்பரித்த அரக்க இளவரசி, இந்திராணியின் திருக் கையைப் பிடித்து இயமன் உயிரை இழுப்பதுபோல் இழுத்துச் செல்ல முற்பட்டாள். பருந்து வாய்ப்பட்ட புள்ளின் பெடையைப் போலத் தவித்த இந்திராணி ஐயப்ப சுவாமியை எண்ணித் துதிக்கலானாள்.

''ஆரணக் கருத் யோர்சார்.
அடலுருந் தீரனென்று ஏத்தும்
காரணக் கடவுள் ஓலம்;
கடல்நிறத்து எந்தாய் ஓலம் :
பூரணை கிறைவா ஓலம் ;
புட்கலை கணவா ஓலம்;
வாரணந் நிறைமேற் கொண்டு
வரும்பிரான் ஓலம்'' என்றாள்

இந்திராணியின் பிரார்த்தனை ஐயனாரின் படைத் தலைவராகிய வீர மகா காளரை எட்டியது. தேவியைக் காக்கவே சாஸ்தாவால் நியமிக்கப்பட்ட மகாகாளர் தமது வடிவாளைச் சுழற்றிக்கொண்டு அங்கு விரைந்து வந்து நின்றார். இந்திராணியை நோக்கி, ''அம்மே அஞ்சாதே!'' என்று அபய ஹஸ்தம் தந்தார். அவளைப் பற்றி இழுக்கும் அசமுகியைப் பார்த்து இடி முழக்கக் குரலில் ''நில்'' என்று கட்டளை இட்டார். தன்னை அதட்டிய வீர மகா காளரை அலட்சியமாக நோக்கிய அசமுகி, ''மும்மூர்த்திகளே என்னை எதிர்த்து நிற்க மாட்டார்கள். அப்படியிருக்க நீ யார் என்னைத் தடுக்க? இந்திராணியைக் காப்பாற்றவா நீ இருக்கிறாய்? உனக்கு இந்தக் காவல் வேலையைத் தந்தது, யாரப்பனே? மூவுலகங்களிலும் ஆதிபத்தியம் செலுத்தும் என் தமையனுக்கு மேலாகக் கட்டளை இட்டது யார் சொல்!'' என்று மிடுக்காகக் கேட்டாள்.

''இதோ சொல்கிறேன் கேள். மூவுலகங்களையும் காக்கும் கரிய மேனியன்; அவரது திருநாமம் ஐயன். அவரே எனக்கு இந்தப் பணியைத் தந்துள்ளார்'' என்று கூறினார் வீர மகா காளர்.

'தாரணி முதல மூன்றந்
தலைமை புரிந்து காப்பான்;
காரணி சேர்ந்துற்றன்ன
கரியவன்; கடவுள் வெள்ளை
வாரண முடைய ஐயன்;
மற்றது பணித்தான்; என்பேர்
வீரரில் வீர னான
வீரமா காளன்' என்றான்.

வீர மகாகாளர் இந்திரனைத்தான் 'ஐயன்' என்றும் 'வெள்ளை வாரண'னென்றும் கூறினார் என்று எண்ணிய அசமுகி, ''நீயும் அற்ப இந்திரனின் ஆள்தானா?'' என்று கேட்டுத் தன் கையிலிருந்த சூலத்தை அவர் மீது எறிந்து அட்டகாசம் செய்தாள். வீர மகா காளர் அந்தச் சூலத்தைத் தமது வாளால் அநாயாசமாகத் துண்டாக்கினார். உடனே அவள் துன்முகியின் கையிலிருந்த சூலத்தை வாங்கி வீர மகாகாளரின் மார்பை நோக்கி விடுத்தாள். அதனையும் வாளினால் வெட்டி வீழ்த்தினார் மகா காளர். அசமுகி பின்வாங்கிச் சென்று மலைகளையும் மரங்களையும் பறித்து வீசிப் போர் புரிந்தாள். மகாகாளர் மலைகளை வீசிய மகா பலம் பொருந்திய அசமுகியின் கரத்தையே இலகுவில் துணித்

தார். அவளைக் காலால் உதைத்து உருட்டினார். துன்முகியின் கரத்தையும் வெட்டி வீழ்த்தினார்.

உதிர ஆறு பெருக உருண்டாள் அசமுகி. அந்த நிலையிலும் அடியுண்ட வேங்கைபோல் ஆறாச் சினம் கொண்டு ''இந்திராணியை உண்பேன்'' என்று எழுவாள்; விழுவாள்; உதட்டைக் கடிப்பாள்; துடிப்பாள்; தனக்கும் தோல்வியா என்று எண்ணிப் பெருங் குரலெடுத்து ஓலமிடுவாள். ''உலகையெல்லாம் அழிப்பேன்'' என்று சீறுவாள்.

உலகங்களை யெல்லாம் அழித்துவிட எண்ணிய அசமுகிக்கு ஆறுதல் கூறினாள் துன்முகி: ''தலைவிப் பெருமாட்டியே! வீர மகாகாளர் உங்கள் கரத்தை வெட்டியதற்காகப் பூவுலகும் பொன்னுலகும் என்ன செய்யும்? உலகங்களை எல்லாம் இதற்காக அழித்தால் அவற்றுக்குத் தலைவரான சூரபன்மாசுரருக்குக் கோபம் ஏற்படாதா? தங்கள் துயர் துடைக்கத் தமையனார் உள்ள போது தாங்கள் ஏன் பழிவாங்க முற்படவேண்டும்? தாங்கள் இப்படித் துயர்ப்படலாகாது. இறைவனையும், ஞானிகளையும் தவிர மற்ற உயிர்களுக்கு ஊழ்வினையில் உண்டாகும் விளைவு நீங்காது'' என்று தேற்றினாள்.

நீள்வருங் கண்ணுதல்
நிமலற் கேயலால்

அளியனை அடைதரும்
அறிஞர்க் கேயலால்

எனைவகையோர்க்குமெவ்
வுயிர்க்கும் ஏற்பதோர்

வினைபடும் இழிதுயர்
விட்டு நீங்குமோ?

புராணங்களைத் தந்த முனிவர்களின் பெருமையைப் பாருங்கள். எந்தப் பாத்திரத்தையும் குறித்தும் அவர்களுக்குப் பற்றுக் கிடையாது. சத்தியம் ஒன்றிடம்தான் அவர்களுக்குப் பற்று. கண்ணன் செய்கிற மாயத்தையும் ஒளிக்காது எழுதுவார் வியாசர்; கர்ணன் போன்றவர் செய்கிற தருமத்தையும் தயங்காது கூறுவார். அரக்கியின் தோழியான துன்முகி ஒரு நல்ல வார்த்தை கூறினால், அதையும் வியாசரோ, கச்சியப்பரோ மறைக்க மாட்டார்கள்.

துன்முகியின் நன்மொழி கேட்ட அசமுகி எழுந்தாள். இந்திராணியைப் பார்த்து, ''உன்னையும் உன் கணவனையும், ஏனைய தேவர்களையும் என் அண்ணனைக் கொண்டு நொடிப் பொழுதில் சிறைப்படுத்துவேன். அப்படிச் செய்யாவிடில், நான் சூரபன்மனின் தங்கையல்ல'' என்று சபதம் செய்துவிட்டு அவ்விடத்தை விட்டு நீங்கினாள்.

அப்போதைக்குத் தெளிவு பெற்றாலும், பதியின்றிக் கலைமானைப் பிரிந்த பிணை மானைப்போல மனம் பதைத்த இந்திராணி கணவன் கருதிச் சென்ற காரியம் வெற்றி பெற வேண்டும் என்று மீண்டும் தவம் செய்யலானாள்.

ஃ ஃ ஃ

சீர்காழி நந்தவனத்தில் இந்திராணிக்கு நிகழ்ந்த ஆபத்தை யெல்லாம் அறிந்த நாரத முனிவர் திருக்கயிலாய மலைக்கு விரைந்து சென்றார். சிவபெருமானைத் தரிசிப்பதற்கு உற்றசமயத்தை எதிர் நோக்கியிருந்த இந்திரனிடம் நிகழ்ச்சிகளை எடுத்துரைத்தார். அதனைக் கேள்விப்பட்ட இந்திரன் தனது விதியை நினைத்து வருந்தினான். திருநந்தித் தேவரை வணங்கி, ''அரனாரின் தரிசனத்துக்கு உற்ற சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டு நெடுங்காலம் காத்திருந்தோம். எங்கள் தீவினை காரணமாக இதுவரை நினைத்த காரியம் கைகூடவில்லை. பூவுலகம் சென்று தவம் செய்ய எங்களுக்கு விடை தர வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டான். திருநந்தித் தேவர் மனமுவந்து விடை கொடுத்தனுப்பினார்.

இறைவன் எங்குமே இருப்பவர்: அடியாரின் பாவனை முதிரா விட்டால் அவரைக் கைலாயத்திலும் காணமுடியாது: பாவனை முதிர்ந்தாலோ சீர்காழியில் என்ன, எங்குமே அவரைக் கண்டு விடலாம்.

இந்திரன் மற்ற தேவர்களோடு சீர்காழிக்கு வந்தான். அயிராணியைக் காத்து நின்ற மகாகாளரை அன்புடன் தழுவிக் கொண்டு பல இனிய மொழிகளைக் கூறி ஐயனாரிடம் அனுப்பி வைத்தான். பின்னர், தவம் செய்து கொண்டிருந்த தாரத்திடம் சென்று அவளது தாபத்தை நீக்கினான்.

சூராதியவுணர் படைகள் எந்த நொடியிலும் சீர்காழிக்கு வந்துவிடக் கூடிய ஆபத்தை இந்திராணி இந்திரனுக்கு உணர்த்தினாள். அவ்விடத்தை விட்டு நீங்குவதே முறை என இந்திரன் கண்டான். இந்திராணியையும் மற்ற தேவர்களையும் அழைத்துக் கொண்டு மேரு மலையிற் போய் மறைந்திருந்தான்.


இந்திரனேயாயினும் வேறு யாராயினும் வினைப் பயன் விடாதல்லவா?

(தொடரும்)

இன்றைய நாகரிகம்

நாகரிகம் இன்றைய நாகரிகம்





இன்றைய நாகரிகத்துக்கு ஏற்ப வீட்டை வசதியாகவும் அழகாகவும் அலங்கரிப்பதும் ஓர் அருங்கலைதான். நாலு பேர்கள் உட்காரக்கூடியதான மூன்று நாற்காலிகள் அடங்கிய சோபா செட்டைச் சிறிய அறையில் போட்டால் இருக்கிற இடத்தில் பெரும்பகுதியை அவை ஆக்கிரமித்துக் கொள்ளும். ஆனால் 'கார்னர் சோபா செட்' எனப்படும் இந்த ரக ஆசனங்கள் சுவரோரமாக அமைந்து அறையை விசாலமானதாகத் தோன்றச் செய்யும். ஏழெட்டு விருந்தாளிகள் ஒரே சமயத்தில் வந்து விட்டாலும் அமர இடவசதி அளிக்கும். சென்னை மவுண்ட் ரோடு, ஸ்பென்ஸரில் எடுக்கப்பட்ட இப்புகைப் படத்தில் ரப்பர் குஷன் வைத்த சோபாக்களைக் காண்கிறோம். 'சைட் டேபிள்'கள் புத்தக அறைகள் கொண்டவை. மேலே கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. மேஜை விளக்கு 'ஸ்புட்னிக் மாடலி'ல் அமைந்தது — இது விண்வெளி யுகமல்லவா? தடிப்பான துணியில் நல்ல டிசைன்களுடன் கண்ணுக்கினிய வர்ணத்தில் படுதாவும், மென்மையான தரை விரிப்பும் சேர்ந்து விட்டால் அறையை விட்டு வெளியேறவே மனமிராது. ஆனால் அலுவலகத்துக்குப் போய்த்தானே யாகவேண்டும்? அத்தனை சுகத்தையும் நாளெல்லாம் அனுப விக்கப் போவது நீங்கள் செல்லமாக வளர்க்கும் நாய்தான்! படம்: சந்தாமியான்

படித்துப் பாருங்கள்

கஸ்தூரி திலகம்

பாரதத்துக்குப் பெருமை சேர்ப்பவர்கள் பெண்கள்தாம் என்ற பேருண்மையைச் சீதை, சாவித்திரி, நளாயினி போன்ற எத்தனையோ மாதரசிகளின் கதைகள் நிரூபிக்கின்றன. ஆதி கவி வால்மீகி ராம கதையை இராமாயணம் என்னும் பெயர் சூட்டி இயற்றியிருந்த பொழுதிலும் சீதையின் பெருஞ் சரித்திரத்தையே சொல்லுவதாக அல்லவா அது அமைந்துள்ளது? அத்தகைய பெருமை மிகுந்த பெண் திலகங்களின் பரம்பரையிலே தோன்றியவர் கஸ்தூரிபா. எழுத்து வாசனையற்றவர். ஆனால் பண்பில் சிறந்தவர். கற்புக்கரசிகளின் வரிசையிலே திலகமாகத் திகழ்பவர். உலகத்தில் எல்லோரையும்போல் ஒரு மனிதனுகப் பிறந்து — கோபதாபங்கள்— ஆசாபாசங்கள் கொண்ட மனிதனுகப் பிறந்து — மகாத்மாவாகிவிட்ட உத்தமர் காந்தியின் மனைவி. பார்க்கப் போனால் காந்தியடிகளை மகாத்மாவாக்கிய முழுப் பெருமையும் அவரையே சாரும். அவரது அடக்கமான சுபாவமே இன்ப வேட்கையில் நாட்டம் கொண்டிருந்த கணவனைச் சாந்த மூர்த்தியாக, சத்தியத்தின் உருவமாகப் பரிணமிக்கச் செய்தது என்றால் மிகையாகாது.

கஸ்தூரிபா பண்புமிக்க பத்தினித் தெய்வமாக இருந்ததோடு, அன்னையின் அன்புக்குக் கரை காண இயலாத கடலாகவும் திகழ்ந்தார். மனிதப் பண்பும் மனத் தத்துவமும் இணைந்து அவரது அன்பின் ஆழத்தைப் புலப்படுத்தின.

பரணீதரன் இயற்றியிருக்கும் 'கஸ்தூரி திலகம்' என்னும் இந்த நூல் கற்பனைச் செறிவும் தெள்ளிய நடையும் கொண்டு, படிக்கப் படிக்கத் தெவிட்டாத முறையில் அமைந்துள்ளது. வாழ்க்கை வரலாற்றிலே நவீனத்தின் சுவையைப் புகுத்தியுள்ளார்.

ஆனால்.....

இடையிடையே காந்தியடிகளை மகாத்மாவென்று உயர்த்தியும் கஸ்தூரிபாவை மனித உள்ளம் படைத்த மாது என்றும் நினைவு படுத்திக் கொண்டே கதையை...? இல்லை, வரலாற்றைக் கொண்டு சென்றிருப்பது அவ்வளவு சுவையுடையதாகத் தோன்றவில்லை. புத்லீபாய், சம்பாரன் போன்ற பெயர்ச் சொற்கள் விஷயத்தில் ஆசிரியர், தாம் கொடுத்திருக்கும் தவறான உச்சரிப்புகளைத் தவிர்த்திருந்தால் 'கஸ்தூரி திலக'த்தின் மணம் இன்னும் கூடியிருக்கும்.

புத்தகத்தின் அமைப்பு மிக நேர்த்தியாக உள்ளது. பக்கத்துக்குப் பக்கம் புத்தகத்தின் உள்ளே இடம் பெற்றிருக்கும் வண்ணச் சித்திரங்களும், உயிர்ச் சித்திரங்களாகத் திகழ்கின்றன.

பிற பதிப்பகத்தாரும் பார்த்துப்பின்பற்ற முயல வேண்டும் என்று சொல்லக் கூடிய அளவுக்கு விகடன் பிரசுரமான 'கஸ்தூரி திலகம்' ஒரு திலகமாகத் திகழ்கிறது.

ஆசிரியர்: பரணீதரன், பிரசுரம்: ஆனந்த விகடன், சென்னை—2; விலை: 1.50.


பத்தினிக்கோட்டம்

"கல்கி"யில் வெளிவந்து தமிழ் வாசகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட ஜெகசிற்பியன் அவர்களின் பத்தினிக்கோட்டம் இப்பொழுது புத்தக வடிவில் வெளிவந்திருக்கிறது என்பதை அறிந்து நேயர்கள் பெருமகிழ்ச்சியடைவார்கள். வாரந்தோறும் படித்து வந்த போது, காலை இளம் பனித் துளியில் ஒளிரும் சின்னஞ்சிறு சூரியனைக் கண்டு மகிழ்வது போல் ஜெகசிற்பியனின் எழுத்துத் திறமையின் சுருக்க உருவத்தைக் கண்டு மகிழ்ந்து வந்தார்கள். வான மண்டலத்தில் தகதகவென்று பிரகாசித்துக்கொண்டு பவனி வரும் சூரியனையே பார்க்கும்போது, கண் கூசிப் பிரமிப்பு ஏற்படுகிறதல்லவா? அத்தகையதோர் உணர்ச்சிதான் இரண்டு புத்தகங்களாக வெளிவந்திருக்கும் ஆயிரம் பக்கங்கள் கொண்ட பத்தினிக்கோட்டத்தை முழுமையாகப் படிக்கும்போது ஏற்படுகிறது.

சரித்திரத்தில் கிடைத்த ஒரு சிறு இடைவெளியை அவர் கற்பனைத் திறனால் எப்படிச் சம்பவங்களைப் பின்னிப் பிணைத்து நிரப்புகிறார் என்பதைப் பார்க்கும்போதும் சரி, அந்தக் கால சமண சைவ சமய வாழ்க்கை முறைகளையும் அனுஷ்டானங்களையும் ஆசிரியர் எவ்வளவு நுட்பமாக ஆராய்ந்து அறிந்து வெளியிடுகிறார் என்பதைப் பார்க்கும் போதும் சரி, பாத்திரங்களின் குணசித்திரத்தை எவ்வளவு துல்லியமாக வரைந்து காட்டுகிறார்என்பதைப் பார்க்கும்போதும்சரி, எல்லாவற்றையும்விட உணர்ச்சியும் ஆழ்ந்த கருத்துச் செறிவும் கொண்ட தமிழ்நடையை அவர் கையாளும் லாகவத்தைப் பார்க்கும் போதும்சரி, வியப்பும்பிரமிப்பும்கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் செய்யத் தோன்றுவதில்லை. பரமேசுவரவர்மன், உத்தமசீலி, வில்வேலி, பரவாதிமல்லர், இளங்கோப்பிச்சி இவர்கள் எல்லாம் பத்தினிக்கோட்டத்தை ஒரு முறை படித்தால் போதும் நமது நினைவில் நீங்காத இடம் பெற்று விடுகின்றனர். சுருக்கமாகக் கூற வேண்டுமெனில், தமிழ்த் தாய்க்கு ஆசிரியர் ஜெகசிற்பியன் ஓர் அரிய ஆபரணத்தைச் சூட்டிப் பணித்திருக்கிறார் என்று சொல்ல வேண்டும்.


பிரசுரம்: வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை — 17; முதல் பாகம்: ரூ. 10; இரண்டாம் பாகம்: ரூ. 10.

சரித்திரத்தில் இடம் பெறும்




லிங்கனின் மரணத்தில் ஆரம்பித்துக் கென்னடி மறைவு வரையில் சரித்திரத்தின் போக்கையே மாற்றியமைத்த சதிச் செயல்கள் எத்தனை எத்தனை? இவற்றைத் தடுப்பதற்கான வழி வகைகளே இடையாதா?

கே. ஆர். என். சுவாமி











மனிதன் நாகரிக வாழ்க்கை வாழ்வதற்கு ஆரம்பித்த காலத்திலிருந்தே, சாம்ராஜ்யங்களையும், நகரங்களையும் நிர்மாணித்துத் தன் இனத்தவர்களைத் தானே அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணம் பிறந்த காலத்திலிருந்தே, பட்டம், பதவி, பணம், புகழ், பொருள் போன்ற ஆசைகளுக்கு அவன் அடிமையானபோதிலிருந்தே; சதிகளும் அவன் சிந்தையிலே பிறந்து விட்டன. பலநூறு ஆண்டுகளில் அவை பலம் பெற்று, பல்கிப் பெருகிப் பல விதங்களாக வளர்ந்து விட்டன. அன்றைய அரசியல் வாழ்வின் அழியாத ஓவியமாக விளங்கும் மகாபாரதத்தில் பாண்டவர்களை அழிக்கத் துரியோதனன் எத்தனை சதிச் செயல்களைச் செய்திருக்கிறான்! அரக்கு மாளிகை அழியாப் புகழ் பெற்றுவிட்ட கதையாயிற்றே. மேலை நாடுகளின் சரித்திரங்களும் கூட நமக்கு எத்தனை எத்தனையோ சதிச் செயல்களைப் பற்றிக் கூறுகின்றன. மகா அலெக்ஸாந்தர் கொஞ்சம் கொஞ்சமாகச் சாகும்படி விஷமிட்டு அனுப்பியவன் ஓர் இந்திய மன்னன்தானே? ரோம சாம்ராஜ்யத்தின் புகழ் பெற்ற சீஸரைக் குத்திக் கொன்ற புருட்டஸின் செயல் திடீர் ஆத்திரத்தின் விளைவா என்ன? இல்லையே? திட்டமிட்டுச் சதி செய்து கொன்றதுதானே? இப்படிச் சரித்திரத்தின் போக்கையே மாற்றியமைத்த சதிச் செயல்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

பண்டைச் சரித்திர காலத்தில்தான் இத்தகைய சதிச் செயல்கள் மலிந்திருந்தன என்றால் இந்த இருபதாவது நூற்றாண்டில் நவீன விஞ்ஞான வசதிகளும், சர்வதேசப் போலீசாரின் ஒத்துழைப்பும் இருந்தும் கூட அரசியல் உலகில் திட்டமிடப்படும் சதிச் செயல்களைத் தடுக்க முடியவில்லையே. பிரபலஸ்தர்களைக் கொலை செய்யும் இத்தகைய பயங்கரச் செயல்களைத் தடுப்பதற்கான வழி வகைகளே இடையாதா?

இது விஷயமாக மாறுபட்ட குணங்களையும் கொள்கைகளையும் உடைய இரு பெரிய அரசியல் தலைவர்களான மகாத்மா காந்தி, அடால்ப் ஹிட்லர் இவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தோமானால் இந்தக் கேள்விக்குக் 'இடையாது' என்ற பதிலே கிடைக்கும்!

மகாத்மா காந்தி அவர்கள் சதிச் செயல்களைப் பற்றித் தர்க்கரீதியான மனோபாவம் கொண்டவர். 1948 ஜனவரியில் அவரைக் கொல்வதற்காக முதலில் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் வெடிக்குமென்று எதிர்பார்க்கப்பட்ட அந்தக் குண்டு வெடிக்கவில்லை. அதைப் பற்றி அவர் குறிப்பிட்டபோது, "சதிகாரர்கள் காந்தியைக் கொல்ல முடியாது. காந்தியிடம் உள்ள ஏதோ ஒரு தவற்றைக் கொல்வதாகத்தான் அவன் நினைக்கிறான்" என்றார். காந்திஜி இறந்துபட வேண்டுமென்று ஆண்டவன் விரும்புவாரானால் அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்ற தளராத நம்பிக்கை கொண்டிருந்தார் அவர்.

அதிசயிக்கத் தக்க வகையில் அடால்ப் ஹிட்லரும் கூட இதே கருத்தைத்தான் கொண்டிருந்தார். நாஜி ஜெர்மனியின் தலைவன் என்ற முறையில் மிகத் திறமை வாய்ந்த ஜெர்மானிய ரகசியப் போலீசார் அவரைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றி வந்தார்கள். அப்படி இருந்தும் அவரைக் கொல்ல மூன்று தடவை

பயங்கரச் சதிகள்?

முயற்சிகள் செய்யப்பட்டன. மூன்று தடவைகளிலும் அவர் அதிசயிக்கத் தக்க விதத்தில் தப்பினார். அது ரகசியப் போலீஸின் மகத்தான திறமையின் சாதனை அல்ல. சதித் திட்டத்தில் தற்செயலாக நேர்ந்த ஏதோ ஓரிரு தவறுகள்தான் அவர் உயிரைக் காப்பாற்றின.

முதல் தடவை கொலை செய்வதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த இடத்திலிருந்து பத்து நிமிடங்கள் முன்னதாகவே கிளம்பிப் போய்விட்டார். இரண்டாவது தடவை கொலை செய்வதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்ட நபர் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்ததற்காகப் பிடிக்கப்பட்டான். அவனுடைய அடையாளச் சீட்டுக்களைப் பரிசோதித்த போது சதி வெளிப்பட்டுவிட்டது. மூன்றாவது தடவை ஹிட்லர் இருந்த கூடத்தில் அவர் அருகிலே வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு பொய்க்கவில்லை. வெடித்தது. கூடத்தின் சுவர்கள் மரத்தாலானதால் வெடித்த குண்டின் வேகம் மரச் சுவர்களைத் தூளாக்கிப் பறக்கச் செய்ததோடு தணிந்து போயிற்று. ஆனால் அதே கூடத்தின் சுவர்கள் கான்கிரீட்டினால் ஆகியிருந்திருக்குமானால் அன்று அதனுள்ளிருந்த அத்தனை பேரும் செத்து மடிந்திருப்பார்கள்.

சதிக் கொலைகளிலிருந்து தப்புவதற்கான ஒரே மார்க்கம் திட்டமற்ற வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். உலாவுதல், கார் சவாரி, பிரயாணம் ஆகியவைகளை முன் கூட்டித் திட்டமிடாமல் திடீரென்று மேற்கொள்ள வேண்டும். ஹிட்லரைப் பொறுத்த வரை இம்முறைகள் ஓரளவு பயனுள்ளதாக இருந்தன என்று கூறலாம். ஹிட்லரின் தேவை



களைக் கவனித்துக் கொள்ளும் பணியாட்களுக்கு அவரது நடவடிக்கைகளைப் பற்றி யாரிடமும், எதுவும் முக்கியமாக உயர்ரக அதிகாரிகள் கேட்கும்போது — சொல்லக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவிடப் பட்டிருந்தது.

மிக முக்கியமான நபர்கள் செல்லும் மோட்டார்களின் பின் பக்கத்தில் மிகச் சக்தி வாய்ந்த சர்ச் லைட்டுகளைப் பொருத்த வேண்டும் என்று ஹிட்லர் விரும்பினார். ஏதாவது சந்தேகம் தோன்றும்போது தமது காரைப் பின்தொடருகிறவர்களின் பார்வையை இத்தகைய விளக்குகளின் மூலம் குருடாக்கித் தப்பிச் செல்ல வசதியாக இருக்குமென்பது அவர் எண்ணம்.

ஹிட்லர் தமது அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்குத் திட்டவட்டமான யுக்திகள் எதையும் கையாளத் தயங்கியதில்லை. ஜெர்மன் ரகசியப் போலீஸின் தலைவர், ஸ்டாலினைக் கொல்வதற்கான வழிமுறைகளை வகுக்க வேண்டுமென்று ஹிட்லர் தம்மைக் கேட்டதாகத் தமது குறிப்புக்களில் எழுதியுள்ளார். ஸ்டாலினைக் கொல்லும் பொறுப்பு ரஷ்யாவிலுள்ள ஜெர்மன் ராஜாங்கத் தூதர் வான் ரிப்பன் டிராப்பிடமும் ரகசியப் போலீஸின் முதல்வரான வான் ஷெல்லன்பர்க் என்பவரிடமும் ஒப்படைக்கப்பட்டது. கொலைக்கருவியான துப்பாக்கி ஒரு பௌண்டன் பேனாவின் வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அத் திட்டத்தைப் பிறகு ஒத்திப்போடும்படி நேர்ந்து விட்டது. காரணம், ஒரு சாதாரண ராஜப் பிரதிநிதியைச் சந்திப்பதற்கு ஸ்டாலினை வரும்படி செய்வது முடியாத காரியமாகிவிட்டது. ஆகவே வேறு வழியைக் கையாள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது ஜெர்மானியர்களுக்கு. ஸ்டாலினுடைய மோட்டார் ஓட்டிகளில் ஒருவனைப் பணத்தினால் வசப்படுத்தி அவன் மூலம் ஸ்டாலின் செல்லும் காரில் ப்ளாஸ்டிக்கினால் ஆன வெடிகுண்டைப் பொருத்திவிடுவது என்று முடிவு செய்தார்கள். இந்தக் காரியத்தை நிறைவேற்ற ஜெர்மன் ரகசிய போலீஸ் இலாகாவில் பணியாற்றும் இரண்டு ரஷ்யர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இவ்விருவரையும் ரஷ்யாவுக்குள் பாரசூட் மூலம் இறக்கிவிடுவதென்று ஏற்பாடாயிற்று. ஆனால் இந்தச் சதியின் முடிவிலே ரஷ்ய ரகசிய போலீசார் தான் வெற்றி அடைந்தார்கள். பாரசூட் மூலம் இறக்கப்பட்ட ரஷ்யர்கள் தாய்நாட்டுக்குத் துரோகிகளாக மாறாமல் விசுவாசிகளாகி விட்டார்கள்!

இரண்டாவது உலக யுத்தத்தின் இறுதி நாட்களில் ஜெனரல் ஐஸன்ஹோவரைக் கொல்வதற்குத் திட்டமிட்டார்கள், ஜெர்மானியர்கள். குறிப்பிட்ட ஓர் இடத்துக்கு அவர் கார் வரும்போது அவரைக் கொலை செய்வதென்று ஏற்பாடு. ஆனால் விதி அவரது வழியில் குறுக்கிட்டது. குறிப்பிட்ட இடத்தை அணுகுமுன் ஐஸன்ஹோவர் ஒரு கிழட்டுத் தம்பதிகளை அருகில் உள்ள அவர்களது கிராமத்துக்குக் கொண்டு போய் விட்டுத் திரும்பும் மனிதாபிமானச் செயலுக்கு உள்ளானார். இந்தச் செயல் — பிரயாணத்தின் சிறு மாற்றம் — அவரது உயிரைக் காப்பாற்றியது. தம்முடன் வந்த மற்றொரு காரை மட்டும் தாமதிக்க வேண்டாமென்று அனுப்பியிருந்தார். ஆகவே திட்டமிட்ட சதிக்கு அந்தக் காரும் அதில் சென்றவர்களும் இலக்காகி இறந்தார்கள்.

சில வேளைகளில் சதியினால் கொலைசெய்யப்படுபவர்களுக்கு நடக்கப் போகும் பயங்கரத்தைப் பற்றி முன்னெச்சரிக்கையாக ஏதாவது சூசகங்கள் தோன்றக் கூடும். ஜனாதிபதி லிங்கன் சுட்டுக் கொலை செய்யப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்பாக அவர் தமது கனவில் அந்தப் பயங்கரத்தைக் கண்டார். ஜனாதிபதி கொல்லப்பட்டதாகவும் அதனால் மக்கள் அழுது புலம்புவது போலவும் தாம் கண்ட கனவை ஸ்ரீமதி லிங்கனிடம் அவர் விளக்கியிருக்கிறார்.

கொலைகாரர்களின் உயிர், செயல் முடிந்த பிறகு அவனை இயக்கிய சதிகாரர்களுக்குத் தேவையற்ற, மதிப்பற்ற ஒன்றாகி விடும். கென்னடியைக் கொன்ற ஆஸ்வால்டைக் கொன்றுவிட்டானல்லவா ஒருவன்? அது மட்டுமல்ல; கொலைக் குற்றம் புரிந்தவன் உயிருடன் இருந்தால் சதிகாரர்களுக்கு அபாயமும் கூட. ஆகவே அவனை உயிரோடு விட்டு வைத்திருக்க மாட்டார்கள். சட்டத்துக்கும் ஒழுங்குக்குமோ கொலைகாரனின் உயிர் விலைமதிப்பற்ற ஒன்றாகும். அவனை விசாரிக்கிறபடி விசாரித்து; சதிச் செயல்களின் மர்மங்களை விளங்கிக் கொள்ள முடியுமல்லவா? ஆனால் அந்த அளவுக்குச் சதிகாரர்கள் ஏமாந்தவர்களா? செயல் முடிந்ததும் அவனையும் தீர்த்துக்கட்டி விடுவார்கள். பாகிஸ்தானின் பிரதமர் லியாகத் அலிகானை 1952ல் கொன்றவனை அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் தீர்த்துக்கட்டி விடவில்லையா?

ரஷ்யர்கள் இத்தகைய முறையில் வல்லவர்கள் என்பதை ஹிட்லரே தமது புத்தகமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார். சதிகாரர்களைப் பற்றிய தடயங்கள் பிறருக்குக் கிடைப்பதற்குச் சாதகமாகத் தமது கொலையாளிகளை ரஷியர்கள் விட்டு வைக்க மாட்டார்களாம். ஒரு சமயம் சதிச் செயலை நிறைவேற்றும் கொலையாளி காரியம் முடிந்ததும் ஒரு சிறு சாதனத்தின் விசையைச் சுழற்ற வேண்டும் என்று கோரப்பட்டிருந்தார். அதிலிருந்து வெண்பனிப் படலம் போன்ற செயற்கைப் புகை வெளிப்படும். அதன் மறைவில் அந்த நபர் தப்பி ஓடிவிட வேண்டும் என்று ரஷ்யர்கள் அவனிடம் கூறியிருந்தார்கள். ஆனால் உண்மையில் அந்தச் சாதனம் ஒரு வெடிகுண்டு. அவனை அது அந்த விநாடியே சின்னாபின்னமாக்கி விட்டது!

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரபலஸ்தர்கள் எந்த நிமிஷம் தமது உயிருக்கு என்ன நேருமோ என்ற பீதியிலேயே வாழ வேண்டும். லண்டனில் உள்ள ஒரு துப்பறியும் ஸ்தாபனம் இத்தகையோருக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதில் விசேஷத் திறமை வாய்ந்திருக்கிறது. மெய்க்காப்பாளரை அளிப்பதற்கு இவர்கள் ஒரு மணிக்குப் பத்து ஷில்லிங் வசூலிக்கிறார்கள். மிகப் பிரபலமான நபர் தமது தங்குமிடத்திலிருந்து ஒரு நாளைக்

குப் பல தடவை வெளியே போக நேரிடலாம். இத்தகையவர்களுக்குக் குறைந்த பட்சம் எட்டு மெய்க்காப்பாளர்களாவது தேவைப்படும். அவர்களுக்கான செலவு நூறு பவுன்கள் அதாவது ஒரு நாளைக்கு 1300 ரூபாயாகும். தங்குமிடத்தின் வாடகை முதலிய செலவுகள் இதில் சேராது. ஆனால் பிரபலஸ்தர் தம்மைக் கொல்வதற்குத் திட்டமிட்டுள்ள நபர் யார் என்பதை ஊகித்தோ உணர்ந்தறிந்தோ சொல்லி விடுவாரானால் துப்பறியும் மெய்க்காப்பாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும். ஒரே ஒரு நபர் குறிப்பிட்ட அந்தச் சதிகாரனைக் கண்காணித்து வருவார். செலவும் கணிசமாகக் குறைந்துவிடும்.

ரஷ்யப் பிரதமர்களும், அவரது சகாக்களும் விருந்தாளிகளாக வேறு நாட்டுக்கு விஜயம் செய்யும்போது ஸோவியத் பந்தோபஸ்துக் குழுவினர் சில மாதங்களுக்கு முன்னதாகவே அங்கு சென்று அந்த நாட்டின் பந்தோபஸ்து அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் விஜயம் செய்யப் போகும் தம் தலைவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பணியில் ஈடுபடுவார்கள். இத்தகைய குழு நம் நாட்டில் மட்டும் இல்லையா? இருக்கிறது. இருந்தும் மகாத்மா காந்தி கொலைகாரனின் குண்டுக்கு எப்படி இரையானார் என்று கேட்கத் தோன்றும். காந்தியடிகள் நம் அலுவல்களில்ரகசியப்போலீஸின் தலையீட்டை விரும்பவில்லை. காந்தியைச் சுட்ட அன்று பந்தோபஸ்து இலாகாவைச் சேர்ந்த எழுபது பேர்கள் பிரார்த்தனை மைதானத்தில் இருந்தார்கள். இருந்தும் எந்த ஒருவராலும் அந்தத் துயரச் சம்பவத்தைத் தடுக்க முடியவில்லை. காரணம், பிரார்த்தனைக்கு வந்திருப்பவர்களைச் சோதனையிட்டு அனுப்புவதை மகாத்மா விரும்பவில்லை.

துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்க முடியாத உள் அங்கிகளைத் தயாரிப்பதில் நிபுணர்களாக ஒரு லண்டன் கம்பெனி இருக்கிறது. எஃகினாலானபோதிலும் இத்தகைய அங்கிகளின் எடை இருபதிலிருந்து இருபத்திரண்டு பவுண்டுகள்தான். இதன் விலை 400 ரூபாய். கடந்த யுத்தத்தின்போது இந்த ஸ்தாபனத்தின் மூன்று தொழிற்சாலைகள் இரவு பகல் வேலை செய்து ராணுவத்தினருக்கு இத்தகைய அங்கிகளைத் தயாரித்துக் கொடுத்தது. இன்றும் ஆண்டொன்றுக்கு இருநூறுக்கும் அதிகமான அங்கிகளை இந்தக் கம்பெனி தயாரிக்கிறது. இந்த அங்கிகள் எல்லாக் கைத்துப்பாக்கிக் குண்டுகளையும், சிலவகை ரைபிள் துப்பாக்கிக் குண்டுகளையும் கூடத் தடுத்து நிறுத்தக்கூடிய உறுதி வாய்ந்தவை. காலம் சென்ற ஆகாகான் இத்தகைய அங்கி ஒன்றை அணிந்திருந்தார். மாடம் சியாங் கே ஷேக் தமக்கு நீல நிற லைனிங் பட்டால் மூடிய ஓர் அங்கிக்கு ஆர்டர் செய்திருந்தார். பல இந்திய இளவரசர்கள் இந்த ஸ்தாபனத்தின் வாடிக்கைக்காரர்கள். ஒரு மகாராஜா கால் நடையாகச் சென்று புலி வேட்டையாடுவதற்குப் பாதுகாப்பாக உடல் முழுதும் மூடும் ஒரு முழு நீள அங்கி தயாரிக்குமாறு கேட்டுக் கொண்டாராம். ஆனால் அதன் கனம் நூறு பவுண்டுகள் ஆகும் என்றபோது அதைச் சுமந்தபடி வேட்டைக்குப் போவது முடியாத காரியம் என்று கருதி, அதைத் தயாரிக்க வேண்டாம் என்று கூறிவிட்டார்!

ஒரு நபரைக் கொல்வதற்குத் திட்டமிட்டுச் சகல ஏற்பாடுகளும் செய்துவிட்ட பிறகு அதைக் கைவிடும் நிலை வருமானால் அப்படிச் செய்வது மிக மிகக் கடினமான காரியம். அதைத் திட்டமிட்டு நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள அத்தனை பேருக்குமே அது ஒரு நெருக்கடியான நிலைமையாகி விடும். ஒரு தடவை ஸ்டாலின் தமது ரகசியப் போலீசாருக்கு டிட்டோவைக் கொலை செய்யும்படிக்கு உத்தரவிட்டார். அந்தக் கொலை ஒரு குறிப்பிட்ட சாலையின் முனையில் நிகழ்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள். ஆனால் அது செயல்படுவதற்குப் பத்து நிமிஷங்களுக்கு முன்னால் அதை நிறைவேற்ற வேண்டிய வேவுகாரருக்கு ஸ்டாலினிடமிருந்து 'நிறுத்து!' என்று உத்தரவு வந்தது. பட்ட பாட்டுக்கெல்லாம் பலனில்லாமல் போனதினால் மனமுடைந்த உளவாளி மிக மிகச் சிரமப்பட்டு எப்படியோ அந்தச் செயல் நடக்காமல் தடுத்துவிட்டான். ஆனால் அதற்காக அவன் எடுத்துக் கொண்ட சிரமங்களும், குழப்பங்களும், கவலையும் அவனை அதன் பிறகு பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் விருந்தாளியாக்கி விட்டன!

இதை நம்புவது கடினமாக இருக்கலாம்; ஆனால் உண்மை: லண்டனில் உள்ள பிரபல இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனமான லாயிட்ஸ், பிரபலஸ்தர்களுக்கு ஒருவர் கடன் கொடுத்திருந்தால் அந்தக் கடனை இன்ஷ்யூர் செய்து கொள்வதற்கு வசதி அளிக்கிறது. பிரபலஸ்தர்கள் இறந்தாலோ கொலை செய்யப்பட்டாலோ கூடப் பாதிக்கப்படாத வகையில் அக்கடனை இன்ஷ்யூர் செய்து கொள்ளலாம். 1952ல் ராணியாரின் மகுடாபிஷேகம் நடைபெற இருந்த சமயத்தில் பிரிட்டிஷ் தொழில் நிறுவனங்கள் லட்சக்கணக்கான பவுன்களை ராணியைப் பற்றிய விசேஷ மலர்கள் வெளியிடுதல், அயல் நாட்டினரை வரவேற்று உபசரிக்கும் 'ஹோட்டல்' ஸ்தாபனங்களை அமைத்தல் போன்ற பலதிறப்பட்ட காரியங்களில் முடக்கி இருந்தன. இந்த நிலையில் எலிஸபெத் ராணி நோய் காரணமாகவோ அல்லது சதிச் செயல்களாலோ மரணமடைய நேருமானால் தொழிலகங்கள் முடக்கியுள்ள அத்தனை பணமும் வீணாகியிருக்கும். ஆகவே, தொழிலகங்கள் அந்தக் கவலை இன்றி இந்தக் காரியங்களைச் செவ்வனே செய்வதற்கு உற்சாகமளிப்பதற்காக, அந்த முதலீடுகளை இன்ஷ்யூர் செய்து கொள்வதற்குத் தொழிலதிபர்களுக்கு வசதி செய்து கொடுத்தது லாயிட்ஸ் கம்பெனி. இதற்கான 'பிரீமியம்' தொகை மிகக் குறைவு என்றால் ஆச்சரியப்படத்தோன்றும். ஆனால் மிகமிகக் குறைவான அரசியல் அதிகாரம் பெற்றுள்ள பிரிட்டிஷ் அரசியை யார் எதற்காகக் கொலை செய்ய முற்படப் போகிறார்கள் என்ற ரீதியிலேதான் சிந்தித்தது லாயிட்ஸ் ஸ்தாபனம்!

அத்தியாயம் பதினெட்டு

இனிப்பும் கசப்பும்



ஜீவகீதம்

ஜெகசிற்பியன்

தீன் தடித்த உதடுகளின் கடை யிடுக்கில் சிகரெட்டைப் பற்ற வைக்காமலே தொங்க விட்டுக்கொண்டு கம்பீரமாக நிமிர்ந்து அங்குமிங்குமாகப் பார்வையைச் செலுத்திய நச்சி, சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்த டாக்சி யைக் கைதட்டி அழைத்து விட்டுத் திரும்பி, "சரி; இப்ப நீ இன்னு பண்ணப் போறே தம்பி?" என்று சபேசனிடம் கேட்டான்.

"சேப்பாக்கத்துக்குப் போவதற்காகப் புறப்பட்டேன், அண்ணு! அங்கே ஓர் அச்சகத்தில் ஜல்லி இருப்ப தாக நேற்று சொன்னுர்கள்" என்று தயக்கத்துடன் இழுத்த சபேசன், "ஏதோ முக்கிய



விஷயமாய் என்னைப் பார்க்க வந்ததாகச் சொன்னுயே?" என்றுன்.

"அடடே, அதைச் சொல்ல மறந்துட்டேனே! இன்னைக் குப் பர்மாவிலே இருந்து அகதி களை ஏத்திக்கிட்டு ரெண்டா வது கப்பல் வந்திருக்குது தம்பி! அதிலே உன் அப் பாரு...." என்று நச்சி சொல் லிக் கொண்டிருக்கும்போதே சடாரெனத் திரும்பிய சபே சன் ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்து வாய்விட்டுச் சிரித்துக் கொண்டே அங்கிருந்துஓட்டம் பிடித்தான்.

மகிழ்ச்சி ஆவேசத்துடன் தலை தெறிக்க ஓடிய அந்த இளைஞனையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்த நச்சி, "அட, ஆண்டவனே!" என்று நீண்ட பெருமூச்சு விட்டவாறு டாக்சியில் ஏறி அமர்ந்து கொண்டான்.

வேப்பேரி மணிக்கூண்டுக்குப் பக்கவாட்டி லுள்ள ஒரு சிறிய தெருவில் நுழைந்து பழங் காலத்து மொட்டை மாடி வீட்டொன்றின் எதிரே போய் நின்றது டாக்சி.

"கொஞ்ச நேரம் இரு, பணம் கொடுத்தனுப் பறேன்" என்று அமர்த்தலாக டிரைவரிடம் சொல்லிவிட்டு விசிலடித்துக்கொண்டே உல்லாச நடைபோட்டு அவ்வீட்டின் படிமேல் ஏறி நின்ற நச்சி, "ஏ, பாய்!" என்று உரக்கக் கூப்பிட்டான்.

"எஸ், ஸார்!" என்றவாறு பின் கட்டிலிருந்து ஓடி வந்தான் ஒரு பட்லர்.

"மிஸிகிட்டே பணம் வாங்கியாந்து அந்த டாக்சிக்காரனுக்குக் கொடுத்து அனுப்புமேன்!" என்று அதிகார தோரணையில் கட்டளை யிட்டான்.



அடுத்த கணம், ''ஹல்லோ, மை டியர் டார்லிங்! கம் இன், கம் இன்!'' என்று மகிழ்ச்சிக் கேவலுடன் கூவிக் கொண்டே ஓடி வந்த ரோஸ்லின் அவனது கையைப் பிடித்துக் குலுக்கி உள்ளே இழுத்துச் சென்றாள்.

வெளியில் பார்ப்பதற்கு அந்த வீடு பழசாக இருந்தாலும் உட்புறத்தே ஒவ்வோர் அறையும் வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப் பெற்றுக் கவர்ச்சியுடன் விளங்கியது.

ரோஸ்லினின் கையோடு கை கோத்துக்கொண்டு, ''இன்னு மீனி, எப்படி இருக்கிறே?'' என்று அன்பொழுகக் கேட்டவாறு குஷியாக ஹாலுக்கு வந்த நச்சி, தன் கையிலிருந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இசைத்தட்டுக் கனையும் மேசைமேல் வைத்துவிட்டு, அதே இலாகவத்துடன் தலையிலிருந்த ஒலைத் தொப்பியைக் கழற்றிச் சற்றுத் தொலைவிலிருந்த நாற்காலியின் தலைப்புச் சட்டத்தில் தொற்றிக் கொள்ளும் படியாக வீசினான். பிறகு கழுத்தை இறுக்கிக் கொண்டிருந்த டையைத் தளர்த்திவிட்டு மிகவும் களைத்துப் போய் வந்திருப்பவன்போல், ''ஹப்பாடா!'' என்று அலுத்துக் கொண்டே ஒரு சோபாவில் சாய்ந்தான்.

அந்த அறையின் சுவர்களில் அழகழகான படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவற்றுடன் சற்றே வயதான ஒரு பரங்கித் துரையின் போட்டோப் படமும் இருந்தது. அவன்தான் ரோஸ்லினின் மாஜிக் கணவன். ரயில் எஞ்சின் டிரைவராக வேலை பார்த்த அவன் துரதிர்ஷ்டவசமாக ஒரு விபத்தில் காலமாகி விட்டான். அவனது பிராவிடெண்ட் சேமிப்பு, மற்றும் பல இனங்கள் மூலம் ரயில்வே இலாகாவிலிருந்து ரோஸிக்குக் கிடைத்த கணிச



மான தொகையைப் பாங்கியில் போட்டு வைத்துக்கொண்டு அவளும் அவளுடைய தாயாரும் சிரமமின்றிக் காலத்தைக் கடத்தி வந்தனர்.

ரயில்வே ஸ்டேஷன்களிலேயே பெரும் பொழுதைப் போக்குபவனாக இருந்த நச்சி அந்த எஞ்சின் டிரைவர் துரையை எப்படியோ சிநேகம் பிடித்து வைத்துக் கொண்டிருந்தான். அவனும் இவன் மீது மிகவும் பிரியமாக இருந்தான். பிறகு அவன் விபத்தில் காலமானதைக் கேள்விப்பட்டதும் ஒரு நாள் அவனது மனைவியான ரோஸ்லினிடம் துக்கம் விசாரிக்க வீட்டுக்குப் போனான். அன்று முதல் அவனுக்கும் அவளுக்கும் பழக்கம் ஏற்பட்டு, அதுவே நாளாவட்டத்தில் காதலாகவும் பரிணமித்தது. துன்ப விசாரிப்பில் தொடங்கி இன்ப விசாரிப்பில் வந்து நின்று விட்டது. இது ஓர் அதிசயமான, அபூர்வமான இணைப்புதான். ஆனால் உலகத்தில் இதைவிடப் பேரதிசயங்களெல்லாம் இருக்கின்றன அல்லவா? ஆகவே இதை ஓர் அற்பமான அதிசயம் என்றுதான் நினைக்க வேண்டும்!

நச்சியை விட ரோஸி ஐந்தாறு வயது மூத்தவள். ஆனாலும் அவனை அவள் உள்ளன்போடு உண்மையாக நேசித்தாள். அளவு கடந்த ஆவேசத்தோடும் காதலித்தாள். ஆனால் நச்சியோ? அவளைப் பற்றி அவனுக்கே இன்னும் சரியாகப் புரியவில்லை!...

''மிஸ்டர் நாச்! நீ ரொம்ப 'லய்' பேசறே! அண்ணைக்கு வரேன்னு சொல்லிப்பிட்டு வராமல் 'டாட்ஜ்' பண்ணிட்டே! உன்னுடை எந்தப் பேச்சையும் என்னால் 'பிலீவ்' பண்ணவே முடியலே!'' என்று கீச்சுக் குரலில் சிணுங்கிக் கொண்டே அவனருகில் ஒட்டி உராய்ந்து உட்கார்ந்து கொண்டாள் ரோஸ்லின்.

''கோபிச்சுக்காதே, டீயர்! இப்பவெல்லாம் எனக்கு ஒன்—மினிட் கூட ரெஸ்ட் கிடையாது. படா பேஜார் புடிச்ச வேலையாய்ப் போச்சு. எங்க டைரக்டர் என்னை அப்படி 'யிப்படி நவுர விடமாட்டேங்கறான். டொண்டிஃபோர் ஹவர்ஸும் அவன் பின்னாடியே சுத்த வேண்டியிருக்குது!'' என்று சலிப்புடன் சொன்னான் நச்சி.

''ஓ..... என்ன, மேன்! முந்திக் கேட்டா பில்டிங்ஸ் கான்ட்ராக்டர் கிட்டே சூப்பர்வைஸராயிருக்கிறேன்னு சொன்னே; இப்ப என்னமோ டைரக்டர்கிட்டே வேலை பார்க்கிறேங்கறே? இதுலே எது மேன், ஃபேக்ட்?''

''எல்லாமே ஃபேக்ட்தான் கண்ணு! செஞ்ச வேலையையே செஞ்சுக்கிட்டு இருக்கிறதுக்கு நான் என்ன, மிஷினா?''

''இப்ப என்ன வொர்க் பார்க்கிறே, டார்லிங்?''

''ஒரு மியூஸிக் டைரக்டர்கிட்டே அஸிஸ்டெண்டா இருக்கிறேன்!''

''மியூஸிக்கிலே நீ என்ன அஸிஸ்ட் பண்ணுவே?''

''அடங்க, இஸ்லி! இன்னு மிஸி இப்படி ஒரு கேள்வி கேட்டுட்டே? எங்க மியூஸிக் டைரக்டனுக்கு நான் தான் டியூன் போட்டுக் கொடுக்கிறது!... ஆமாம், டியூன்னு டமில்லே இன்னு சொல்றது?.... இங்கே வந்து உன்கிட்டேதான் டமில் பேசறேன்; வெளியிலே போனால் ஒரே இங்கிலீஸ்தான்!.... ம்..... கரெக்ட், ஞாபகம் வந்துடுச்சு; டியூன்னு மெட்டுன்னு டமில்லே சொல்லுவாங்க! மெட்டாவது தட்டாவது, படா தமாஷ்தான் போ!''

ஆச்சரியத்தால் கண்களை அகல மலர்த்திய ரோஸி ''ஓ, மை கார்ட்! யூ ஆர் எ வெரி கிரேட் மேன், நாச்!''

''பின்னே இன்னுன்னு நினைச்சுக்கிட்டே? இதோ பார், இன்னிக்குக்கூட அர்ஜண்டா ஒரு டியூன் கம்போஸ் பண்ணிக் கொடுக்க வேண்டியிருக்குது. அதுக்குத்தான் இந்த ரெக்கார்டுகளை ஆப்பிரிக்காவிலே இருந்து வரவழைச்சேன். சினிமாவிலே எல்லாத்துக்கும் அங்கே இங்கே பிராயற வேலைதான். பாட்டுக்களுக்கு மெட்டுப் போடறதும் அப்படித்தான். காப்பியடி மன்னர்கள் நிறைஞ்ச உலகம் அது!'' என்று சிரித்துக்கொண்டே சொன்ன நச்சி, தான் வாங்கி வந்த இசைத்தட்டுகளைச் சுட்டிக் காட்டினான்.

''ஐ-ஸீ!'' என்று வியப்புடன் தலையாட்டிக்கொண்ட ரோஸி, அவன் கையை வாஞ்சையோடு பற்றிக் கொண்டு, ''மிஸ்டர் நாச்! இப்ப ஒரு டியூன் போட்டுப் பாடிக் காட்டறியா? நீ பாடறதைக் கேட்க எனக்கு ரொம்ப ஆசையா யிருக்குது; பிளீஸ்!'' என்றாள் கொஞ்சிக் குழைந்தபடி.

''சே, சே! எனக்குப் பாட்டுப் பாட வராது கண்ணு. டியூன் மட்டும்தான் போடுவேன். அதுவும் எப்படி? சும்மா பேப்பர்லே கோடு கோடா 'நோட்' போட்டுக் கொடுத்துப்பிடுவேன். அதை எங்க மியூஸிக் டைரக்டன் முதல்லே பாடிப் பார்ப்பான்; அப்புறம் பாடறவங்களைக் கூப்பிட்டுப் பாடச் சொல்லி ரெக்கார்டு பண்ணிப்பிடுவான்'' என்று வெகு அலட்சியமாகச் சொல்லிக் கொண்டே சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தான் நச்சி.

இந்தச் சமயம் பக்கத்து அறையிலிருந்து, ''ஏ, பாய்!'' என்ற குரல்

கேட்டது. ''எஸ், மேடம்!'' என்றவாறு அவ்வறைக்கு ஓடினான் பட்லர்.

''தெரு மேலே போய், த்ரீ பைஸ் கேய்க், த்ரீ பைஸ் வேக்கள்ளே வாங்கியா, மேன்!''

பட்லர் வெளியே சென்று சற்றைக்கெல்லாம் திரும்பி வந்தான். அவன் கையில் கொஞ்சம்' வறுத்த வேர்க் கடலையும், வேக வைத்த மரவள்ளிக் கிழங்குத் துண்டுகள் மூன்றும் இருந்தன.

அவற்றைத் தின்றுகொண்டே ஹாலுக்கு வந்தாள் ஒரு மூதாட்டி. முழங்கால் வரை தொளதொளப்பான கவுன் அணிந்திருந்த அவள் ரோஸியின் தாயார்க்காரி.

''மம்மி! என்னுடைய பாய் ஃப்ரெண்ட் நாச் வந்திருக்கிறுனே, பார்த்தியா?'' என்று மகிழ்ச்சியுடன் தன் தாயிடம் சொன்னாள் ரோஸி.

''இன்னு மிஸி, 'அவன், இவன்'னு மரியாதை இல்லாம பேசறே? பாபாவது, தலைகாணியாவது! அங்கிள் வந்திருக்கார்னு சொல்லேன்!'' என்று இரகசியக் குரலில் கடுகடுத்தாள் நச்சி.

''எக்ஸ்கியூஸ் மீ, டார்லிங்! நாங்களெல்லாம் அப்படித்தான் சொல்றது: தப்பா எடுத்துக்காதே!'' என்று அவன் மோவாயை வருடினாள் ரோஸி.

''தப்பாவது, மோனமாவது! புருசனைக்கூட இப்படித்தான் சொல்லுவீங்களோ?''

''நீ என்ன என் ஹஸ்பெண்டா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் ரோஸ்லின்.

''ஓகோ!' அப்படீன்னு இரு; மோர் மார்க்கெட்டிலே ஒரு பித்தளை மோதிரத்தை வாங்கியாந்து உன் கையிலே மாட்டிப்பிட்டு வேடிக்கை பார்க்கிறேனு இல்லையா, பார்!''

ரோஸிக்கு ஒரே சிரிப்பு!

''மை டியர் பாய்! ஹௌ ஆர் யூ?'' என்று வேர்க் கடலையைக் கொறித்துக் கொண்டே வந்த கிழவி மிஸி கேட்டாள்!

''என்னமோ, இருக்கிறேன் பாட்டி. அட்டா, வரும்போது பாட்டிக்கு வேர்க் கடலை, கெழங்கு வாங்கியாறணும்னு நினைச்சேன்; மறந்து போச்சு! அடுத்த தபா மறக்காம வாங்கியாறேன். இப்ப இருக்கிறதைப் பக்கத்து ரூமிலே போய் உட்கார்ந்துக்கிட்டு துன்னு, போ!'' என்று நைஸாகச் சொல்லிக் கிழவியை அங்கிருந்து அனுப்பிவிட்டான் நச்சி.

''டைம் ஆயிடுச்சு, போவலாமா?'' என்றவாறு ஒயிலாக நெளிந்து எழுந்தாள் ரோஸி.

அவளையே சற்று நேரம் 'உர்'ரென்று பார்த்துக்கொண்டிருந்த நச்சி சோபாவில் ஒருக்களித்துச் சாய்ந்துகொண்டு, ''ஆமாம்; இந்த நேரத்திலே நீ 'மேக்கப்' பண்ணிக்கிட்டு இருக்கிறதைப் பார்த்தா, எங்கேயோ புறப்படறதுக்கு ரெடியானுப்பலே தோணுதே?'' என்று கேட்டான்.

''இல்லே, டார்லிங்! சும்மா அப்படி பீப்பிள்ஸ் பார்க் வரை 'வாக்' பண்ணிட்டு வரலாம்னு கிளம்பினேன்...'' என்று சிரித்துக்கொண்டே கூறிய ரோஸ்லின் மீண்டும் அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

''இன்னது, 'வாக்' பண்ணப் புறப்பட்டியா? ஏய்,.... யாரை ஏமாத்தப் பார்க்கிறே? நிசத்தைச் சொல்லு! டான்ஸ் ஆடப் போவத்தானே புறப்பட்டே?''

''நோ நோ, மிஸ்டர் நாச்! அதெல்லாம் உனக்குப் பிடிக்காதுன்னு எனக்குத் தெரியாதா? இப்பல்லாம் நான் டான்ஸ் ஆடப் போகிறதே இல்லே.''

''இன்னைக்குப் போகலேங்கறது சரி, நேத்து போனியா, இல்லையா?''

''நேத்துக்கூடப் போவலே, டியர்!''



ஜெயில் கைதி: போடா! என்னவோ முன்னேற்றம் முன்னேற்றம்னு ரொம்பப் பீத்திக்கிறாங்களே! எல்லாம் எந்திரங்கள் செய்யும் காலம்னு சொன்னாப் போதுமா?... இன்னும் நாம் கையாலேதான் கல்லை உடைக்கிறோம்...!

''அதுக்கு முந்தின நாள்?''

''வாட் இஸ் திஸ் சில்லி கொஸ்ச்சன்?''

''ஆங்,..., நம்ம கிட்டேயே கமால் பண்றியா?.... முந்தா நாளு புலான ஒட்டல்லே பலான துரைகூட நீ டான்ஸ் ஆடினதைப் பார்த்தேனே?''

''லய், லய்! மிஸ்டர் நாச், நீ ரொம்ப லய் பேசறே! நான் சும்மா அந்த ஒட்டலுக்கு உ குடிக்கத்தான் போனேன்; டான்ஸ் ஆடப் போவலே!''

''ஆய்ங், மாட்டிக்கிட்டியா? லய், லய்ன்னு நம்ம தலை மேலேயே கை வைக்கப் பார்க்கிறியா?'' என்று முரட்டுத்தனமாகக் கூறிக்கொண்டே அவள் முதுகில் கும்மென்று ஒரு குத்து விட்டான் நச்சி. பிறகு தோளிலும் முகத்திலுமாக இரண்டு குத்துகள் பலமாக விழுந்தன.

''மம்மி, மம்மி! இந்தக் கண்ட்ரி புரூட் என்னே பீட் பண்றான், ஸ்லாப் பண்றான்!'' என்று பூனைக் குட்டிபோல் கத்திக்கொண்டே எழுந்து ஓடிய ரோஸி சற்றுத் தொலைவில் போய் நின்றுகொண்டு, அவனை வெறித்துப் பார்த்து, ''யூ ஸ்டுப்பிட்! நான் சென்ஸ்! இடியட்!'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு அழுத்தந் திருத்தமாகக் கூவினுள்.

''பேபினே, முதுவு எலும்பை முறிச்சுப்பிடுவேன்!'' என்று முஷ்டியை மடக்கிக்கொண்டு எழுந்தான் நச்சி.

இந்தச் சமயம், பக்கத்து அறையிலிருந்து வெகு சாவதானமாக வந்த கிழவி மிஸி அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ''ஏ, பாய்! தெரு மேலே போய், த்ரீ பைஸ் கேய்ங், த்ரீ பைஸ் வேர்க்கன்னே வாங்கிக்கினு வா!'' என்று பட்லரிடம் கூறியவாறு அமைதியாகத் திரும்பிச் சென்றுவிட்டாள். இம்மாதிரி சம்பவத்தை அவள் அடிக்கடி பார்த்துப் பழக்கப்பட்டவள் போலும்!

ரோஸி 'டக், டக்'கென்று நடந்து போய் ஒரு நாற்காலியில் விறைப்பாக உட்கார்ந்து தன் உதட்டுச் சாயத்தைச் சரிப்படுத்திவிட்டு முகத்தைப் பொத்திக்கொண்டு விம்மிப் பொருமி அழலானுள்.

சோபாவில் நன்ருகச் சாய்ந்து கால்களை நீட்டிக்கொண்டு சிகரெட் பிடித்தவாறு அவளையே ஓரக் கண்ணுல் பார்த்துக்கொண்டிருந்தான் நச்சி.

அந்த அறையில் வெகு நேரம் நிசப்தம் நிலவியது. கிச்சன் அறையிலே ரொட்டி 'டோஸ்ட்' ஆகும் மணம் கமகமத்தது.

நச்சி மெல்ல எழுந்தான். தான் வாங்கி வந்த இசைத் தட்டுகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு போய் ஒரு மூலையில் இருந்த கிராமபோன் பெட்டியில் பொருத்தி இயக்கி விட்டான். அடுத்த கணம், தேய்ந்து பழசான அந்த இசைத்தட்டிலிருந்து ஓர் ஆங்கில வாத்திய இசை எழுந்தது.

அதனை வெகு உன்னிப்பாகச் செவி மடுப்பவன்போல் நின்றுகொண்டிருந்த நச்சி, ரோஸியைக் கடைக் கண்ணுல் கவனித்துவிட்டு, அந்த வாத்திய இசைக்கேற்ப விசிலடித்தவாறு தன் உடம்பை நெளித்துக் காலை ஆட்டிக்கொண்டு பெரிய 'கொயர் மாஸ்டர்' மாதிரி கையையும் வீசி அசைக்கலானுன்.

முகத்தைப் பொத்திக்கொண்டிருந்த ரோஸி மெதுவாகத் தலை நிமிர்ந்தாள். நச்சியை இமைக்காமல் நோக்கினுள். அவள் முகம் கொஞ்சங் கொஞ்சமாக மலர்ந்தது. தன்னையுமறியாமலே எழுந்தாள். பதுமைபோல் ஆடாது அசையாது நடந்தாள். நச்சியும் அவளை நோக்கி ஒரு 'ரிதும்' நடை போட்டு வந்தான். இருவரும் ஒருவரையொருவர் பிரேமையுடன் பார்த்துப் புன்முறுவல் பூத்தனர். ரோஸி அவனது கையைப் பற்றினுள். நச்சி அவளுடைய இடையை இலாகவமாக வளைத்தான். கிராமபோன் இசைக்கேற்ப அவர்கள் நடனமாட ஆரம்பித்தார்கள். கீறல் விழுந்த அந்த இசைத்தட்டின் எங்கோ ஓர் இடத்தில் ஊசி பிசகிப் போய் ஒரே 'அடி'யைத் திரும்பத் திரும்ப இசைத்தது. அதனுல் நச்சியும் ரோஸியும் வெகு நேரம் வரையில் நடனமாடினுர்கள்.

சோர்ந்து போன ரோஸி அவன் பிடியிலிருந்து நழுவி நின்று, ''டார்

ஸிஸ்! உனக்கு ட்விஸ்ட் டான்ஸ் ஆடத் தெரியுமா?'' என்று போதையுடன் கேட்டான். தன்னிடமிருந்த ஓர் இசைத் தட்டை எடுத்து வந்தான். சற்று நேரம் அவர்கள் டுவிஸ்ட் நடனம் ஆடினார்கள். டாப் டான்ககூட ஆடுவேன்'' என்றான் நச்சி.

''சரி; அதையும்தான் ஆடிக் காட் டேன்?'' என்றவாறு நச்சி வாங்கி வந்த இன்னோர் இசைத்தட்டைக் கிராம போனில் பொருத்தி இயக்கினாள் ரோஸி. அது ஒரு பழங்காலத்துத் தமிழ் சினிமா காமிக் பாட்டு!

நச்சிக்குக் குஷியாகி விட்டது. அவன் ஆட ஆரம்பித்தான்.

''ஓ!... என்ன மேன், டாப் டான் சுன்னு சொல்லிப்பிட்டு டப்பாங்குத்து டான்ஸ் ஆடறே?'' என்று கை கொட்டி நகைத்தாள் ரோஸி.

''இதுதான் எங்க ஊர் டான்ஸ்! இதை வெள்ளைக்காரன் காப்பி அடிச் சுக்கிட்டுப் போயி 'டாப் டான்சு'ன்னு பேரு வைச்சுப்பிட்டான்!'' என்று சொல்லி நச்சியும் நகைத்தான்.

இருவரும் சாப்பாட்டு அறைக்குச் சென்று மாலை உணவு உண்டனர்.

''ரோஸி! ஒரு விஷயம்...'' என்று பேச்சை ஆரம்பித்தான் நச்சி.

''என்ன மேட்டர், டார்லிங்?'' என்று அன்பொழுக வினவினாள் ரோஸி.

''எனக்கு இப்ப ஒரு பதினைஞ்சு ரூபா வேணும்.''

''வாட்?....''

''கோபிச்சுக்காதே, மிஸி! புதுசா மூணு ரெக்கார்டுகள் வாங்கணும். நாளைக்குள்ளாற ஒரு பாட்டுக்கு டியூன் போட்டுக் கொடுக்கணும். இல்லேன்னா எங்க டைரக்டர் ரொம்பவும் சிடாய்ப் பான். அதுக்குத்தான் கேக்கிறேன்.''

''ஓ..... நீ எப்பப் பார்த்தாலும் 'மணி' கேக்கிறதுக்குத்தான் இங்கே வர்றே; என்னைப் பார்க்க வர்ற தில்லே!'' என்றாள் ரோஸி.

''பாத்தியா, மிஸ்டேக் பண்ணிக் கிறயே! பணம் இன்னா, பணம்? இன்னைக்கு வரும், நாளைக்குப் போவும். நீ கிடைப்பாயா? உன்னை நான் எவ் வளவு டீப்பா லவ் பண்றேன் தெரி யுமா? ஐ லவ் யூ, டியர்!''

''நோ நோ, மிஸ்டர் நாச்! என்னை ஏமாத்தறே? சீட் பண்றே!''

''அப்படீன்னா சரி; நீ ஒண்ணும் தரவேணாம். நான் போறேன்'' என்று விறைப்பாகச் சொல்லி விட்டு எழுந் தான் நச்சி.

ரோஸி அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். பிறகு அமைதியாக எழுந்து போய், அவன் கேட்ட தொகையைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, ''இப்ப ஹாப்பி தானே?'' என்று சிரித்தாள்.

நச்சி அவளுடைய சாம்பல் நிறக் கண்களை நேருக்கு நேர் உற்று நோக்கி னான். சிறிதுநேரம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, ''ஆல் ரைட்! நான் வரட்டுமா ரோஸி?'' என்றவாறு அங்கிருந்து மெதுவாக வெளியேறினான்.

இரவு மணி ஏழு இருக்கும். செகண்ட் லேன் பீச் ரோட்டில் பஸ்ஸை விட்டு இறங்கிய நச்சி துறைமுகத்தை நோக்கி நடந்தான்.

துறைமுகத்துக்கு வலது பக்க வாட் டில் செல்லும் ஒரு சிறிய சாலையின் கற்சுவர் ஓரம் தன்னந்தனியே நின்று கொண்டிருந்தான் சபேசன்.

''இன்னா, பிரதர்! இன்னைக்கு வந்த கப்பலிலே உன் அப்பாரைப் பார்த் தியா?'' என்று கேட்டுக் கொண்டே அவனருகில் சென்றான் நச்சி.

''இல்லே, அண்ணே! இந்தக் கப்ப லிலும் அவருக்கு இடம் கிடைக்க வில்லையாம்!'' என்று சொல்லும்போதே சபேசனுக்கு அழுகை அடைத்துக் கொண்டு வந்து விட்டது.

நச்சி இதைக் கேட்டு மிகவும் மனம் வருந்தினான். ஆனாலும் அதை வெளி யில் காட்டிக் கொள்ளாமல், அவ னுக்கு ஆறுதல் கூறித் தைரியப் படுத்தி அழைத்துக்கொண்டு போய், ஒரு ஹோட்டலில் சாப்பிட்டு அதற் குரிய 'பில்'லைத் தானே கொடுத்து விட்டு வெளியே வந்து, ''தம்பி! இன் னைக்கு நீ சொல்லிக் கொடுத்த ரெண்டு இங்கிலீஷ் வார்த்தைகளை வைச்சுக்கிட்டுப் பதினைஞ்சு ரூபாய் சம்பாரிச்சேன். அதிலே உனக்கு ஞாய மாப் பங்கு கொடுக்க வேண்டியது தான். ஆனால் விஷயத்தைச் சொல்லி அதைக் கொடுத்தால் நீ வாங்க மாட் டேன்னு எனக்குத் தெரியும். அதனா லேதான் ஓட்டல் 'பில்'லை நான் கொடுத்துப்பிட்டேன்'' என்றான் குறும் பாகச் சிரித்து.


சபேசனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனைப் பேந்தப் பேந்தப் பார்த்து விழித்தான்.

''சரி, வா! இன்னைக்கு நான் உன்னோடு வீட்டுக்கு வரப்போறேன்!'' என்றவாறு நடந்தான் நச்சி. சபேசனின் மனம் இப்போதுதான் சற்றுத் தெம்பு அடைந்தது. மௌனமாக அவனைப் பின்தொடர்ந்தான். (தொடரும்)

எங்கள் தாம்பத்ய வாழ்வு

கசந்தது

அசதியும் சலிப்பும் மேவிட
'வாழ்வாவது மாயம்'
என்று எண்ணத் தோன்றியது





அதிர்ஷ்ட வசமாக நாங்கள் ஒரு டாக்டரைக் கலந்தாலோசித்தோம். உற்சாகமின்மையும் இனம் புரியாத கவலையும் பெரும்பாலும் சக்திக் குறைவின் அறிகுறிகள் என்றார் அவர். ஹார்லிக்ஸ் தினம் தவறாமல் பருகி வந்தால் இழந்த ஆரோக்கியத்தையும் சக்தியையும் மீண்டும் பெறலாம் என்றும் டாக்டர் சொன்னார்.



ஆரம்பத்தில் குணம் சற்று சாவதானமாகத்தான் தெரிந்தது. பிறகு எங்கள் வாழ்வில் கவிந்திருந்த இருள் நீங்கி இன்பம் ஒளி பாய்ச்சியது. களிப்பும் கும்மாளமுமாகத் திகழ்ந்தது எங்கள் வீடு. ஹார்லிக்ஸ் அளிக்கும் நற்பலனை உணர்ந்துள்ள நாங்கள் மீண்டும் அந்த அவல நிலைக்கு உள்ளாக மாட்டோம் என்று சொல்லவும் வேண்டுமா!



ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!



கியூவரிசைக் கதைகள்

தமிழ்வாணன்

"அடா! நீங்களா? இங்கே எங்கே வந்தீர்கள்?'' என்று மாதங்கி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''நீங்கள் இங்கே வந்திருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை'' என்று வசந்தனும் மிகுந்த ஆச்சரியத்துடன் பதில் அளித்தான்.

அவர்கள் இருவரும் ஒரு ஸினிமாக் கொட்டகை வாசலில் டிக்கெட் வாங்குவதற்காகக் கியூ வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள்.

''நீங்கள் அடிக்கடி படம் பார்ப்பதுண்டு போலிருக்கிறது'' என்றாள் மாதங்கி.

''இல்லை, இல்லை. இந்தப் பக்த மன்மத தாஸர் படத்தை அம்மா பார்க்க வேண்டும் என்றாள். அதற்காக நாளைக்கு ரிஸர்வ் செய்ய வந்தேன்'' என்றான் வசந்தன்.

''ஓ!'' என்று மாதங்கி சொன்னாள்.

''தெய்வ பக்தர் படமல்லவா?'' என்று வசந்தன் தெரிவித்தான்.

''ஆமாம்! ஆனால் இதை இண்டர்வெல் வரை வயது வந்தவர்கள் மட்டுமே பார்க்கலாமாம். பிறகுதான் சிறுவர்கள், சிறுமிகள் அநுமதிக்கப் படுவார்களாம். குழந்தைகள் கட்டாயம் பார்த்தாக வேண்டிய படமாம்!''

''அப்படியா?''

''ஆமாம்! அனேகமாகப் பக்தர்கள் பால்யத்தில் சிற்றின்பத்தில் மூழ்கி விடுகிறார்கள். பணம் போய் விடுகிறது. உடம்பும் கெட்டுப் போய் விடுகிறது. உடனே அவர்களுக்கு உலகம் உண்மையல்ல, மாயை என்ற ஞானம் ஏற்பட்டு விடுகிறது. இந்தப் பக்த மன்மததாஸரை அந்தக் காலத்துப் பதிவிரதை ஒருத்தி அவர் ஒரு சின்னப் பையனாகப் போக வேண்டுமென்று சபித்து விட்டாளாம். இண்டர்வலுக்குப் பிறகு பக்தப் பையனாக வருகிறாராம். ஸினிமாக் கதைப் புத்தகத்தில் போட்டிருக்கிறது. இப்போது புராணப் படம் எப்படிப் பிடித்திருக்கிறார்கள் என்று பார்க்க வந்தேன்'' என்றாள்.

''டிக்கெட் விற்கும் ஜன்னல் திறக்கவில்லை. அதற்குள்ளேயே இப்படிக் கூடியிருக்கிறது. மன்மதன் என்ற வார்த்தை அடிபடுகிறதல்லவா? பின்னால் நிற்பவர்கள் தள்ளிக் கொண்டே வருகிறார்களே! டிக்கட்டைக் கூட்டத்தில் இடிபடாமல் கடையில் போய் வாங்கிக் கொண்டால் என்ன?'' என்று வசந்தன் கூறினான்.

''அது நல்ல யோசனை'' என்று சொல்லிக் கொண்டே மாதங்கி வரிசையை விட்டு விலகி அப்பால் சென்றாள். வசந்தனும் பின் தொடர்ந்து சென்றான். இருவரும் ஒரு மரத்தடியில் போய் நின்றுகொண்டார்கள்.

''ரஞ்சனி எங்கே போனாள்?'' என்று வசந்தன் விசாரித்தான்.

''டிக்கட் விற்கப்போன பெண்ணைப் பற்றிக் கேட்கிறீர்களா? ரஞ்சனியின் தந்தை தலைமை உபாத்தியாயினிக்கு டெலிபோன் செய்து தம் பெண்ணைப் பற்றி விசாரித்தார் என்றுதானே சொன்னேன்?'' என்று மாதங்கி கேட்டாள்.

''ஆமாம்!'' என்றான் வசந்தன்.

மாதங்கி ஒரு நிமிடம் யோசனை செய்து விட்டுக் கதையைத் தொடர்ந்து கூறினாள்:





மணி ஒன்பதாகியும் ரஞ்சனி இன்னும் வீட்டுக்கு வரவில்லை என்று அவள் தந்தை சொன்னதைக் கேட்டபோது சஞ்சல குமாரிக்கு இடி விழுந்தாற்போல் இருந்தது. தலை சுற்றியது. மயக்கமாகக் கீழே விழுந்தாள். ஆனால், ஏதாவது சட்டென்று பதில் சொல்லியாக வேண்டுமே என்று சமாளித்துக் கொண்டாள்.

''ரஞ்சனி சாயங்காலம் வகுப்பு விட்டதும் போய் விட்டாளே. ஒரு சிநேகிதி வீட்டுக்குப் போய் நாடக ஒத்திகை பார்க்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். சீக்கிரமே வந்து விடுவாள். கவலைப்பட வேண்டாம். நானே போய்ப் பார்த்து அழைத்துக்கொண்டு வந்து விடுகிறேன்'' என்று கூறிப் பேச்சை முடித்துவிட்டு டெலிபோன் குழாயையும் வைத்து விட்டாள்.

பிறகு அவளுக்குத் தான் ஏன் இப்படிப் பொய் சொன்னேம் என்றிருந்தது. டிக்கெட் விற்க அனுப்பி யிருக்கிறேனென்று நிசத்தைச் சொல்ல நமக்கு ஏன் தைரியமில்லை?

டெலிபோன் மணி மறுபடியும் அடித்தது. குழாயை எடுக்கப் பயப்பட்டாள். ரஞ்சனியின் தந்தை மேலும் பெண்ணைப் பற்றிக் கேட்டால் என்ன செய்வதென்று திகில். டெலிபோன் மணி தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு நின்றது. இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அது மறுபடியும் அடிக்கத் தொடங்கியது. சஞ்சல குமாரி அதனிடம் போகவில்லை.

ரஞ்சனி பங்களாவுக்குள் நுழைந்தவள், ''ஸார்!'' என்று குரல் கொடுத்தாள்.

பதில் இல்லை!

ஹாலுக்குப் பக்கத்திலிருந்த அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ''மறுபடியும் 'ஸார்' என்று கூப்பிட்டுக் கொண்டே அந்த அறைக்குள் சென்றாள். அதில் மேஜை நாற்காலிகள், சோபாக்கள் எல்லாம் போடப் பட்டிருந்தன. யாரும் கண்ணில் படவில்லை.

அப்போது ஹால் விளக்குகள் அணைந்தன. வாசற்கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டது. ரஞ்சனி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''யார் உள்ளே?'' என்று கோபமாகக் கேட்கும் சத்தம் காதில் விழுந்தது.

ஒருவர் அறை வாசற் பக்கம் வந்து நின்று தம் இரு கைகளையும் நீட்டி வழி மறித்து நின்றார். முகத்தில் தாடி, மீசையுடனிருந்த அந்த மனிதரைப் பார்த்ததும் ரஞ்சனி நடு நடுங்கிப் போனாள். பயத்தினால் அவளுக்குக் கூச்சலிடக்கூட நா எழவில்லை. ''நான் தோட்டத்துக்குப் போயிருந்த சமயம் பார்த்து உள்ளே நுழைந்தாயாக்கும்? என்னென்ன எடுத்தாய்? மரியாதையாகச் சொல்லி விடு'' என்று அந்த மனிதர் நிதானமாகக் கேட்டார்.

''யாரைப் பார்த்து ஸார், அப்படிக் கேட்கிறீர்கள்? நான் எங்கள் பள்ளிக்கூடக் கட்டட நிதி நாடகத்துக்கு டிக்கெட் விற்க வந்தேன். உங்களுக்குச் சந்தேகமிருந்தால் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிக் கைப் பையைத் திறந்து காண்பித்தாள்.

அந்த மனிதர் அதைத் தம் கையில் வாங்கிக்கொண்டு உள்ளே கவனித்தார். நாலைந்து டிக்கெட் புத்தகங்கள், ஒரு வர்ணக் கைக்குட்டை, ஒரு சிறிய பௌடர் டப்பா, ஸ்டிகுலோன் பாட்டில், நாலைந்து சாக்லேட்டுகள் முதலியன இருந்தன.

''சரிதான்!'' என்றார் அந்த மனிதர்.

''வழி விடுங்கள் ஸார்! நான் போக வேண்டும்!'' என்று ரஞ்சனி சொன்னாள்.

''டிக்கட் விற்காமலா போகிறது? போ, அந்த ஸோபாவில் உட்கார்ந்து கொள்'' என்று அறைக்குள் சுவரோரம் போட்டிருந்த ஒரு ஸோபாவைக் காண்பித்தார்.

ரஞ்சனி அவரைக் கண்காணித்தவண்ணம் பின் பக்கமாகவே நடந்து சென்று ஸோபாவில் உட்கார்ந்தாள். அந்த மனிதர் தமது கையிலிருந்த அவளது பையுடன் அவளுக்கு எதிரில் ஒரு நாற்காலியில் அமர்ந்தார். பிறகு பையிலிருந்த டிக்கெட்டுகளைக் கையில் எடுத்துப் புரட்டிப் பார்த்தார்.

''டிக்கட்டுகள் எல்லாம் அப்படியே இருக்கின்றனவே. ஒன்றுகூட விற்கவில்லையே?'' என்றார்.

''இதெல்லாம் இன்று சாயங்காலந்தான் வாங்கிக் கொண்டு வந்தேன். இந்த வீட்டிலும் ஒன்று விற்கலாம் என்றுதான் வந்தேன். நான் நிறைய விற்றிருக்கிறேன்'' என்று ரஞ்சனி பெருமையுடன் கூறினாள்.

''எத்தனை ரூபாய்க்கு விற்றிருப்பாய்?''

''இரண்டாயிரம் ரூபாய்க்கு மேலேயே இருக்கும்?''

''தேவலையே! நீங்கள் எத்தனை பெண்கள் இது மாதிரி டிக்கெட் விற்கிறீர்கள்?''

''இருபது பேருக்கு மேலேயிருக்கும்.''

''நீங்கள் வயசுப் பெண்கள் வீடு வீடாக நுழைகிறது. டிக்கெட் வாங்கிக் கொள்ளச் சொல்லிப் பிராணனை வாங்குகிறது. ஒரு வீட்டில் பெண் பிள்ளைகள் இருப்பார்கள். இருக்க மாட்டார்கள். இந்த வீட்டில் ஸ்திரீகள் யாருமே யில்லை. நீ மட்டும் தனியாக வந்திருக்கிறாய் இப்போது......'' என்று அந்த மனிதர் இழுத்தார்.

''என் பையைக் கொடுங்கள். நான் போகிறேன்'' என்று ரஞ்சனி எழுந்தாள்.

''போகலாம், உட்கார். நீங்கள் இப்படி வருகிறதிலே ஆபத்து என்று உங்களுக்குத் தோன்றவில்லையே! மனிதர்களில் நல்லவர்களும் இருப்பார்கள்; கெட்டவர்களும் இருப்பார்கள். கெட்டவர்கள்தான் அதிகம். அதுவும் உன்னைப் போன்ற அழகான பெண்ணைப் பார்த்தால்.....''

''என்ன ஸார், அயோக்கியத்தனமாகப் பேசுகிறீர்கள்!'' ரஞ்சனி சீறி விழுந்தாள்.

''கோபித்துக் கொள்ளாதே பெண்ணே! உன் ஹெட்மிஸ்ட்ரஸ் பெயர் என்ன?''

''குமாரி சஞ்சல குமாரி.''

''என்னது? இன்னொருதரம் சொல்லு.... சஞ்சல.....''

''குமாரி சஞ்சல குமாரி!''

அந்த மனிதர் சில நிமிஷங்கள் ரஞ்சனியைப் பார்த்தவண்ணம் மௌனமாக இருந்தார். பிறகு தமது கையில் கட்டியிருந்த கைக் கடிகாரத்தைக் கழற்றினார். ''இது விளிம்பிலும் உள்ளேயும் வைரம் பதித்தது. இரண்டாயிரம் ரூபாய் விலை'' என்று கூறிக் கொண்டே அதை ரஞ்சனியின் பைக்குள் போட்டார். தமது விரலிலிருந்து ஒரு நவரத்தினம் இழைத்த மோதிரத்தையும் கழற்றிப் பைக்குள் போட்டார். ''இதை மூவாயிரம் ரூபாய்க்கு வாங்கினேன்'' என்று கூறினார். பிறகு, ''உன் பெயர் என்ன அம்மா?'' என்று விசாரித்தார்.

''ரஞ்சனி!''

''அழகான பெயர். இப்போது நீ, நான் சொன்னபடி கேட்க வேண்டும் ரஞ்சனி!''

ஸோபாவின் மீதிருந்த ஒரு புத்தகத்தை ரஞ்சனி அவர் மீது வீசி எறிந்து விட்டு எழுந்திருந்து கதவுப் பக்கம் விரைந்தாள்.

''கதவைச் சாத்தித் தாளிட்டிருக்கிறேன். நீ வெளியில் போக முடியாது. நீ இங்கே கூச்சல் போட்டாலும் வெளியில் கேட்காது. பேசாமல் வந்து உட்கார்ந்து கொள்'' என்றார்.

ரஞ்சனிக்குத் தான் தப்புவதற்கில்லை என்று தெரிந்தது. மறுபடியும் ஸோபாவில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''உன் ஹெட்மிஸ்ட்ரஸுக்கு டெலிபோன் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''இருக்கிறது!''

''நீ அந்த அம்மாளை டெலிபோனில் கூப்பிட வேண்டும். கூப்பிட்டு நான் சொல்லிக் கொடுப்பதுபோல் பேச வேண்டும்'' என்றவர், அவள் என்ன பேச வேண்டும் என்பதைப் பற்றி விவரமாகத் தெரிவித்தார். அந்த விவரங்களைக் கேட்டு ரஞ்சனி பதறிப் போனாள்.

அவள் டெலிபோன் குழாயை எடுக்கப் போனபோது, ''ரஞ்சனி! நீ நான் சொல்லிக் கொடுத்ததைத் தவிர வேறு ஒன்றுமே பேசக் கூடாது. பேசினால் உடனேயே போலீசுக்கு டெலிபோன் செய்வேன். நீ என் அறைக்குள் புகுந்து என் கடிகாரத்தையும், மோதிரத்தையும் திருடிப் பைக்குள் வைத்திருக்கிறாய் என்று உன் பையோடு உன்னை அவர்களிடம் ஒப்புவித்து விடுவேன்'' என்று எச்சரித்தார். ரஞ்சனி தன் தலையை ஆட்டிவிட்டுச் சஞ்சல குமாரியின் எண்ணைக் கூப்பிட்டாள். அப்போது மணி அடித்ததைக் கேட்டுத்தான் சஞ்சல குமாரி பயந்து கொண்டு அதை எடுக்காமல் இருந்தது.

ரஞ்சனி நாலைந்து முறைகள் தொடர்ந்து கூப்பிடவே, சஞ்சல குமாரி குழாயை எடுத்துக் கேட்டாள். ''ஹெட்மிஸ்ட்ரஸ், நான்தான் ரஞ்சனி. தாங்கள் உடனேயே ஒரு டாக்ஸி வைத்துக் கொண்டு தேனும்பேட்டை இல்லை நகர் ஏழாம் நம்பர் குறுக்குத் தெரு ஐந்தாம் நம்பர் வீட்டுக்கு வரவேண்டியது. இதைப் பற்றி யாருக்கும் தெரிவிக்கக் கூடாது. தெரிவித்தாலோ, அல்லது யாரையாவது உதவிக்கு அழைத்துக் கொண்டு வந்தாலோ என்னை நீங்கள் உயிருடன் காண முடியாது'' என்று கேட்டது.

சஞ்சலகுமாரி இந்த டெலிபோன் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்டாளாயினும், என்ன செய்வதென்று யோசனை செய்து கொண்டிருக்க வில்லை. கால் மணி நேரத்துக்கெல்லாம் அவள் ரஞ்சனி தெரிவித்த வீட்டு வாசற்படியில் நின்றிருந்தாள். வாசற்பக்கத்திலும், முன் ஹாலிலும் விளக்கில்லை. அறையில் மட்டுமே விளக்கு வெளிச்சம் தெரிந்தது.

''வாங்க ஹெட்மிஸ்ட்ரஸ்!'' என்று ஹாலில் நின்றிருந்த ரஞ்சனி கூப்பிடவே, சஞ்சலகுமாரி அவளை அணைத்துக் கொண்டாள். ''நீ பத்திரமாயிருக்கிறாயா? உன்னைப் பார்க்கப் போகிறேனோ என்று இருந்தது. இனி மேல் எனக்கு என்ன நேர்ந்தாலும் பயமில்லை'' என்று கூறினாள். ரஞ்சனி அவளை அறைக்குள் அழைத்துச் சென்றாள். தோட்டத்தில் மறைவாக நின்று கொண்டிருந்த அந்த மனிதர் அவர்களைப் பின்தொடர்ந்து சத்தமிடாமல் வந்து கொண்டிருந்தார். வரும் போது ஹால் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு வந்தார்.

அவர் அவர்கள் நின்றிருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்துக்கு அப்பால் போய் நின்று கொண்டு, ''ரஞ்சனி! இனி நீ போகலாம்'' என்றார்.

''நான் தனியே போக மாட்டேன். என் ஹெட்மிஸ்ட்ரஸை அழைத்துக்கொண்டு தான் போகப் போகிறேன்'' என்றாள் ரஞ்சனி.

''அவளை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ போ!'' என்று பதில் வந்தது.

''என்ன சொல்கிறாய்?'' என்று அந்தத் தலைமை உபாத்தியாயினி கேட்டு இடுப்பில்

செருகியிருந்த கத்தியை எடுத்து ஓங்கினன். ''முன்னே என் மனத்தைக் குத்தினய். இப்போது என் உடலில் குத்து, சஞ்சலா!'' என்று கூறிய அந்த மனிதர் அவள் எதிரில் போய் நின்ருர்.

சஞ்சல குமாரியின் கையில் இருந்த கத்தி கீழே விழுந்தது. ''யார்! நீங்களா? கோபி ரத்னமா?'' என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்தும் புறப்பட்டன. அடுத்த நிமிஷம் ரஞ்சனி தன் கண்களை இரண்டு கைகளாலும் மூடிக் கொண்டு சுவரின் பக்கம் பார்த்து நின்றிருந்தாள். ஏனென்ருல், குமாரி சஞ்சல குமாரி எம். ஏ. பி. டி., எப். ஆர். எஸ். தாடி மீசை வளர்த்திருந்த அந்த மனிதரை அணைத்துக் கொண்டிருந்தாள்.

''அடாடா! அந்தக் குழந்தை இருக்கிறது ஞாபகமில்லையே!'' என்று சஞ்சலா கூறித் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

தானும் சஞ்சலாவும் கல்யாணம் செய்து கொள்வதாக நிச்சயமாயிருந்ததென்றும், ஏதோ தப்பபிப்பிராயம் காரணமாக அது நின்று போயிற்றென்றும், தாம் அது முதல் தீட்சை வளர்த்து வருவதாகவும் இரண்டு தினங்கள் முன்னர்தான் அந்தப் பங்களாவுக்குக் குடி வந்ததாகவும் கோபிரத்னம் ரஞ்சனியிடம் தெரிவித்தார். தாம் அவளை விவாகம் செய்துகொள்ளும் வரையில் தாடி மீசை வளர்க்கத் தீர்மானித்து அப்படிச் செய்ததாகவும் கூறினர்.

''ரொம்ப சந்தோஷம் ஹெட்மிஸ்ட்ரஸ், நான் போய் வருகிறேன்'' என்று கூறி ரஞ்சனி கிளம்பினுள். பிறகு திரும்பி, ''எங்கள் பள்ளிக்கூடக் கட்டிட நிதிக்குக் கலை நிகழ்ச்சிகள் வைக்கிருர்கள். அதற்கு நூறு ரூபாய் டிக்கட் ஐந்தாவது வாங்கிக் கொள்ளுங்கள் ஸார்!'' என்று தன் வழக்கப் படி ரஞ்சனி கேட்டாள்.

சஞ்சல குமாரியும் அவள் வருங்காலப் புருஷனும் சிரித்தார்கள்.

''நான் உன் ஹெட்மிஸ்ட்ரஸ் பெயரைக் கேட்டதுமே நிதிக்காக என் மோதிரம், கடிகாரம் இரண்டையும் கழற்றி உன் பையில் போட்டுவிட்டேன். போலீஸில் சொல்லே னென்று சும்மா பயமுறுத்தி வைத்தேன்'' என்ருர் கோபிரத்னம்.

''நான் அவளை அழைத்துக் கொண்டு வந்து விடுவதாக அவள் அப்பாவுக்கு டெலிபோனில் சொல்லி விருக்கிறேன்'' என்ருள் சஞ்சலகுமாரி.

''இரண்டு பேருமே கொண்டு போய் விடுவோம்!'' என்று கோபிரத்னம் கூறினர்.

LDIT தங்கி கதையைக் கூறி முடித்த பிறகு கியூவைக் கவனித்தாள். இன்னும் இருபது, முப்பது பேர் இருந்தார்கள்.

''நாம் டிக்கட் வாங்கப் போகலாமே!'' என்ருன் வசந்தன்.

அட்டைப் பட விளக்கம்

காமனை எரித்தார் கண் நுதல் கடவுள்! இறந்தும் இறவாப் புகழ்பெற்ருன்!
எழில் உருவான அவனைக் கணவனுகப் பெறும் பாக்கியம் செய்திருந்தாள் ரதி!
அவன் மரணத்துக்காக அழுது புலம்பிய ரதிக்குச் சிவபெருமானே
ஒரு வரம் ஈந்தார்; 'நீ நித்திய சுமங்கலி' என்று!
அது மட்டுமா? 'இந்த ரதி மன்மதனின் ஆட்சிக்குட்படாத
உயிரினம் இல்லை' என்றும் பெருமைப்பட வைத்தார்.
இன்று உலகம் இவ்வளவு வளர்ந்துள்ளதற்கு காரணம் அந்த அமர தம்பதிகளே.
இதுவோ வசந்த காலம். இளந்தென்றல் இனிமையாக வீசும் காலம்.
கரும்பு வில்லோனின் மலர் ஆயுதத்தைக் கையில் ஏந்திக்
கிளியில் ஏறி ரதி திக் விஜயம் செய்யப் புறப்பட்டு விட்டாள். அதைக் காண
இளம் பிராயத்தினர்களான அந்தக் காதலர்களுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி!
அதோ பாருங்கள்! ஓவியர் மணியம் தீட்டியுள்ள இந்தச் சித்திரத்தில்
வைத்த கண் வாங்காமல் ரதியையே பார்த்துக்கொண்டு இன்ப சாம்ராஜ்
யத்தை எட்டிப் பிடிக்க முயல்கிருர்கள் அவர்கள்!



''இத்தனை நாழி காத்துக்கொண்டிருந்தாகி விட்டது. இன்னும் அந்தக் கூட்டமும் கலையட்டும். அதுவரைக்கும் நீங்கள் ஏதாவது ஒரு கதை சொல்லுங்கள்'' என்று மாதங்கி கேட்டாள்.

''எனக்குத் திடீரென்று கதை சொல்ல வராது. ஒரு சினிமா நட்சத்திரத்தைப் பற்றி ஒரு கதை கொஞ்சம் ஞாபகம் இருக்கிறது'' என்று வசந்தன் முனகினான்.

''அதைத்தான் சொல்லுங்களேன்!'' என மாதங்கி கூறவே வசந்தன் சொல்லலுற்றான்:

ஒரே ஒரு பட்டணத்தில் கண்ணம்மா என்று ஒரு சினிமா நடிகை இருந்தாள். அவளைக் கேவலம் சினிமா நட்சத்திரம் என்று சொல்வதில்லை. சினிமா ராணி என்றே புகழ்வார்கள். அவள் எப்போது பிறந்தாள், எப்போது பாவாடை மட்டும் கட்டிக்கொள்ள ஆரம்பித்தாள், எப்போது மேலாக்குப் போட்டுக்கொண்டாள் என்ற விவரங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. ஒரு பத்திரிகை அவள் ஒரு நாளைக்கு எவ்வளவு முறை எந்தெந்த நேரத்தில் தும்மினாள், எப்படித் தும்மினாள் என்பதைப் பற்றிய விவரங்களைத் தந்து அதைப் பற்றி வர்ணித்தும் இருந்தது. அவளைப் பற்றி அவளுக்கே தெரியாத பல தகவல்கள் அவள் விசிறிகளுக்குத் தெரியும். அவள் விடியற்காலையில் எழுந்து வாசலில் தண்ணீர் தெளித்து, பெருக்கிக் கோலம் போடுவது வழக்கம் என்றும், அவள் உத்தம கன்னிகையாகவே காலம் கழிக்கத் தீர்மானித்திருக்கிறாள் என்றும் ஒரு பத்திரிகை எழுதியது.

அதே ஊரில் அனுமந்த குமார் என்ற ஒரு பணக்கார வாலிபன் இருந்தான். அவன் கல்லூரி மாணவன். அவன் கண்ணம்மா நடித்துள்ள பத்துப் படங்கள் ஒவ்வொன்றையும் பத்து முறை பார்த்திருக்கிறான். அவள் படமென்றால் அவனுக்குத் தனி மோகம். நாளடைவில் அவனுக்கு அவள் மீதே மோகம் ஏற்பட்டு விட்டது.

அவன் தந்தை அவனுக்காக எத்தனையோ அழகான பெண்களைப் பார்த்தார். ஆனால் அவன் கண்ணம்மாளைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று கூறி விட்டான்.

அவன் தன் காதலைத் தெரிவித்து அவளுக்குப் பல கடிதங்கள் எழுதினான். பயனில்லை. அவள் இரவு பட ஷூட்டிங் முடிந்து திரும்பி வரும்போது அவன் பங்களா வாசலில் நின்று கொண்டிருப்பான். அவள் அவனைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை.

அவனுக்கு அவள் பைத்தியம் முற்றி விட்டது. ஒரு நாள் அவள் தன் பங்களா பால்கனியில் நின்று கொண்டிருந்தாள். கீழே நின்ற அநுமந்தன் அவளைப் பார்த்துப் பாட ஆரம்பித்து விட்டான்.

> விளையாடி நீயெனக்கு,
> மேவும்விரல் நானுனக்கு
> பூணும்வடம் நீயெனக்கு
> புதுவயிரம் நானுனக்கு
> பாணமடி நீயெனக்கு
> பாண்டமடி நானுனக்கு
>
> காதலடி நீயெனக்கு
> காந்தமடி நானுனக்கு
> முல்லைநிகர்ப் புன்னகையாய்
> மோதுமின்பமே கண்ணம்மா!

என்று பாடினான். பிறகு நடனம் செய்யக் கூடத் தொடங்கிவிட்டான்.

அவள் தன்னைக் கலியாணம் செய்து கொள்ளும்வரை அல்லது உயிர் போகிறவரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்தான். அவள் வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டான். போலீஸ்காரர்கள் அவனைத் தூக்கிக் கொண்டு சென்றார்கள். அவன் தந்தை, கண்ணம்மா தன் மகனைக் கல்யாணம் செய்து கொள்ளும்வரை எந்தப் படத்திலும் நடிக்கக் கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்க 'ரிட்' மனு தாக்கல் செய்யலாமா என்பதைப் பற்றிப் பெரிய வக்கீல்களை யோசனை கேட்டுக் கொண்டிருந்தார்.

நாளடைவில் விஷயம் பெரியதாகி விட்டது. மாணவர்கள் சிலர் அவனுக்கு அநுதாபம் காட்டும் முறையில் ஒரு நாள் பள்ளிக்கூடத்துக்குப் போகாதிருந்தார்கள். சினிமா ராணி வீட்டு வாசலில் கூடி ''கண்ணம்மா ஒழிக! அநுமந்த குமார் வாழ்க!'' என்று கோஷமிட்டார்கள். அதிதீவிர முன்னேற்ற வாலிபர்கள் சங்கம், மாணவர்களும், மாணவிகளும் கண்ணம்மா நடிக்கும் படத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

இந்தக் கிளர்ச்சி வலுக்காமல் இருக்கக் கண்ணம்மா, அநுமந்தகுமாரைக் கலியாணம் செய்து கொண்டாக வேண்டும் என்று இந்திய சர்க்கார், தற்காப்பு அவசரச் சட்டப்படி உத்தரவு பிறப்பிப்பதைப் பற்றி யோசனை செய்தது. அதே சமயத்தில் போலீஸ் அதிகாரி கண்ணம்மாவுக்கு டெலிபோன் செய்து, அந்தப் பையன் சத்தியாக்கிரகத்தை நிறுத்தும் முறையில் கல்யாணத்துக்கான முயற்சி செய்து பார்க்க வேண்டும் என்று எச்சரித்தார்.

அன்று மாலை சினிமா ராணி தோட்டத்தில் நடந்தே 'கேட்' அருகில் வந்தாள். அவள் உதடுகளில் அந்தத் தனிப்பட்ட நட்சத்திரப் புன்னகை தோன்றியிருந்தது.

வெளியே காதல் சத்தியாக்கிரகி உட்கார்ந்திருந்தான். அவள் அவனை அன்பு கனியப் பார்த்து, ''அநுமந்தரே! தாங்கள் என்னைக் கலியாணம் செய்து கொள்ளத் தானே ஆசைப்படுகிறீர்கள். இதென்ன பெரிய காரியம்? வாருங்கள் உள்ளே!'' என்றாள். மறு கணம் இரண்டு கூர்க்காக்கள் கேட்டைத் திறந்தார்கள்.

ஹனுமந்த குமார் சினிமா ராணியுடன் அவள் மாளிகைக்குள் சென்றான்.

கூர்க்காக்கள் கேட்டைச் சாத்தினார்கள்.

வசந்தன் இதற்கு மேல் சொல்லாமல் தயங்கினான். டிக்கட் விற்குமிடத்தைக் கவனித்த அவன், ''எல்லோரும் போய் விட்டார்கள். டிக்கட் விற்கும் ஜன்னலைச் சாத்திவிடப் போகிறார்கள்?'' என்று கூறிக் கொண்டே விரைந்து சென்றான். மாதங்கியும் அவன் பின்னால் போனாள்.

''இப்படித்தான்''

'பத்மஸ்ரீ' என்ற பட்டத்தை யார், எதற்காகக் கொடுக்கிறார்களோ என்னமோ, 'காதல்ஸ்ரீ' என்ற பட்டத்தைக் கந்தசாமிக்கு அவனுடைய நண்பர்கள் கொடுத்ததற்குக் காரணம், காதற் கலையில் அவன் அத்தனை வல்லுநனாயிருந்ததுதான்!

அது மட்டுமா, காதல் உலகத்தில் அவன் ஒரு தன்னிகரற்ற தியாகியும் கூட! — ஆம், 'கல்வி பெரிதல்ல, காதல் பெரிதெனக்கு!' என்று பாரதியைப் பின்பற்றிக் கிரதியான அவனைக் கல்லூரியை விட்டே கலிரக்கமின்றி வெளியேற்றி விட்டார், அதன் பிரின்ஸிபால்! அதனாலென்ன, கந்தசாமி கலங்கினானா? இல்லை. கண்ணீர் விட்டானா? இல்லை; 'காதலிப்பது என் பிறப்புரிமை; அந்த உரிமையைப் பறிக்கும் பிரின்ஸிபால் ஒழிக!' என்று கல்லூரி வாசலில் நின்று, ஒரே ஒருமுறையாவது கோஷமிட்டானா? அதுவும் இல்லை. 'மறுபடியும் என்னைச் சேர்த்துக்கொண்டால்தான் ஆச்சு!' என்று ஒரே ஒரு வேளையாவது உண்ணாவிரதம் இருந்தானா? அதுவும் இல்லை!

இத்தகு சிறப்பு வாய்ந்த காதல்ஸ்ரீ கந்தசாமி ஒரு நாள் மாலை ஒரு சினிமாத் தியேட்டருக்கு முன்னால் நின்று அங்கே ஒட்டி வைக்கப்பட்டிருந்த நீச்சல் உடை அழகி ஒருத்தியின் படத்தை ரசித்துக்கொண்டிருந்தபோது, ''அட கந்தசாமியா? கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்து நிற்பது போலல்லவா நிற்கிறாய்? நானும் உன்னைத் தேடிக் கொண்டுதான் வருகிறேன்!'' என்றான் ராமசாமி வியப்புடன்.



''என்ன விசேஷம்?'' என்றான் கந்தசாமி.

''வேறு என்ன விசேஷம் இருக்கப் போகிறது, உனக்கும் எனக்கும்? ஒரு காதல் விஷயமாக உன்னைக் 'கன்ஸல்ட்' பண்ண வந்தேன்.''

''சரி இந்த எஸ்தர் வில்லியம்ஸ் படத்துக்கு முதல் முதலில் இரண்டு டிக்கட் வாங்கு; அதற்குப் பிறகு படத்தைப் பார்த்துக்கொண்டே உன்னுடைய காதலைப் பற்றிப் பேசலாம்!''

''அவ்வளவு நேரம் தாங்காதேடா, அது!''

''சரி, வா! அந்த ஓட்டலுக்குப் போய் இரண்டு கப் காப்பியாவது சாப்பிட்டுவிட்டு....''

''ஊஹூம்; அதற்கும் நேரமில்லை இப்போது. அதோ பார் பின்னழகைக் கொண்டே என்னைப் பித்தனாக்கிவிட்ட அந்த 'பட்டர் ப்ளை'யை?''

அவன் காட்டிய திசையை வெண்டா வெறுப்புடன் பார்த்தான் கந்தசாமி; ஆரணங்கு ஒருத்தி யானைக் குட்டி போல் ஆடி அசைந்து நடந்து கொண்டிருந்தாள்.

''இடையும் சின்ன இடையா இல்லை, நடையும் அன்ன நடையா இல்லையேடா!'' என்றான் கந்தசாமி.

''இல்லாவிட்டால் என்னடா, அழகு சொட்டும் அந்த இடையின் நெளிவுக்கே...''

ராமசாமி முடிக்கவில்லை; அதற்குள் கந்தசாமி குறுக்கிட்டு, ''நிறுத்து. அழகை அநாவசியமாகச் சொட்ட விடாதே! முதலில் அவளை 'பாலோ' பண்ணு; அப்புறம் அவள் வீட்டைக் கண்டு பிடி; அதற்குப் பிறகு என்னை வந்து பார்!'' என்றான் டக்கென்று.

''தாங்க் யூ!''

பறந்தான் ராமசாமி. ''பாவிப் பயல்! 'கன்ஸல்டேஷ'னுக்குப் 'பீ'ஸாக ஒரு கப் காப்பியாவது வாங்கிக் கொடுப்பான் என்று பார்த்தால், அதுகூடவல்லவா வாங்கிக் கொடுக்காமல் போகிறான்!'' என்று அவனைத் திட்டிக் கொண்டே கந்தசாமி திரும்பினான்.

அதற்குள் ராமசாமி அவனுக்குப் பின்னால் 'ஒன் மினிட், ஒன் மினிட்' என்று கத்திக் கொண்டே ஓடி வந்து, ''நான் போவதற்குள் அவள் பஸ்ஸில் ஏறி விட்டாளேடா, இப்

போது நான் என்ன செய்யட்டும்?'' என்றான் பரபரப்புடன்.

''போடா, முட்டாள்! நான் 'பாலோ பண்ணு' என்று சொன்னால் என்னடா அர்த்தம்? 'அவள் நடந்தால் நீயும் நட; இல்லா விட்டால் திரும்பி வந்துவிடு' என்று அர்த்தம்? போடா, அவள் பஸ்ஸில் போனால் நீயும் பஸ்ஸில் போ; அவள் ரயிலில் போனால் நீயும் ரயிலில் போ; அவள் கப்பலில் போனால் நீ ஹெலிகாப்டரில் போ!''

''இவ்வளவு 'கிளி'யரா அப்போதே நீ ஏண்டா சொல்லியிருக்கக் கூடாது? இப்போது அந்த பஸ்....''

''எவ்வளவு தூரம் போனால் என்னடா? ஸ்டாப்புக்கு ஸ்டாப் நின்றுதானே போக வேண்டும் அது? நீ உடனே ஒரு டாக்ஸியைப் பிடித்தால், அது அந்த பஸ்ஸைப் பிடித்து விடுகிறது!''

''ஓ ஆர் ரைட், நான் வரேன்!'' என்று ராமசாமி திரும்ப, அதே சமயத்தில் டாக்ஸி



ஒன்று சற்றுத் தூரத்தில் காலியாகப் போய்க் கொண்டிருப்பது அவன் கண்ணில் பட, ''ஏ டாக்ஸி!'' என்று அதைக் கைதட்டி அழைத்துக்கொண்டே அதற்குப் பின்னால் ஓடினான்.

அவன் தலை மறைந்ததும், ''நன்றாய் வேண்டும், இந்தப் பயலுக்கு! எஸ்தர் வில்லியம்ஸுக்காக இரண்டு டிக்கெட் வாங்க மனமில்லாதவனுக்கு இப்படியாவது செலவழியட்டுமே?'' என்று கருவிக்கொண்டே நடந்தான் கந்தசாமி.

அன்றிரவு மணி பத்துக்குமேல் இருக்கும்; உள்ளே தாளிடப்பட்டிருந்த கந்தசாமியின் வீட்டுக் கதவை வெளியே இருந்தபடி யாரோ 'தடதட'வென்று தட்டினார்கள்.

''யார் அது?'' என்று கேட்டுக்கொண்டே வந்து கதவைத் திறந்தார் கந்தசாமியின் அப்பா கயிலைநாதனார்.

அவரை எதிர்பார்க்காத ராமசாமி விழிக்க, ''என்ன, நீயும் ஒரு 'எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சா?'' என்றார் அவர், கேலியாக.

காதல் உலகில் 'கடைந்தெடுத்த லட்சிய வாதி'யாயிருந்த ராமசாமி அதைப் பொருட்படுத்தாமல், ''ஆமாம்'' என்றான் மிகவும் அலட்சியமாக.

''ஏன், உனக்கும் காலேஜிலிருந்து 'கல்தா' கொடுத்து விட்டார்களா?''

''இல்லை, நானே அதைப் பகிஷ்கரித்து விட்டேன்!''

''அட, என் இயாகியே! உனக்கும் அப்பா இருக்கிறாரா; தண்டச் சோறு போட?''

''இருக்கிறார்; அது அவர் கடமை!''

''ரொம்ப சந்தோஷம், உரிமையில் நீ கொண்டுள்ள உறுதிக்காக! அது இருக்கட்டும், உன்னைப் பெற்ற தோஷத்துக்காகக் காசிக்காவது ராமேசுவரத்துக்காவது போய் வர உத்தேசம் உண்டா, அவருக்கு?''

''தெரியவில்லை!''

''இருந்தால் அவர் போகும்போது எனக்கும் ஒரு வார்த்தை சொல்லச் சொல்; நானும் வருகிறேன்!'' என்று அவன் கன்னத்தில் அறைந்தாற்போல் சொல்லிவிட்டு, அதே வேகத்தில் கதவையும் அவன் முகத்தில் அடித்தாற்போல் அடித்துச் சாத்திவிட்டு, அவர் உள்ளே செல்ல, சாப்பிடுவது தண்டச் சோறாயிருந்தாலும் அதைக் கொஞ்சம் பிகுவோடு சாப்பிட வேண்டுமே என்பதற்காகக் கோபித்துக் கொண்டிருந்த கந்தசாமி, ''இன்னும் ஒரே ஒரு முறை யாராவது வந்து, 'ஏண்டா, சாப்பிடேண்டா!' என்று ஒரு வார்த்தை சொல்ல மாட்டார்களா, நாம் உடனே எழுந்து ஓட மாட்டோமா?'' என்ற தாபத்தால் தன் அறையிலிருந்தபடி எட்டி எட்டிப் பார்க்க, ''அங்கே நின்று அவனை என்னடி பார்த்துக் கொண்டிருக்கிறாய்? இப்போது நீயே சோற்றில் தண்ணீரைக் கொட்டப் போகிறாயா? இல்லை, நானே வந்து கொட்டட்டுமா?'' என்று அவன் எதிர்பார்த்ததற்கு விரோதமாக அவனுடைய அப்பா அவன் அம்மாவை எச்சரிக்க, ''ஆகா! 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்னும் பொன்மொழியையே துருப்பிடித்த இரும்பு மொழியாக்கி விட்டாரே இவர்!'' என்று உள்ளூற நினைத்துக் கொண்டே வந்து தெருக் கதவைத் திறந்து, ''என்னடா இந்த நேரத்தில்?'' என்றான் அவன் ராமசாமியை நோக்கி.

''இதுதானேடா, காதலுக்கு ஏற்ற நேரம் என்று நீ சொல்வது? அதோ பார்; தன்னைச் சூழ்ந்த மேகக் கூட்டத்தை விட்டு வெளியே வரும்போது, நீ பெருமூச்சு விடுவாயே, அந்த நிலவுகூட.....''

ராமசாமி முடிக்கவில்லை; ''சரி, நீ வந்த விஷயத்தைச் சொல்லு?'' என்றான் கந்தசாமி இன்னும் வயிற்றை வருடிக்கொண்டே.

''அவள் வீட்டைக் கண்டுபிடித்துவிட்டேண்டா!''

''கண்டுபிடித்து விட்டாயோ இல்லையோ, பொழுது விடிவதற்கு முன்னால் நீ அந்த வீட்டுக்கு முன்னால் போய் நின்றுவிடு! 'நின்றுவிடு' என்றால் ஒரே இடத்தில் நின்றுகொண்டிருக்காதே; யாருக்காவது சந்தேகம் வந்து உன் முதுகைப் பதம் பார்த்தாலும் பார்த்து விடுவார்கள்! அவள் இருக்கும் தெருவின் அந்தக் கோடிக்கும் இந்தக் கோடிக்குமாக நடந்து கொண்டிரு. எப்படியும் ஒன்பது, ஒன்பதரை மணிக்கு அவள் வெளியே வருவாள். வந்ததும் நீ அவளை மறுபடியும் 'பாலோ' பண்ணு. அப்படிப் பண்ணினால், அவள் எங்கே போகிறாள், காலேஜுக்கா வேலைக்கா, காலேஜ் என்றால் எந்தக் காலேஜ், வேலை என்றால் எங்கே வேலை என்பது உனக்குத் தெரிந்து விடும். அதைத் தெரிந்துகொண்டு இங்கே வா! என்ன, வருகிறாயா?'' என்றான் கந்தசாமி.

''சரி, வருகிறேன். நீ ஏன் ஒரு மாதிரியாயிருக்கிறாய்?'' என்றான் ராமசாமி.

''அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறாய்? இன்று நான் வீட்டுக்குள் நுழைந்தேனோ இல்லையோ, 'எங்கே அந்தக் கோயில் மாடு?' என்றார் அப்பா; 'நீங்களும் நானும் இருக்கும் வரை அவன் ஏன் கோயில் மாடாகிறான்? எல்லாம் வீட்டு மாடுதான்!' என்று சொல்லிக் கொண்டே அம்மா எனக்குச் சோறு போட வந்தாள். நான் வீராப்புக்காக, 'வேண்டாம்' என்று ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போய்ப் படுத்தேன். அவ்வளவுதான்; அதற்குப் பிறகு வந்து என்னை எழுப்புவார் இல்லையேடா, இந்த வீட்டில்?'' என்றான் அவன்.

''அந்த ஐடியா 'ஸ்டேல்'லாய்ப் போயிருக்கும் அவர்களுக்கு! நான் உனக்கொரு 'நியூ ஐடியா' தருகிறேன்; அதற்கு வேண்டியதெல்லாம் ஒரே ஒரு மூட்டைப் பூச்சி மருந்து பாக்கெட்தான்! அதை வாங்கிக்கொண்டு வந்து நீ உன் அப்பா பார்க்குமிடத்தில் வை. ஆனால் அவர் அதைப் பார்க்கும்போது நீ சும்மா இருந்துவிடாதே! அப்படி இருந்தால் நீ எதிர்பார்க்கும் 'எபெக்ட்' உனக்குக் கிடைக்காது. அதாலே, அவர் பார்த்ததும் சட்டென்று அதை எடுத்து மறைக்கிறாற்போல் மறைக்கணும். 'என்னடா அது?' என்று கேட்டால் 'ஒன்றுமில்லை' என்று சொல்லணும். இந்த 'ஒன்றுமில்லை' என்ற பல்லவியையே கடைசிவரை நீ திருப்பித் திருப்பிப் பாடிக்கொண்டே இருந்தால், அவராகவே

வந்து அதை வாங்கிப் பார்ப்பார். அப்புறம் பார், அவர் உன்னிடம் படும் பாட்டை!'' என்றான் அவன்.

''தாங்க் யூ!''

மறுநாள் காலை; காதல்ஸ்ரீ கந்தசாமி சொன்னது போல், பொழுது விடிவதற்கு முன்னால் அந்தப் 'பின்னழகி'யின் வீட்டுக்கு முன்னால் போய் நின்றுவிட்டான் ராமசாமி. அப்போது அந்த வீட்டுக்கு எதிர்த்தாற் போலிருந்த ஒரு 'பங்களா'வில் தோட்டக்காரன், தான் அதுவரை கூட்டிச் சேர்த்த குப்பையைக் கொண்டு வந்து தெருவை ஒட்டினாற் போலிருந்த மதிற் சுவருக்கு அப்பாலிருந்து கொட்ட, அது அங்கே நின்று கொண்டிருந்த ராமசாமியின் தலையிலே வந்து விழ, ஒரு மணி நேரத்துக்கு மேல் கண்ணாடியின் முன்னால் நின்று 'செட்டப்' செய்து கொண்டு வந்திருந்த தன் 'கிளர் கிராப்'பைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டே நகர்ந்து நின்றவனுக்கு அப்போதுதான் 'ஒரே இடத்தில் நிற்கக் கூடாது; அது பிறருடைய சந்தேகத்துக்கு இடம் கொடுத்துவிடும்' என்று கந்தசாமி எச்சரித்திருந்தது நினைவுக்கு வந்தது. சட்டென்று கைக்குட்டையை எடுத்துத் தன் முகத்தை 'டச்சப்' செய்துகொண்டு மேலே நடந்தான்.

வழியில் சலூன்காரர் ஒருவர் அப்போது தான் வந்து கடையைத் திறந்து கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் தன் அழகை இன்னொரு முறை பரிசீலனை செய்துகொண்டால் என்ன என்று தோன்றிற்று அவனுக்கு. உள்ளே நுழைந்தான். காலையில் வந்த 'அந்த வெற்றுக் கிராக்கி'யை அவர் விரும்பாவிட்டாலும் அதற்காகத் தன் 'பரிசீலனை'யை நிறுத்தாமல் நடத்தி முடித்துக் கொண்டு அவன் திரும்பியபோது ஏதோ ஒரு வீட்டுக் கடிகாரம் மணி ஏழு என்பதை அறிவிக்க ஏழு முறை அடித்து ஓய்ந்தது அவன் காதில் விழுந்தது. உடனே நாலைந்து வருடங்களுக்கு முன்னால் வேலை நிறுத்தத்தில் இறங்கி, நாளது வரையில் வெற்றிகரமாக அதை நீடித்துக்கொண்டு வந்த தன் கைக் கடிகாரத்தைக் கழற்றி, அதன் முட்களை ஏழில் திருப்பி வைத்துக் கொண்டான். அத்துடன் அதை விட மனம் இன்றி, 'இந்தச் சனியன் பிடித்த கடிகாரம் அவளைப் பார்த்துவிட்டுத் திரும்பும் வரையிலாவது ஓடிக்கொண்டிருந்தால் நன்றாயிருக்கும்!'' என்று முணு முணுத்துக் கொண்டே அதை 'ஆட்டு, ஆட்டு' என்று ஆட்டிப் பார்த்தான். அப்போதும் அது 'நடக்குமா?' என்பது போல் ஆடாமல் அசையாமல் இருக்கவே, 'இரு, கைக்கு அலங்காரமாகவாவது இரு!'' என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் அதைக் கையில் கட்டிக்கொண்டு மேலே நடந்தான்.

இந்தச் சமயத்தில் தனக்குத் தெரிந்தவர்கள் யாரும் இந்தப் பக்கம் வந்துவிடக் கூடாதே, வந்து 'எங்கே இவ்வளவு தூரம்?' என்று கேட்டுவிடக் கூடாதே என்று அவன் பயந்தபோது, 'அப்படியா சமாசாரம்?' என்பது போல் அவன் அப்பாவுக்குத் தெரிந்த தாத்தா ஒருவர் அந்தப் பக்கமாக வந்து, தம் கையையே தம் கண்களுக்கு 'ஷேட்'டாக வைத்து அவனைப் பார்த்துவிட்டு, ''அடே, ராமசாமியா! எங்கே இப்படி?'' என்றார் தம் பொக்கை வாயைத் திறந்து.

''ஒரு வேலையா வந்தேன்...''

''அது என்ன வேலை, இவ்வளவு காலையிலே தெரு கூட்டும் வேலையா? குப்பை வண்டி எங்கே நிற்கிறது? கையிலே கூடையைக் காணோமே, வாரிக் கொட்ட?''

''போங்க தாத்தா! நான் ஒரு வேலையா இங்கே ஒருத்தரைப் பார்க்க வந்தேன்னு...''

''யார் அது?''

''அதோ, அந்த வீட்டுக்காரர்தான்!''

துணிந்து ஏதோ ஒரு வீட்டைக் காட்டிவிட்டு அவன் மெல்ல நழுவினான். அவரா அவனை அவ்வளவு இலேசில் விடுபவர்? ''குப்புசாமியா? அவனை நன்றாய்த் தெரியுமே எனக்கு. அவனிடம் என்ன வேலை ஆகவேண்டும், உனக்கு? வா, நானும் வருகிறேன்!'' என்று அவனைத் தொடர்ந்தார்.

'இது என்ன சங்கடம்?' என்று அவன் நின்று, ''அவர் இன்னும் எழுந்திருக்கவில்லை, தாத்தா! அவருக்காகத்தான் இங்கே நான் காத்துக் கொண்டிருக்கிறேன்!'' என்றான், 'இனி தனக்குப் பொய்யே துணை!' என்று துணிந்து.

''எழுந்திருக்காவிட்டால் என்ன? நீ வா, அவனை நான் எழுப்புகிறேன்!''

''வேண்டாம், தாத்தா! உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? நீங்கள் போய் வாருங்கள்!''

''உன்னை இங்கே பார்த்ததும் உனக்காக நான் ஒன்றும் செய்யவில்லையென்றால் உன் அப்பன் என்னைப் பற்றி என்ன நினைப்பான்? வாடான்னா!''

பெரியவர் கையைப் பிடித்து இழுக்க, அதற்கு மேல் அவரிடமிருந்து தப்ப வழி தெரியாமல் அவன் விழிக்க, அந்தச் சமயம் பார்த்து அவன் தேடிக்கொண்டு வந்த வீட்டிலிருந்து யாரோ ஒருத்தி தன் 'முன்னழகை'க் காட்டிக்கொண்டு அவனுக்கு முன்னால் வர, அதிலிருந்து அவளை இனம் கண்டுகொள்ள முடியாமல் அவள் தன்னைக் கடந்து செல்லும் வரை காத்திருந்து அவளுடைய 'பின்னழ'கைப் பார்ப்பதற்காக அவன் திரும்ப அதைக் கவனித்துக் கொண்டிருந்த கிழவர் ''முன்னால்தான் பார்த்தாயே, பின்னால் வேறு பார்க்க வேண்டுமா? வாடா, வந்த வேலையைக் கவனிக்க!'' என்று அவன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டார். 'விடங்கொண்ட மீனைப் போலும், வெந்தழல் மெழுகு போலும், படங்கொண்ட பாம்பின் வாயில் பற்றிய தேரை போலும்' அவன் பரிதவிக்க, அந்தச் சமயம் பார்த்து அவர் சொன்ன குப்புசாமி வேறு கொட்டாவி விட்டுக் கொண்டே வந்து வாசலில் நிற்க, ''அதோ அவனும் எழுந்து வந்துட்டான்டா! வா! வா!'' என்று அவர் அவனை அவசரப்படுத்த அல்லும், பகலும் அனவரதமும் தன்னால் வணங்கப்பட்டு வரும் ஒரே தெய்வமான 'காதல் தெய்வ'த்தின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு, ''நான் இந்தக் குப்புசாமியைச் சொல்லவில்லை தாத்தா, அந்தக் குப்பு

சாமியைச் சொன்னேன்!'' என்று அவன் தட்டுத் தடுமாறினான் இன்னொரு வீட்டைக் காட்ட. ''ஓ, அவனா! அவனையும் ரொம்ப நன்றாய்த் தெரியுமே, எனக்கு! வா, போவோம்!'' என்று அவர் அப்போதும் அவனைத் தொடர, 'இது என்ன தொல்லை, இந்தக் கிழட்டுப் பயலிடமிருந்து தப்புவதற்குள் அவள் ரொம்ப தூரம் போய் விடுவாள் போலிருக்கிறதே!'' என்று நினைத்த அவன், ''அது ரொம்ப ரகசியமாம், தாத்தா! 'என்னைத் தவிர வேறு யாருக்கும் அது தெரியக் கூடாது' என்று அவரே சொல்லியிருக்கிறார். அப்படியிருக்கும்போது நீங்கள் என்னுடன் வந்தால் அது அவ்வளவு நன்றாயிருக்குமா என்றுதான் யோசிக்கிறேன்!'' என்று இழுக்க, ''அப்படி என்றால் சரிதான், அவன் அதிலே ஏதோ 'சம்திங்'கை எதிர்பார்க்கிறான் போலிருக்கிறது! அதையாவது கொடுத்துத் தொலைத்து உடனே வேலைக்குப் போகப் பாரடா, உன் அப்பன் உனக்கு இன்னும் எத்தனை நாளைக்குத் தண்டச் சோறு போட்டுக்கொண்டு இருப்பான்?'' என்று சொல்லி விட்டு அவர் நழுவ, ''போடுவது அவர் கடமை, சாப்பிடுவது என் உரிமை'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே, அவர் தம் பார்வையிலிருந்து மறையும்வரை அவன் அங்கேயே கற்றுக்கால் இட்டுக் கொண்டிருந்து விட்டு, பின்னழகியின் வீட்டிலிருந்து வந்து முன்னழகியைப் பின்பற்றி, ''ஒன் மினிட் ஒன் மினிட்!'' என்று கெஞ்சிக்கொண்டே ஓடி, ''கோபித்துக் கொள்ளக் கூடாது; நேற்று மாலை ஐந்து ஐந்தரை மணிக்கு மௌண்ட் ரோடிலிருந்து மூன்றும் நம்பர் பஸ்ஸில் வந்தது நீங்கள்தானே?'' என்றான், அவசியம் ஏற்பட்டால், நன்கு, தடையின்றி ஓடுவதற்குரிய வழியையும் முன்கூட்டியே நிச்சயப்படுத்தி வைத்துக் கொண்டு!

''இல்லையே, அவள் என் சிநேகிதி!'' என்றாள் அவள்.

''ஓ, ஐ ஸீ! தாங்க் யூ!'' என்றான் அவன்.

''நோ மென்ஷன் ப்ளீஸ்!'' என்று சொல்லி விட்டு அடுத்தாற்போல் இருந்த ஒரு 'டைப் ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்'டுக்குள் அவள் நுழைய அதற்கு மேல் என்ன செய்வது என்பதைப் பற்றி யோசிக்க அவன் கந்தசாமியைத் தேடிக் கொண்டு சென்றான்.

அங்கே...

''என்னடா, பூச்சி மருந்து வைத்துக் கொண்டு பூச்சி காட்டுகிறாயா, எனக்கு; வேண்டாம், அதைச் சாப்பிட்டால் வாந்தி வரும்; அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என்னவென்று கேட்பார்கள்; அதற்கு மேல் போலீஸ் வரும்; ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு போவார்கள்; அங்கே நீ பிழைத்தாலும் பிழைத்து விடுவாய்! அந்த வம்பெல்லாம் எதற்கு? இந்தா தூக்க மாத்திரை, உன் அபிமான நடிகை மர்லின் மன்றோ சாப்பிட்ட மாதிரி நீயும் இதைச் சாப்பிட்டுத் தூங்கிக்கொண்டே பிராணனை விட்டுவிடு; உனக்கும் நிம்மதி; எனக்கும் நிம்மதி!'' என்று கையில் தூக்க மாத்திரையுடன் கபிலநாதனார் தம் மகன் கந்தசாமிக்குச் சொரிக செய்து கொண்டிருந்ததைக் கண்ட ராமசாமிக்கு இன்னொரு கூடை நிறையக் குப்பையைக் கொண்டு வந்து யாரோ தன் தலையில் கொட்டுவது போல் இருந்தது. அங்கே தன் முயற்சிக்குத் தோல்வி என்றால், இங்கே தன் ஐடியாவுக்குமல்லவா தோல்வியாயிருக்கிறது!

கந்தசாமியின் அம்மா கற்பகாம்பாள் சாட்சாத் காதல் தெய்வம் போல் அங்கு தோன்றி, ''ரொம்ப அழகாகத்தான் இருக்கிறது, நீங்கள் நிம்மதி தேடும் லட்சணம்! காலா காலத்தில் அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைப்பதை விட்டு விட்டுத் தூக்க மாத்திரையை எடுத்துக் கொடுக்கிறீர்களே, சாக!'' என்று தன் மகனைத் தடுத்தாட்கொண்டாள்.

அதற்குள், ''ஏன், மகனுக்கு மட்டும் தண்டச் சோறு போட்டால் போதாதா? மருமகளுக்கும் சேர்த்துப் போட வேண்டுமா?'' என்றார் அவர்.

''நீங்கள் ஒன்றும் போட வேண்டாம்; அவன் சம்பாதியத்தை வைத்துக்கொண்டு அவனே அவளுக்கும் போட்டுக்கொள்வான்!'' என்றாள் அவள்.

''அது யாரடி, அந்தத் தர்மபத்தினி?''

''என் அண்ணன் மகள் அம்சா இல்லையா அவளைத்தான் சொல்கிறேனுக்கும் நான்!''

''அவளுக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது இவனைக் கல்யாணம் செய்து கொள்ள?''

''அத்தை மகன் என்று ஒருவன் இருக்கும் போது அவள் வேறு யாரைக் கல்யாணம் செய்து கொள்வாளாம்?''

''அத்தை மகன்தான் சொத்தை மகனாக இருக்கிறானே?''

''சொத்தையாயிருந்தாலும், சொந்தம் போகாது. நீங்கள் பேசாமல் இருங்கள்; அவளை நானே இவனுக்கு முடித்து வைக்கிறேன்.''

''செய்யடி அம்மா, செய்; அந்தப் பாவத்தை நீயே செய்!'' என்று சொல்லி விட்டு அவர் வெளியே வர, என்ன நினைத்தாலும் நினைக்கட்டுமென்று ராமசாமி பலனை எதிர்பாராமல் அவருக்கு ஒரு 'குட்மார்னிங்' வைத்துக் கொண்டே உள்ளே நுழைந்து, ''கையைக் கொடுடா இப்படி!'' என்றான், கூடிய சீக்கிரமே மாப்பிள்ளையாகவிருந்த கந்தசாமியிடம் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்க.

''அது இருக்கட்டும்; நீ போன காரியம் என்ன ஆயிற்று?'' என்றான் அவன்.

''அதை ஏன் கேட்கிறாய் போ! அது அவள் வீடு இல்லை; அவளுடைய சிநேகிதியின் வீடு!' என்றான் அவன்.

''அது எப்படித் தெரிந்தது, உனக்கு?''

''அவள் சிநேகிதி சொல்லித் தெரிந்தது..!''

''அந்தச் சிநேகிதியிடமே அவளுடைய விலாசத்தைக் கேட்டுப் பார்ப்பதுதானே?''

''அது எப்படிக் கேட்க முடியும்?''

''போடா, முட்டாள்! சட்டென்று உன் பேனாவை எடுத்துக்காட்டி, ''இதை அவள் பஸ்ஸில் மறந்து வைத்துவிட்டாள்; அவளுடைய விலாசம் தெரியுமா உங்களுக்கு?' என்று கேட்டால் சொல்கிறாள்!''

''இது நீ சொல்வதற்கு முன்னால் எனக்குத் தெரியவில்லை, என்ன செய்வேன் நான்?''

''சரி, அவள் இப்போது எங்கே யிருக்கிறாள் என்று தெரியுமா உனக்கு?''

''தெரியுமே, கச்சேரி ரோட்டிலுள்ள டைப்ரெட்டிங் இன்ஸ்டிட்யூட்டில் இருக்கிறாள்!''

''சரி, புறப்படு! நானும் வந்து உனக்குப் பக்கத்திலேயே நின்று தொலைக்கிறேன்!'' என்று கந்தசாமி புறப்பட்டான்.

தான் எடுத்துக்கொண்ட வகுப்பு நேரம் முடிந்து வெளியே வந்த 'முன்னழகி'யைத் தயக்கத்துடன் நெருங்கி, ''கோபித்துக் கொள்ளக் கூடாது!'' என்று மறுபடியும் ஆரம்பித்தான் ராமசாமி.

''இந்தத் தற்காப்பு நடவடிக்கையெல்லாம் எதற்கு? சும்மா விஷயத்தைச் சொல்லுங்கள்!'' என்றாள் அவள்.

''ஒன்றுமில்லை; உங்கள் சிநேகிதி நேற்று பஸ்ஸில் வரும்போது இந்தப் பேனாவை மறந்து வைத்துவிட்டு....''

அவன் முடிக்கவில்லை; ''இவ்வளவுதானே? கொடுங்கள், நானே அவளிடம் கொடுத்து விடுகிறேன்!'' என்று அவள் அதை வாங்கிக் கொண்டு நடக்க, அதற்கு மேல் என்ன செய்வதென்று தெரியாமல் ராமசாமி விழிக்க, அவனுக்குச் சற்றுத் தூரத்திலிருந்து அதைக் கவனித்துக்கொண்டிருந்த கந்தசாமி விரைந்து வந்து, ''கவலைப்படாதே. இப்போது நாம் இருவருமே அவளுக்குத் தெரியாமல் அவளை 'பாலோ' பண்ணுவோம்!'' என்று அவனைக் கொஞ்சம் பலமாகவே தட்டிக் கொடுத்து அழைத்துச் சென்றான்.

நல்ல வேளையாக ராமசாமி பயந்தபடி அவள் மறுபடியும் தன் வீட்டுக்குச் செல்லவில்லை; லஸ்லுக்குச் சென்று மூன்றாம் நம்பர் பஸ்ஸில் ஏறி மௌண்ட் ரோட்டுக்கு ஒரு டிக்கட் வாங்கினாள். அதே மௌண்ட் ரோடுக்கு அவர்களும் இரண்டு டிக்கட் வாங்கிக்கொண்டு அவளுக்குத் தெரியாமல் கூட்டத்தோடு கூட்டமாக மறைந்து நின்றார்கள்.

தான் இறங்க வேண்டிய இடம் வந்ததும் அவள் இறங்கி நடக்க, அவர்களும் தொடர்ந்து இறங்கி, அவளைப் பின்பற்றி நடந்தார்கள்!

அடுத்தாற்போல் அவள் அங்கிருந்த பாங்க் ஒன்றுக்குள் நுழைந்து அதில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணிடம் தான் கொண்டு வந்த பேனாவைக் கொடுத்து ஏதோ சொல்ல, அதைக் கேட்டு அவள் ஒன்றும் புரியாமல் விழிக்க, அதற்குள் அவளைப் பார்த்து விட்ட காதல்ஸ்ரீ கந்தசாமி, ''என்ன தைரியமடா உனக்கு? என் அம்சாவைக் காதலிக்க என்னையே யோசனை கேட்க!'' என்று தன் முஷ்டியை உயர்த்திக் கொண்டு ராமசாமியை நோக்கித் திரும்ப, ''ஐயையோ! இது தெரியாதேடா எனக்கு!'' என்று அவன் அலறிக் கொண்டே ஓட, இருவரும் ஒரு நாயைத் துரத்திக் கொண்டு இன்னொரு நாய் ஓடுவது போல ஓடிக் கொண்டிருந்தனர்!

''பேஷ்! நன்னா யிருக்கே வீடு! வெளியில் நின்று பார்த்தா, ஒரே வீடுமாதிரி இருக்கு; உள்ளே வந்து பார்த்தா, நாலு போர்ஷன் தனித் தனியா இருக்கு. என்ன செலவாயிற்று, இந்த வீட்டைக் கட்டி முடிக்க?''

''இருபத்தையாயிரத்துக்குக் கிட்டத் தட்ட வந்துட்டுது!''

''அப்போ நூத்துக்கு வட்டி ஒன்னுன்னு பார்த்தாக்கூட மாதம் ரூபா இருநூத்தைம்பதாவது வாடகை வர வேண்டுமே உங்களுக்கு. வருகிறதா?''

''எல்லாரும் அப்படித்தான் சொல்றா ஆனா நானே இருநூத்தம்பதுக்கு ஐந்நூறுவே வாங்கிட்டிருக்கேன்...!''

''அப்படியா, ரொம்ப சந்தோஷம். ஆனா ஒண்ணு. கலெக்டர் ஆபீஸ்காரர் தொந்தரவு, கார்ப்பரேஷன்காரன் தொந்தரவு, இன்கம்டாக்ஸ் காரன் தொந்தரவெல்லாம் உங்களுக்கு அதிகமாயிருக்கும் இல்லையா?''

''இருக்கு! ஆனா, ஆளை நம்பலேன்னாலும் அவனுங்க ரசீதை நம்பறான் பாருங்க, அதை வெச்சிக் கொஞ்சம் 'அட்ஜஸ்ட்' பண்றேன்....''

''அது எப்படி?''

''வாங்கறது ஐந்நூறாக இருந்தாலும் இருநூத்தைம்பதுக்கு ரசீது கொடுக்கிறேன்!''

''ஓஹோ! குடித்தனக்காரனுங்க சும்மா இருக்கானுங்களா, அதுக்கு?''

''வேறே வழி? அவனுங்களுக்கு இந்த வீட்டை விட்டா வேறே வீடு கெடைக்கிறது ரொம்பக் கஷ்டம்; நமக்கோ இந்தக் குடித்தனக்காரனுங்கபோனா, வேறே குடித்தனக்காரனுங்க கெடைக்கிறது ரொம்ப சுலபம்!''

''ஓ, ஐ ஸீ!''

வியந்து நிற்பவர்:
வெளியூர் வீட்டுக்காரர்.

விளக்கம் தந்தவர்:
உள்ளூர் வீட்டுக்காரர்.

தகவல்:
ஒரு குடித்தனக்காரர்.





வட்ட மேஜை

- சந்தேக விளக்கம்
- தரமான இலக்கியப் பணி
- பழமொழிகளை அனுப்புங்கள்

கல்கியைத் தொடர்ந்து படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருத்தி. அகிலனின் ''கயல்விழி'' சம்பந்தமாக எனக்கு ஒரு சிறு சந்தேகம். மாறவர்மன் சுந்தரபாண்டியனும் வீரநரசிம்மனும் ஒற்றுமையாய்ப் போவதாகக் கதையை முடித்திருக்கிறார் ஆசிரியர். ஆனால் மாறவர்மன் சோழ நாட்டை வெற்றி கொண்ட சில ஆண்டுகளுக்குப் பின்பு வீர நரசிம்மன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்தான் என்றும், அப்போது இராஜராஜன் பாண்டியனுக்குத் திறை செலுத்த மறுத்து ஹொய்சல வீரநரசிம்மனுடன் சேர்ந்து கொண்டு மாறவர்மனை எதிர்த்தான் என்றும், காவேரியாற்றங்கரையில் உள்ள மகேந்திரமங்கலம் என்னுமிடத்தில் மாறவர்மன் தோற்றுத் திரும்பினான் என்றும் சரித்திரம் கூறுவதாக நான் படித்துள்ளேன். அப்படியிருப்பின் சுந்தர பாண்டியன் பாமினியைத் திருமணம் செய்து கொள்ள முடியாதே. சரித்திர ஆதாரப்படி எது உண்மை என்பதைத் தயவுசெய்து தெரிவிக்க முடியுமா?

பாமினியை மாற வர்மன் திருமணம் செய்துகொள்ள மாட்டான். சரித்திர ஆதாரப்படி அதற்கு இடமில்லை என்று என் தந்தையிடம் பந்தயம் கட்டினேன். பாமினியைத்தான் திருமணம் செய்துகொள்வான் என்றார் என் தந்தை. என் தந்தைதான் வெற்றி பெற்றார்.

கல்லூரியில் அடியெடுத்து வைத்துள்ள எனக்குத் தமிழ் நாட்டு மூவேந்தர்களைப் பற்றி அறிந்துகொள்வதில் ஆவல் அதிகம்.

மதுரை,
10-4-65 ஆர். மனோன்மணி.

சுந்தர பாண்டியனுக்கும் வீர நரசிம்மனுக்கும் மகேந்திரமங்கலம் காவேரிக் கரையில் போர் நடைபெற்று அதில் சுந்தர பாண்டியன் தோற்றுவிட்டதாகவும் வரலாறு கூறுகிறது. ஆனால், உடனடியாகத் திருமண உறவினால் சுந்தர பாண்டியன் வீரநரசிம்மன் இவர்களிடையே சமாதான உடன்பாடும் ஏற்பட்டிருக்கிறது. சிறந்த ராஜதந்திரியான வீர நரசிம்மன் தமது குமாரத்தி பாமினியைச் சுந்தர பாண்டியனுக்குக் கொடுத்தது போலவே, இராஜராஜனுக்கும் மற்றொரு குமாரத்தியைக் கொடுத்துத் தமிழ் நாட்டையும் கன்னட நாட்டையும் உறவால் ஒன்றாக்க முயற்சி செய்திருக்கிறார். திரு நீலகண்ட சாஸ்திரி அவர்கள் எழுதிய (A History of South India) திரு சதாசிவம் பண்டாரத்தார் அவர்கள் எழுதிய பாண்டியர் வரலாறு, திரு வில்லியம் கோயல் ஹோ என்ற ஆங்கிலேயர் எழுதிய 'The Hoysala Vamsa' என்ற நூல்களிலும் சான்றுகள் இருக்கின்றன. கூடியவரையில் வரலாற்றுப் பாத்திரங்கள் அந்த நிகழ்ச்சிகளின்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே, கல்கி புத்தாண்டு இதழ் 48-ம் பக்கம் உள்ள கதைப் பகுதியில், ''நான் போர் புரியாமலே என் தோல்வியை ஏற்றுக்கொள்கிறேன்'' என்று சுந்தர பாண்டியன் வீர நரசிம்மனிடம் கூறுகிறான். சுந்தர பாண்டியன் தோல்வியை ஏற்றுக்கொண்டு வெற்றி பெறுவது போலவே சகோதரியும் அவர் தந்தையாரிடம் பந்தயத்தில் தோற்றாலும் அன்பில் மிகுதியான வெற்றி பெற்றவளாகிறார்.

— அகிலன்.

சுந்தர பாண்டியன் கயல்விழிக்குச் சூடிய மலர் மாலையோடு, எங்கள் கண்ணீர் மாலையையும் சூட்டுகிறோம். மதுரைக் கோவில் கோபுரத்தைப் போல், அவன் எங்கள் உள்ளங்களில் என்றென்றும் உயர்ந்து நிற்பான்.

பெங்களூர் ஆ. குருசாமி
16-4-65 மற்றும் சகோதரிகள்

[கல்கி புரிந்து வரும் தரமான இலக்கியப் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டாக 'கயல்விழி' அமைந்திருப்பது குறித்து நேயர்கள் எழுதிய நூற்றுக்கணக்கான கடிதங்கள் கிடைக்கப் பெற்றோம். அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர்.]

★

பம்பாயில் ஐ. என். எஸ். அங்ரே (I. N. S. Angre) என்ற கப்பல் படை கரை ஸ்தாபனம் இருக்கிறது. டேசில் பேரக்ஸ் என்ற பெயரும் வழங்கி வருகிறது. இந்தக் கப்பல்படை ஸ்தாபனத்தில் ஒரு வாசகசாலையும் ஒரு சினிமாக் கட்டிடமும் உண்டு. வாசகசாலையில் வாராந்திர சஞ்சிகை, மாதாந்திர சஞ்சிகை, தினசரிப் பத்திரிகை எல்லாம் பத்துக்கு எட்டு இந்தி மொழியைச் சேர்ந்தவை. தமிழ்ச் சஞ்சிகைகள் இரண்டு மட்டுமே உள்ளன. ஆனந்த விகடன், கல்கி.

சினிமாக் கட்டிடம்: இந்திப் படம் மட்டும் திரையிடப்படுகிறது. மற்ற தேசிய மொழிகளான வங்காளம், தெலுங்கு, கன்னடம், அஸ்ஸாமி, தமிழ் போன்ற மொழிப் படங்கள் திரையிடப்படுவதே யில்லை.

1950ம் வருஷத்துக்கு முன்பெல்லாம் ஆங்கிலமே நடைமுறையில் இருந்தது. இப்பொழுது எல்லாம் தலைகீழாக மாறி, சர்வம் இந்தி மயமாகி வருகிறது.

கப்பல் படையில் சேருபவர்களுக்கு ஆரம்பப் பயிற்சி எல்லாம் இந்தியில்தான் கற்றுத் தருகிறார்கள். 'பவர் ஆப் கமாண்ட்' எல்லாம் இந்தியில்தான் பேச வேண்டும்.

என்போன்ற இந்தி மொழி தாய்மொழி இல்லாதவன் கல்போல் நிற்க வேண்டியிருக்கிறது. இதிலிருந்து எந்த மொழிக்காரர்கள் முன்னேறுகிறார்கள், பொருளாதாரம் எந்த மொழிக்காரர்களுக்குப் போய்க் குவியும் என்று நன்றாகத் தெரிகிறது.

இனிமேல் மற்ற வங்காளம், தெலுங்கு, கன்னடம், அஸ்ஸாமி, தமிழ் போன்ற மொழி பேசுபவர்களெல்லாம் இரண்டாம் தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்டு விட்டோம் என்பது நன்றாகத் தெரிகிறது.

பம்பாய்,
3-3-65 ஒரு பாதிக்கப்பட்ட மாலுமி

★

'கல்கி' பத்திரிகையின் அரசியல் கருத்துக்கள் பிடிக்காத காரணத்தினால், அதை விரும்பிப் படிக்காமலே இருந்து வந்தேன். ஆனால் வருடப் பிறப்பு இதழை எதேச்சையாகப் படிக்க நேர்ந்தது. அதில் உள்ள ஒவ்வொரு கதையிலும் விதம்விதமான உணர்ச்சிகளும்,

கருத்துக்களும் அழகான நடையில் இனிய தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வளவு நாட்களும் 'கல்கி'யில் வெளியான கதை, கட்டுரைகளைப் படிக்காமல் விட்டு விட்டதைக் கண்டு மிகவும் வருந்துகிறேன். ஆகையால் உடனடியாக உள்ளூர் ஏஜண்டிடம் வாரா வாரம் கல்கி எனக்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டுள்ளேன். குறிப்பாக, சித்திரை இதழில் வெளியான ''அன்னை மூவர்'' என்ற கதையின் ஆசிரியருக்கு என் பாராட்டுக்கள்.

தேவகோட்டை
10–4–65 ப. நாராயண்

★

நான் டாக்டர் திரு ஸ்ரீ ஹரியின் மாணாக்கன். இவ் ஆண்டுகாறும் அவர் அன்புடனும் பெருநோக்குடனும் என்னை மாணாக்கனாகக் கொண்டமைக்கு நான் பெருமைப்படுவதில் வியப்பொன்றுமில்லை.

நான் பணியாற்றும் மருத்துவமனைக்குத் தண்ணீர்த் தொட்டிக்கு இரும்பு ஸ்டீல் ஸ்டாண்ட் ஒன்று அவர் மனமுவந்து அன்பளிப்பாகக் கொடுத்துள்ளதை விளம்பரப் படுத்த அவர் விரும்பமாட்டாராயினும் இவ்வாறு அன்பளிப்பினால் கட்டிய தண்ணீர்த் தொட்டியின் மூலம் இப்பகுதி நகர மக்கள் பலனை அடைந்து வெகுவாகப் பாராட்டுகிறார்கள் என்பதனைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேவகோட்டை மாநகராட்சியின் ஆணைக்குட்பட்ட மருத்துவ மனைக்கு அன்பளிப்பு தந்ததை நகராட்சியும் ஏற்றுக் கொண்டு ஏகமனதாக வந்தனம் செலுத்தித் தீர்மானம் போட்டுள்ளது. கல்கி ஸ்ரீ ஹரியின் இத்தொண்டினை கல்கி வாசகர்கள் யாவரும் உணர்ந்து இன்புற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தேவகோட்டை டாக்டர் என். ஆர். நரசிம்மன்
11–3–65 (மருத்துவ அதிகாரி)

★

''நாகாலாந்தில் நடப்பது என்ன?'' என்ற ஒரு கட்டுரையில் 'கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இவர்களுக்கு ஆயுத உதவியும் பண உதவியும் கிடைத்து வருகின்றனவாம்' என்று ஆசிரியர் குறிப்பிட்டது தவறு. வருகின்றது என்று ஆசிரியர் தலையின் மேல் அடித்துக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

இன்று கிழக்கு வங்காளத்தில் காக்ஸ் பஜார் — சிட்டகாங் சமீபம் — என்னும் இடத்தில் நாகத் துரோகிகளுக்குப் பிரத்தியேகமான ராணுவப் பயிற்சி பாகிஸ்தான் கொடுக்கின்றது என்று பார்லிமெண்டு அங்கத்தினர்கள் அம்பலப்படுத்தி இருக்கிறார்கள்.

ஹைதராபாத்
5–4–65 மோ. ஏ. இராமமூர்த்தி

★

நமது நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள முக்கிய இடங்களைப் பற்றி, பிற மாநிலத்தவரும் பிற நாட்டினரும் அறிந்து கொள்வதற்காக, ஆங்கிலத்திலும் பிற மாநில மொழிகளிலும், சிறு சிறு கைப் புத்தகங்கள் அழகான புகைப்படங்களுடன் வெளியிடப்படுகின்றன. டில்லியில் உள்ள இந்திய அரசின் சுற்றுப்பயண இலாகா (Department of Tourism, Government of India) இவற்றைத் தயாரித்து வெளியிடுகின்றது.

இவ்வரிசையில் சென்னை மாநிலத்தைப் பற்றி மலையாள மொழியில் உள்ள கைப் புத்தகத்தில், 26ம் பக்கத்தில், தெப்பக்குளத்துடன் கூடிய திருச்சி — மலைக்கோட்டையின் படத்தை அச்சிட்டு, அதற்கு விளக்கமாக 'யாளி ஸ்தம்பம் — மதுரை மீனாட்சி க்ஷேத்திரம்' என்று அச்சிடப்பட்டுள்ளது. 18ம் பக்கத்தில், ஒகனக்கல் நீர்வீழ்ச்சி ஏற்காட்டில் இருக்கிறதென்றும், அதே பக்கத்தில், கடல் மட்டத்திலிருந்து 7500 அடி உயரத்தில் உதகமண்டலம் உள்ளதென்றும்; 29ம் பக்கத்தில் கடல் மட்டத்திலிருந்து 700 அடி உயரத்தில் கோடைக்கானல் இருக்கிறது என்றும் காணப்படுகிறது.

கடைசித் தாளில் சென்னை மாநிலத் தரைப் படத்தில் செஞ்சி, 'ஜிங்கி' என்றும், திருவள்ளூர் 'திருவெல்லூர்' எனவும் குடியாத்தம் 'குடியாட்டம்' எனவும், — சித்தன்னவாசல் 'சித்தானைவாசல்' எனவும் அச்சிடப்பட்டுள்ளன. ஆங்கில எழுத்துக்களின்படி மொழிபெயர்த்ததினால் இந்தத் தவறுகள் ஏற்பட்டிருக்கக் கூடும். இருந்தாலும், அண்டை மாநிலத்தவர் படித்தறிவதற்காக, மலையாள மொழியில் உள்ள விளக்க ஏட்டில் இத்தவறுகளைத் தவிர்த்திருக்கலாகாதோ ?

எத்தனையோ பள்ளிகளில் (இவை அரசு வெளியீடு என்ற நம்பிக்கையுடன்) சமூக நூல் ஆசிரியர்கள் இவற்றின் துணையுடன் பாடமும் சொல்லித் தருகின்றனர்.

ஜோரானூர்
4–4–65 பி. எஸ். தனராஜ் பி. ஏ.

★

தமிழில் வழங்குகிற பழமொழிகள் எல்லாவற்றையும் தொகுத்து அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க நான் திட்டமிட்டிருக்கிறேன். இவ்வாறு செய்வதன் வாயிலாக நம் மொழியில் மறைந்து கிடக்கும் ஆழ்ந்த கருத்துக்களை உலகத்துக்கு உணர்த்த முடியும். என் முயற்சி வெற்றி அடையக் 'கல்கி' வாசகர்களின் ஒத்துழைப்பை நாடுகிறேன். நீங்கள் அறிந்த தமிழ்ப் பழமொழிகள் எல்லாவற்றையும் மிகத் தெளிவாக எழுதி அருள்கூர்ந்து எனக்கு அனுப்புமாறு வேண்டுகிறேன். நீங்கள் அனுப்பும் பழமொழிக்கு உங்கள் மாவட்டத்துக்கே உரிய சிறப்புப் பொருள், விடுகதை, கதை ஆகியவை ஏதேனும் இருந்து அவற்றையும் தெளிவாக எழுதி அனுப்பினால் மிகவும் நன்மை பயக்கும். நீங்கள் அனுப்பும் பழமொழி மகிழ்ச்சி கலந்த நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும். பழமொழி அனுப்ப வேண்டிய முகவரி:

வ. பெருமாள், எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ்., தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக்கல்லூரி, உரிகம், கோலார் தங்கவயல் (K. G. F.) மைசூர் மாநிலம்.

மைசூர்
11–3–65 வ. பெருமாள்


சித்திரைத் திங்கள் கிருஷ்ண பக்ஷத் திரயோதசி தினம் ஒரு புனித நாளாகும். பதினைந்தாண்டுகளுக்கு முன் அந்த நாள் இரவின் முதல் யாமத்தில் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் தம் பூதவுடலினின்று பிரிந்தார். அக்கணமே ஒளிப் பிழம்பொன்று வான வெளியின் தென் கோடியிலிருந்து வட கோடிக்குக் கிறிப் பாய்ந்த அதிசயத்தைத் திருவண்ணாமலையில் மட்டுமின்றி நாட்டின் பற்பல இடங்களில் கண்ணுற்ற ரமண பக்தர்கள் யாவரும் இச் சுடரொளி ரமண பகவானது உடலொடுக்கத்தைக் குறிப்பதாகவே உணர்ந்தார்கள். இஃதன்றியுமே, அன்றிரவு வெவ்வேறு இடங்களிலிருந்த பற்பல ரமண பக்தர்களுக்குப் பல்வகை அற்புதக் காட்சிகள் கிடைத்தன.

காட்சிக்கெட்டாப் பரமனே நரவுடலில் கோயில் கொண்டு திருவருட் கருணை வீசி மக்கள் இடர்களைக் களைந்தருளும் கருணை நோக்கம்தான் பரம குருவின் ஆவிர்ப்பாவம் என்று அருளுணர்வினரால் போற்றப்பெறும். அத்தகைய திவ்விய வியக்திகள் பிறரால் பெரும்பாலும் அறியப்படாமலேயே புவியில் தோன்றுகின்றன. ஆயின் அவற்றின் மறைவு ஒரோரு கால் பக்தர்கள் போற்றிப் பணியுமாறு மிகத் துலக்கமாக அமைவதையும் அறிவோம். புத்த பகவான் மகாநிர்வாணம், ராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருவுருவின் மறைவு, நம் நாளில் ரமண மகரிஷி, ஸ்ரீ அரவிந்தர் ஆகியோரின்ஒடுக்கம் முதலியன பக்தர்களைப் பரமகுருவின் திருவருளுக்குப் பாத்திரமாக்கும் வகையில் அமைந்தன. 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்' இதயத்திலிருந்து இயல்பாகவே அருவி பாயும் அருளொளி மயமான முனிவர் அந்தப் பேரொளியை மெய்யன்பர்களுக்கு உள்ளவாறு விளக்கியதே ஸ்ரீ ரமணருடைய மகா நிர்வாணத்தின்போது காணப்பட்ட அற்புதமாகும். அக்கணத்தில் அண்ணலின் மெய்யன்பர்கள் சொல்லொணாததோர் உவகைப் பெருக்கில் தம்மை இழந்தனர். உபநிடதம் சாற்றும் முறையில், 'எங்கே எல்லாம் தானே யாமோ, அங்கே ஒன்றுந் தன்மையை உணர்வோருக்கு மோகம் ஏது, சோகம் ஏது?' (யஸ்மின் ஸர்வாணிபூதானி ஆத்மைவாபூத்விஜானத: தத்ர கோ மோஹ:, க: சோக: ஏகத்வம் அநுபச்யத:) மனித வடிவம் ஒடுங்கிய அக்கணத்தே ''உடலற்றுலகற்றுரை சிந்தையுமற்(று) அறிவற்றறியாமையுமற்ற'' எனும் கந்தரனுபூதி வாக்குக்கேற்ப, ரமண பகவானின் நிஜ சொரூபத்தில் மெய்யடியார் தோய்ந்து நின்றனர்.

ஸ்ரீ ரமணர் தம் புனித சாந்நித்யம் இன்றும் திருவண்ணாமலையின் தெற்குச் சாரலில் அவர் கோயில் கொண்டிலங்கிய ஸ்ரீ ரமணாச்ரம பூமியில் சொலற்கரிய சக்தியுடன் மிளிர்கின்றது. பண்டைய பக்தர்கள் மட்டுமின்றிப் புதிதாக வந்து கொண்டேயிருக்கும் நம் நாட்டினரும் பிறநாட்டினரும் உருவமற்ற ஞானப் பிழம்பாம் ரமணரின் சாந்நித்யத்தைத் தெற்றென உணர்கின்றனர்.

உலகமனைத்துக்கும் பொது மறையாம் ரமண பகவான் இயற்றிய 'உபதேச சாரத்'தில் கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்னும் முக்கிய பாதைகள் நான்கும் முப்பதே பாக்களில் ஐயந்திரிபறத் தெற்றென விளக்கப்பட்டுள்ளன. அடைய வேண்டியதையும், அடையும் வழியையும் உள்ளபடி உணர ஆர்வங்கொள்பவர் இவ்வொரு நூலை அமைதியாகக் கற்றறிந்தாலே போதுமானதாகும். அருள் வள்ளலாம் ரமண பகவான் இந்நூலை சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மலையாளம் இந்நான்கு மொழிகளிலும் என்றும் ஓங்கி இலங்கும் செய்யுள் வடிவத்தில் உலகுக்கு அளித்துள்ளார்.

அவர்தம் உபதேச மொழிகளின் சாரம்: 'நான் யார் என்று விசாரித்தால் மனம் தனது பிறப்பிடத்துக்குத் திரும்பிவிடும். எழுகின்ற எண்ணங்களும் அடங்கிவிடும். இவ்வகை



வெளியுலகின் இடையூறுகளைத் தவிர்க்கவேண்டி ஒருவன் பேசாம லிருக்கலாம். அப்படிப் பேசாமல் மௌனமாக இருப்பதே இலட்சியம் என்று நினைத்துக் கொண்டுவிடக் கூடாது. பார்க்கப் போனால், உண்மையான மௌனமே, முடிவற்ற பேச்சாகும். அந்த நிலையை அடைவது என்பது இல்லை. ஏனெனில் அது எப்போதுமே நம்முடன் தானே இருக்கிறது. ஆகவே நாம் செய்ய வேண்டியதெல்லாம், அதை மூடி மறைக்கும் அன்றாடக் கவலைகளை அப்புறப் படுத்துவதுதான்! —ரமணபகவான்


கே. எஸ். வேங்கடராமன்



பரஞ்சோதி மறைந்த பதினைந்தாம் ஆண்டு

யில் மனம் இதயத்தில் தங்கவே, எல்லா நினைவுகளுக்கும் ஊற்றுக் கண்ணான 'நான்' (அகந்தை) என்பது மாய்ந்து 'நான்' மட்டில் விளங்கும். நான் என்ற நினைவு இம்மியும் இல்லாத இடமே உண்மை நிலை. அதுவே மௌனம் எனப்படும். முக்தி நிலை அதுவே. சுகம் என்பது ஆத்மாவின் சொரூபமே. சுகமும் ஆத்ம சொரூபமும் வேறன்று. ஆத்ம சுகம் ஒன்றே உள்ளது; அதுவே சத்தியம்.' அத்துவித உண்மையை இத்துணை எளிதாக உலகுக்கு அருளிய தனிச் சிறப்பு ரமண பகவானையே சாரும்.

ஸ்ரீ ஆதி சங்கர பகவான் தம்முடைய பதினாறும் பிராயத்தில் பிரம்ம சூத்திரங்களுக்கு பாஷ்யம் இயற்றி வேதாந்தத்தின் பொருள் அத்வைதமே என்பதை உலகில் நிலைநாட்டினார். தம் பதினாறும் ஆண்டில் தமிழ் நாட்டுத் தவக் குழந்தை திருஞானசம்பந்தர் ஒப்பற்ற பாக்களால் சிவபக்தியைப் பரப்பித் தம் தந்தையால் மீண்டனர். தமது பதினாறும் வயதில் வேங்கடராமன் (ரமண பகவான்) அருணாசலேச்வரராம் தமது தந்தையின் அருளழைப்பைப் பெற்றார்; அந்த ஈசன் சந்நிதானத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தவ வாழ்க்கையில் ஊன்றி, எண்ணற்ற பக்த கோடிகளை உய்வித்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பரம ஜோதியில் கலந்தார். நேருக்கு நேராக அவர் தம் அருள் நோக்கை இழந்தோமாயினும் எல்லையற்ற உபதேச மொழிகளை அவர் உலகுக்கு ஈந்தே மறைந்தார். ஸ்ரீ ரமண பகவானது பதினைந்தாம் மகா நிர்வாண தினமாம் கிருஷ்ண பக்ஷ த்ரயோதசி இவ்வாண்டு சித்திரை பதினேழாம் நாள் (29—4—65) அமைந்துள்ளது. பக்த கோடிகள் இத்திருநாளைப் போற்றிப் பணிந்து ஸ்ரீ ரமண மகரிஷிகள் காட்டியருளிய "என்றும் எவர்க்கும் இயல்பாயுள்ள பொருளை ஒன்றும் உள்ளத்தில் உணர்ந்து" பிறவிப் பேற்றை எளிதில் நுகரும் வாய்ப்பைப் பெற்று மகிழ்வாராக.



SHB2/HGS-90 S TAI

சேமிப்பதைப்பற்றி வெறும் நினைப்பிலேயே மிகுந்த காலம் செலவிட்டு வருகிறீர்களா

சிறுசேமிப்புகள் நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்கில் எப்பொழுதும் வரவேற்கப்படும் ஐந்தே ரூபாய்களைக் கொண்டு ஒரு சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து விடலாம்.

நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்கின் ஒவ்வொரு கிளையிலும் சூழ்நிலை சுமுகமாகவும் சேவைகள் நட்புரிமையுடனும் இருப்பதைக் காண்பீர்கள்.

ஏனவே உங்கள் அருகாமையிலுள்ள கிளைக்கு இன்றே விரைந்து செல்லுங்கள். எங்களிடம் ஒரு சேமிப்பு கணக்கு வைத்துக் கொள்வது எப்படி நிச்சயமாக ஆபத்சகாயமாக விளங்குமென்பதைப் பாருங்கள்.

உங்கள் டிபாசிட் எவ்வளவு சிறியதாக இருப்பினும் நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் உங்களுக்கு அளிக்கும் கௌரவம் பெரிது.

நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது

கிளைகள் : சென்னை : 3. நார்த் பீச் ரோடு; 378. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு. (லாயிட்ஸ் கிளை); 6. அரமனைக்காரத் தெரு; 158. மவுண்ட் ரோடு; தூத்துக்குடி : 44. பீச் ரோடு; ஹைதராபாத் : அபித் ரோட்

அஸோஸியேடட் பாங்குகள் : லாயிட்ஸ் பாங்கு லிமிடெட்-நேஷனல் புரோவின்ஷியல் பாங்க் லிமிடெட்

வாழ்வு இரு பிறை!

தி. ஜானகிராமன்



ராமகப்பு மூன்று வருஷங்களில் வெளித் தோற்றத்தில் எவ்வளவோ மாறித்தான் போய் விட்டார். முன் வழுக்கை இப்போது தலை முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு பூரண நிலையை அடைந்திருந்தது. நெற்றியில் மேலும் இரண்டு சுருக்கக் கோடுகள் ஓடியிருந்தன. ஆனால் அவருடைய குரல் கொஞ்சம்கூட மாறவில்லை, அதே தோரணை; விசாரணை.

''சுந்தரேசன் பேரனுடா? வா! எப்போது வந்தே? பார்த்து ரொம்ப நாட்களாச்சே! இப்போதுதான் மறுபடியும் லீவு கிடைச்சுதா?'' என்று கேள்விகளை ஆச்சரியத்தோடு கலந்து கொட்டி, என்னை வரவேற்றார். தான் சாய்ந்து உட்கார்ந்து போகம் பயின்று கொண்டிருந்த சின்னத் திண்ணைக்கு எதிரே பெரிய திண்ணையில் உட்காரச் சொல்லிச் சுட்டிக்காட்டினார்.

ஒரு காலத்தில் மைனரும் இவரும் சேர்ந்து ஊரில் 'கொடி கட்டிப் பறக்கவிட்ட' நினைவுடன், இன்றைய ராமகப்புவைப் பார்த்தால் நம்பத்தான் முடியவில்லை; ஆனால் அதெல்லாம் கதையல்ல. உண்மை. போன தடவை நான் ஊருக்கு வந்தபோது ராமகப்பு கதை போலத்தான் சொன்னார்.

''என்ன சேதி?'' என்று மறுபடியும் கேள்வியைப் போட்டு என்னைக் கலைத்தார் அவர்.

''சர்க்கார் உத்தியோகம். நான் லீவுக்கு மனு எழுதின போதெல்லாம் 'கிடையாது' என்று திருப்பி விட்டார்கள். இப்போது திடீரென்று மூணு வருஷத்து லீவையும் சேர்த்து எடுக்கச் சொல்லி மேலாவில் உத்தரவு. எனக்குக் கீழே இருக்கிறவனை மூணு மாசமாவது என் இடத்திலே உட்கார்த்தியாகணும். சரிதான் என்று வந்து விட்டேன். காலை வண்டிக்குத்தான் வந்தேன். அதற்குமேல் அம்மாஞ்சியைப் பார்க்காமல் இருக்க முடியுமா?''

''போகிறது! நீ ஒருத்தனாவது என் ஞாபகம் வைச்சிருக்கியே! எனக்கு அம்மாஞ்சி என்ற பட்டப் பெயர் இருந்தது எனக்கே மறந்து போச்சடா! என் தலைமுறை அநேகமாய் மறைஞ்சு போச்சு. இப்போ பார்க்கிற பிள்ளைகள், வெளியூரிலே வேலை பார்க்கிற பிள்ளைகள்; எவனும் இந்தப் பக்கம் திரும்புகிறதில்லை. எனக்கும் வயசாச்சே! ஏதாவது பழைய கதையை வைக்கத் தோணதோணப்போன்....''

''இல்லே, அம்மாஞ்சி! போன தடவை சொன்னேனே, மைனர் வாளைப் பற்றி, மறக்கக் கூடியதா அதெல்லாம்?''

''அதைக்கூட நீ பத்திரிகைக்கு எழுதிப்பிட்டியே! நல்ல வேளை, எதையும் மாத்தாமல் அப்படியே எழுதியிருந்தே!''

ராமகப்பு ஒரு தடவை பொடி போட்டுக் கொண்டு எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தார்.

தெருவில் பந்தலைக்கடந்து யாரோ போகிற நிழலாடிற்று. திரும்பிய ராமகப்பு, ''யாரது, மாலியா?'' என்று கேட்டார். மாலி என்ற அந்த வாலிபன் நின்றான். எதுவும் பேச வில்லை. தோளிலே ஒரு குழந்தை—இரண்டு வயது இருக்கும்; ஆனால் சோனியாக இருந்தது.

குழந்தை நடை நின்றதும் சிணுங்கிற்று.

''உம்.... குழந்தை அழறது. தூக்கிக் கொண்டு போ. குளத்தங்கரைப் பக்கம் கொண்டு போய்விளையாட்டுக் காட்டிச் சமா தானப்படுத்து!'' என்றார் ராமகப்பு. மாலி இதற்கும் பதில் எதுவும் சொல்லவில்லை. என்னையும் அவரையும் மாறி மாறிப் பார்த்து விட்டு (அந்தப் பார்வை எத்தனை விசித்திரமாய் இருந்தது!) மேலே நடந்து சென்றான் அவன்.

ராமகப்புவின் முகத்தில் வேடிக்கையான சிரிப்பு இழைந்தது.


''பார்த்தியா?''

''யார் அம்மாஞ்சி இது, பார்வையே ஒரு மாதிரியா யிருக்கே?''

''ஒரு மாதிரிதான்!'' என்று சொல்லி விட்டு மௌனமாகத் தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தார் ராமகப்பு. நான் அவலோடு காத்துக் கொண்டிருந்தேன். ராமகப்பு இரண்டாவது முறை பொடி போட்டுக் கொண்டார்.


''இது புதுமையான கதை! நீ இதை உன் இஷ்டம் போல் மாற்றிக் கொள்ளலாம். நான் அந்தக் காலத்துப் பேர்வழி. புதிய உத்தியெல்லாம் எனக்குத் தெரியாது பார்!''

ராமகப்பு ஆரம்பித்தார் — அவருடைய பாணியில். ஆனால் அதைவிடச் சிறந்த பாணை இருக்கிறதாக எனக்குத் தோன்றவில்லை.



''மேலத்தெரு கைலாசத்தின் பிள்ளை இந்த மாலி. கைலாசம் அயன் நஞ்செய் நிலமும், ஒரு வட்டி விதம் வாங்கி நிறைய ரொக்கமுமாகப் பிள்ளைக்குச் சேர்த்து வைத்திருந்தான். ஒரே பிள்ளை. பையன் உள்ளூர்ப் படிப்பு முடிந்ததும் டவுனுக்குப் போனான்.''

''அது வரை எனக்குத் தெரியும். அப்போது இவன் ரொம்



பச் சின்னப் பையன். அடையாளமே தெரியாமல் போய் விட்டான்.''

''அது வரையில் உனக்குத் தெரியும். ஆனால் அப்புறந்தானே கதையே ஆரம்பிக்கிறது!'' என்று சொல்லும்போதே ராமகப்புவின் குரலில் மறைந்திருந்த கண்டிப்பைப் புரிந்து கொண்டேன். இனிமேல் நான் குறுக்கே பேசக் கூடாது. மௌனமாகத் தலையசைத்தேன்.

ஃ ஃ ஃ

மாலி ஊருக்கு வருஷத்தில் இரண்டு மூன்று தடவைகள் வருவான். ஊரில் எல்லாரும் பெரிய இடத்துப் பிள்ளை பட்டணத்தில் படிக்கிறான் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தார்கள். நாலு வருஷங்கள் கழித்து மாலி திரும்பி வந்தான் படிப்பை முடித்துக்கொண்டு.

வந்தது முதலே ஒரு மாதிரியாக இருந்தான். ஊரில் முதலில் 'கசமுச' என்று பேசிக் கொண்டார்கள். பிறகு ஒரேயடியாக முடிவாகி விட்டது—பையன் 'ஒரு மாதிரி' தான் என்று. சாதாரணமாக, முதல் பார்வைக்கு, மாலி எல்லாரையும் போலத்தான் இருந்தான். ஆனால் நேரம் போகிறது தெரியாமல் குளத்தங்கரை மதகடியில் போய் நிற்பான். ஆடாமல், அசங்காமல் மணிக்கணக்காய்க் குளத்தையும்-அதிலே படரும் பெரிய அலைகளையும் பார்த்துக் கொண்டேயிருப்பான். சாலையோடு போகிறவர்கள் வேடிக்கை பார்க்கிறது அவனுக்குத் தெரியாது. அவன் கவனம் முழுதும் அலை மேலேயிருக்கும். கிட்ட நெருங்கிப் பத்து தடவை கூப்பிட்டாலும் பதிலே பேச மாட்டான். எப்போதாவது 'உம்' என்று திரும்பிப் பார்ப்பான். கண்தான் நம்மைப் பார்க்கும். நினைப்பெல்லாம் எங்கேயோ ?

'பைத்தியம்' என்றும் சொல்ல முடியாது. மாலி யாருக்கும் எந்தத் தொந்தரவும் செய்கிறதில்லை. பார்க்கப் போனால் அவன் யாரிட்டேயும் பேசுகிறதே யில்லை. ஊரிலே கொஞ்ச நாட்கள் சுவாரசியமாகப் பேசிக் கொண்டார்கள். அப்புறம் அலுத்துப் போய் ஓய்ந்து விட்டார்கள். ஆனால் பெற்றவளால் சும்மா இருக்க முடியுமா ? வசதியான குடும்பம்; ஒரே பிள்ளை. கலியாணமாக வேண்டிய வயசு. மாலியின் அம்மா தவித்தாள். எப்படியாவது பையனுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டால் சரியாகப் போய் விடும் என்று நினைத்தாள். உள்ளூரில், பக்கத்து ஊர்களில் பெண்ணைப் பெற்றவர்கள் யாருக்கும் துணிச்சல் இல்லை. பிள்ளையைப் பெற்றவளே வலுவில் வந்து கேட்டும், எல்லாரும் ஒதுங்கிப் போய் விட்டார்கள்.

நாலைந்து மாதங்கள் கழித்து ஒரு நாள் மாலியை ஊரிலே

காணவில்லை. மறுபடியும் சுவாரசியமான கதைகள் பரவ ஆரம்பித்தன. 'மாலிக்கு உடம்பு சரியில்லை. வைத்தியம் செய்து கொள்ள அவன் பட்டணம் போயிருக்கிறான்' என்று அவன் அம்மா சொன்னாள். ஆனால் பேச்சு வேறு மாதிரியாய் அடிபட்டது.

'உண்மையில் மாலிக்குப் பைத்தியமும் இல்லை; மன வியாதியும் இல்லை. எல்லாம் நடிப்பு. இத்தனை நாட்களும் எல்லாரையும் ஏமாற்றினான். படிக்கும் போதே அவனுக்கு ஒரு பெண்ணிடம் ஆசையாம். அவளைத் தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்றானாம். அம்மா அதற்குச் சம்மதிக்கவில்லை. எப்படியாவது அவனுடைய மனசை மாற்றிவிட வேண்டும் என்ற நினைப்பில்தான் இத்தனை நாள் 'ஒரு மாதிரி'யாக நடித்திருக்கிறான். அவன் நடிப்பு பயன்படவில்லை. கடைசியில் 'அம்மாவுடன் சண்டை போட்டுக் கொண்டு ஊரை விட்டுப் போய் விட்டான். ஒரு நாளைக்கு 'ஜம்'மென்று அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டு வந்து நிற்கப் போகிறான்' என்று ஒரு வதந்தி.

கொஞ்ச நாள் விஷயம் கிணற்றில் போட்ட கல்லாக இருந்தது.

ஃ ஃ ஃ

ராமகப்பு கதையை நிறுத்தினார். இடது கையில் பொடி மட்டை வாய் திறந்து நிற்க, வலக்கையின் இரு விரல்கள் சின் முத்திரை வடிவில் பொடியுடன் வெளிப்பட்டன.

''அப்புறம்?'' என்றேன்.

''உம்.....ம்! இது வரை கதை உனக்குச் சுவாரசியப்படவில்லை. இனி மேல்தான் முக்கியமான கட்டம்.''

'சர்ர்' என்று பொடி உள்ளே போயிற்று.

'மேலத் தெருவிலே கோடி வீட்டிலே அப்பாசாமி வாத்தியார் இருக்கிறாரே, அவர் தம்பி ஒருத்தர் வடக்கே எங்கேயோ வேலையாக இருந்தாரே, தெரியுமா?'' என்று ஒரு கேள்வியைப் போட்டார் ராமகப்பு.

நான் நினைவுகளைத் துளைத்துத் தேடினேன். பயன்படவில்லை.

''அவர் ஒரு ரயில் விபத்திலே போய் விட்டார். அவருக்கு ஒரு பெண். தாயில்லாப் பெண். இப்போது வேறு யாரும் இல்லை, இந்த ஆசாமியைத் தவிர....'

'' உம்...'' என்று தலையசைத்தேன்.

ஃ ஃ ஃ

மனோரமா திடீரென்று ஒரு நாள் காலை வேளையில் வந்து குதித்தாள். தெருவில் வண்டி வந்த சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தவர்கள் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். அத்தனை அழகு; நாகரிகத் தோற்றம். ஊரில் கதை கட்டுகிறவர்களுக்கு மறுபடியும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. யார் எது வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும் என்று மனோரமா அலட்சியமாகத் தெருவில் நடமாடினாள். டவுனுக்குத் தனியாகப் போய் விட்டு வருவாள். வேளைக்கு ஓர் அலங்காரம். நாளைக்கு ஒரு மாதிரி நடை.

மனோரமாவைப் பற்றின செய்திகூடச் சுவாரசியம் குறைந்து, அவளைப் பற்றிய பேச்செல்லாம்கூடக் குறைந்து போய்விடும் போன்ற நிலை வந்து விட்டது. ஆனால் அந்தச் சமயம் பார்த்து மாலி மறுபடியும் வந்து சேர்ந்தான்.

தனியாக வரவில்லை அவன். தகுந்த துணையோடு, அதாவது அவனோடு ஒரு போலீஸ்காரரும் வந்தார். மாலியை அவன் அம்மாவிடம் ஒப்படைத்து விட்டுப் போனார். விஷயம் ஒரே ஆச்சரியமாகவும் மர்மமாகவும் இருந்தது. மாலி ஏதோ குற்றம் செய்து விட்டான், இத்தனை நாட்களும் 'உள்ளே' இருந்து விட்டு வருகிறான் என்றும், அவன் யாரையோ கொலை செய்து விட்டான், தகுந்த சாட்சி கிடைக்காததால் இன்னமும் வழக்குப் போடவில்லை என்றும் பேசிக் கொண்டார்கள். எதுவும் நம்பும்படி இல்லை, அவனைப் பார்த்தால். இப்போது மாலி முன்னைப் போல் 'ஒரு மாதிரி'யாகக்கூட இல்லை. சர்வ சாதாரணமாகத்தான் இருந்தான்; நடந்து கொண்டான்.

அவனுக்கு ஏற்பட்டிருந்த பித்த நிலை தெளிந்து விட்டது என்றே எனக்குத் தோன்றியது. ஆனால் அவன் முகத்தில் மட்டும் ஒரு வேதனை நிழலடித்திருந்தது. பார்க்கப் பரிதாபமாக இருந்தான்.

ஒரு நாள் தெருவோடு போகும் போது, ''என்ன மாலி, என்ன சேதி?'' என்று கேட்டு வைத்தேன். எத்தனை தடவைகள் கூப்பிட்டாலும் திரும்பியே பார்க்காதவன், அப்போது நிதானமாகப் படியேறி வந்து எதிர்த் திண்ணையில் உட்கார்ந்தான். அவனுடைய கண்கள் 'கரகர' வென்று கலங்கின.

''என்ன விஷயம் மாலி?'' என்று மெல்லிய குரலில் கேட்டேன்.

''மனசே சரியில்லை, அம்மாஞ்சி! ஊரிலே எல்லாரும் என்னைக் கொலைகாரன் மாதிரி பார்க்கிறார்கள். என்னால் வாய் திறந்து பேச வழியில்லை.''

பெருமூச்சு விட்டான் அவன்.

''அதைப் பற்றிக் கவலைப்படாதே மாலி. விட்டுத் தள்ளு. ஊரே ரொம்ப மோசம்.''

''உங்களிடம் உண்மையைச் சொல்லி விடுகிறேன். அப்போதுதான் உங்களுக்குப் புரியும். ஆனால் அவசரப்பட்டு வெளியே யாரிடமும் சொல்லிவிட வேண்டாம்.''

நான் 'சரி' என்று தலையை ஆட்டினேன். அவன் சொன்னான்:

'நான் காலேஜில் என்னோடு படிச்ச பெண் ஒருத்தியோடு ஆசையாய்ப் பழகினேன். அவளும் என்னிடம் அன்பாய், சினிமா, கடற்கரை என்றெல்லாம் என்னோடு சுற்றினாள். நான் விளையாட்டாக நினைத்துக் கொண்டிருந்தேன். படிப்பு முடிந்து வரும் போது அதையெல்லாம் மறந்து விட்டேன். வந்து பத்து நாளைக்கெல்லாம் அவளிடமிருந்து தபால் வந்தது. உடனே அவளைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்; இல்லாவிட்டால் நான் எழுதின கடிதங்களையெல்

ணம் வைத்து என் பேரில் வழக்குப் போடுவேன் என்று ஏதேதோ எழுதியிருந்தாள். எனக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லை. ஒரு யோசனை செய்தேன். பைத்தியம் போல் வேஷம் போட்டேன். அப்புறம் பட்டணம் போய் ஒரு டாக்டரிடம் வைத்தியம் பார்த்துக் கொள்கிறமாதிரி தங்கினேன். அவளே நேரில் வந்து பார்த்தாள். டாக்டரும் 'மூளை சரியில்லை' என்று சொன்னார். வந்தவள் எதுவும் பேசாமலே போய் விட்டாள். என் நடிப்புக்கு வெற்றி யென்று சந்தோஷத்தோடு ஊர் திரும்பினேன்.''

'ஓ!' என்றேன் நான் ஆச்சரியம் தாங்காமல்.

''ஆனால் அப்புறந்தான் நான் செய்த பெரிய தப்பு எனக்குப் புரிந்தது. அநியாயமாய் ஒரு பெண்ணை ஆசை காட்டி ஏமாற்றி விட்டேன். சரியான தூக்கமே இல்லாமல் தவித்தேன். எப்போதும் கண்ணீரோடு அவள் முகம் எதிரே வந்து நிற்கும். என்னால் தாங்க முடியவில்லை. அவளுக்கு எழுதினேன், என்னை மன்னிக்கும்படியும், நான் அவளையே கல்யாணம் செய்து கொள்வதாயும் எழுதினேன்.....''

''என்ன ஆச்சு ?''

''அவளுக்கு வேறே இடத்திலே கலியாணம் நிச்சயமாகி விட்டதாம். தெய்வம் என்னை ஒரு நாளும் மன்னிக்காது என்று பதில் எழுதி விட்டாள். இதுதான் உண்மை அம்மாஞ்சி!'' என்றான் மாலி.

'கவலைப்படாதே மாலி' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தேன்.

பிறகு அடிக்கடி மாலி இங்கே வருவான். அதோடு மேலத் தெரு அப்பாசாமி வீட்டுக்கு மனோரமா என்று ஒரு பெண் வந்திருப்பதாகச் சொன்னேனே, அவளும் எப்போதாவது இங்கே வருவாள். ஊரில் மாலிக்கு நான் பேச்சுத் துணை. அதே மாதிரி மனோரமாவுக்கு என் வீட்டுக்காரி.

இரண்டு மூன்று தடவை மாலியும் மனோரமாவும் தற்செயலாகச் சந்தித்தார்கள். பிறகு சந்திப்பதற்காகவே சமயம் பார்த்து இருவரும் இங்கே வந்தார்கள். மாலியின் முகத்தில் பழைய வேதனை இல்லை இப்போது. உற்சாகமாக இருந்தான். எனக்கு உண்மை புரிந்தது. மாலியை நேராகவே, ''மனோரமாவைக் கலியாணம் செய்துகொள்கிறாயா?'' என்று கேட்டேன். அவனும் இது மாதிரி ஒரு கேள்வியைத்தானே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் ?

கடைசியில் மாலி தன்னைப் பற்றின உண்மை முழுவதையும் மனோரமாவிடம் விவரித்துச் சொல்லிவிட வேண்டும், பிறகு அவள் சம்மதித்தால் கலியாணம் என்று முடிவு செய்தோம்.

மனோரமா முழுக் கதையையும் கேட்டாள். ''என்னைப்பற்றியும் ஒரு உண்மையைச் சொல்லிவிட வேண்டும். அதை இப்போது சொல்ல மாட்டேன். நாளைக்கு எழுதிக் கொடுப்பேன். படித்துப் பார்த்து விட்டுச் சம்மதமானால் கல்யாணத்துக்கு நானும் தயார். இஷ்டப்படா விட்டால் அந்த உண்மையை யாரிடமும் சொல்லக் கூடாது'' என்றாள் அவள்.

மறு நாள் மாலை மாலி வந்தான் உற்சாகமாக: ''அப்பாசாமியிடம் சொல்லிக் கல்யாணஏற்பாடுகளைச் செய்யுங்கள் அம்மாஞ்சி!'' என்றான். மனோரமா என்ன உண்மையை எழுதிக் கொடுத்தாள் என்று நானும் கேட்கவில்லை; அவனும் சொல்லவில்லை.

கல்யாணமும் நடந்தது.

❀ ❀ ❀

''அவ்வளவுதானா?'' என்றேன்.

''இன்னும் இருக்கிறதே. அதோடு முடிந்து விட்டால் அதில் என்ன அதிசயம் இருக்கிறது ?''

''மாலிக்கு மறுபடியும் மூளைக் கோளாறு வந்து விட்டது.....''

''அவசரமாக முடிக்க வேண்டும். அது தானே புதுமை? கல்யாணமாகி ஒரு வருஷம் முடிந்தது. மனோரமா ஒரு குழந்தையைப் பெற்று விட்டுக் கண்ணை மூடிவிட்டாள். 'இன்னும் ஒரே வருஷம். அதற்கு மேல் எந்த நிமிஷத்திலும் என் உயிர் போய்விடலாம். என் இருதயம் அத்தனை பலமில்லாததாக இருக்கிறது என்று டாக்டர் முடிவு செய்து விட்டார்' என்றுதான் மனோரமா மாலிக்கு எழுதியிருந்தாளாம். ஒரு மாசத்தில் உண்மையாகவே மாலிக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டு விட்டது. எப்போதாவது இந்த மாதிரிக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போவான். என்னிடம்கூட இரண்டு வருஷமாய்ப் பேசுகிறதில்லை. நீதான் பார்த்தாயே, கொஞ்ச நேரம் முன்னால், குளத்தங்கரை மதகடி — சின்ன அலை பெரிய அலை இப்படியே அவன் நாள் கழிகிறது....''

ராமசுப்பு மறுபடியும் பொடியைத் திரட்டினார். நான் பிரமையோடு பார்த்துக் கொண்டிருந்தேன்.

டாக்டர் ஸ்ரீஹரியின் சுற்றுப்பயணம்

நாட்டு வைத்தியம் டாக்டர் ஸ்ரீஹரி அவர்கள் 3–5–65 சென்னையை விட்டுப் புறப்பட்டு 5–5–65 புதுடெல்லி சேருகிறார். அங்கு ஜந்தர்மந்தர் ரோட்டிலுள்ள சௌத் இந்தியா கிளப்பில் தங்குகிறார். 7–5–65 டில்லியிலிருந்து புறப்பட்டு 9–5–65 ஹைதராபாத் வந்து, ஸுல்தான் பஜார் ரோட் தாஜ்மகால் ஹோட்டலில் தங்குகிறார். 10–5–65 ஹைதராபாத்திலிருந்து புறப்பட்டு 11–5–65 சென்னை வந்து சேருகிறார்.

சேவைக்கு முதல்வர்

ஆசிரியர்கள் தங்கள் மாதச் சம்பளத்தை மனமுவந்து கணிசமான அளவில் குறைத்துக் கொண்டார்கள். தங்கள் சேவையைத்தான் பெரிதாகக் கருதினார்களே தவிரத் தங்கள் சொந்தக் கஷ்டங்களைப் பொருட்படுத்தவில்லை. அப்படி ஒரு காலம்!

தொழில் நினைவுகள்



ஒரு போர்க்களத்தில் வெற்றி கண்டவர், 'வீரர்' பட்டம் பெறுவதில் ஆச்சரியமில்லை. அந்த வீரரே தொடர்ந்து இரண்டு போர்க்களங்களில் அமோக வெற்றி கண்டால் அவரைப் 'பரம வீரர்' என்று அழைப்பதில் தவறு ஒன்றும் இல்லையல்லவா?

போர்க்களத்தை விடச் சிக்கல்கள் நிறைந்த மாணவர்களின் 'வேலைநிறுத்தக் களத்தை' வெவ்வேறு சூழ்நிலைகளில் தொடர்ந்து இரண்டு சந்தர்ப்பங்களில் நிதானத்துடனும், ஆத்திரப்படாமலும் சமாளித்து வெற்றி கண்ட திருச்சி தேசியக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் ராமய்யருக்கு எத்தகைய வீர சின்னது அளித்தாலும் பொருத்தமாகத்தான் இருக்கும்.

ஆங்கிலம் போதிப்பதில் அவர் எவ்வளவு தீரராக இருந்தாரோ, அந்த அளவுக்கு ஆவேசம் நிறைந்த மாணவர்களைச் சாத்வீக முறையில் வழிக்குக் கொண்டு வரும் வகையிலும் தீரராகவே இருந்தார். தோற்றத்தில் மாத்திரமல்ல! குணத்திலும் அவர் ஒரு காந்தியவாதிதான்!

1916ம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரி மூலம் ஆங்கிலப் பாடத்தில் 'ஹானர்ஸ்' பட்டம் பெற்ற ராமய்யர், அந்த ஆண்டிலேயே உபாத்தியாயர் படிப்புக்கான பட்டம் பெற்றுச் சர்க்கார் பள்ளிகளிலேயே போதகராக அமர்ந்திருக்கலாம். ஆனால் அவர் அந்த வழியைப் பின்பற்றத் தயாராக இல்லை. உபாத்தியாயர் தொழிலில் ஈடுபாடு இருந்தது. ஆனால் தனியார் கல்லூரிகளில் நுழைய விரும்பினார்.

1917ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடி ஃபின்ட்லே கல்லூரியிலிருந்து இவருக்கு அழைப்பு வந்தது. இளைஞர் ராமய்யர் மூன்று ஆண்டுகள் 'காண்ட்ராக்டில்' ஃபின்ட்லே கல்லூரியில் போய்ச் சேர்ந்தார். அவர் மனத்துக்குப் பிடித்த சூழ்நிலை. ஆனால் முதல் ஆண்டு முடிந்தபோதே நிர்வாகம் அவரைத் தொடர்ந்து கல்லூரியில் ஆசிரியராக வைத்துக்கொள்ள ஆர்வம் காட்டவில்லை. காரணம் ராமய்யரின் திறமைக் குறைவோ அல்லது கல்லூரி நிர்வாகத்தின் ஆட்குறைப்புத் திட்டமோ அல்ல. திரு ராமய்யர் கல்லூரி மாணவர்களுடன் சரளமாகப் பழகி அவர்களுடைய அபரிமித அன்புக்குப் பாத்திரமானதுதான் மறைமுகக் காரணம்.

1918ல் திருநெல்வேலி இந்துக் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்தார். திருச்சி தேசியக் கல்லூரியின் ஆரம்பகால பிரின்ஸிபாலாக விளங்கிய சாரநாதன் அதற்கு முந்திய வருடம்வரை திருநெல்வேலி இந்துக் கல்லூரியில்தான் பணியாற்றிக் கொண்டிருந்தார். 1919ம் ஆண்டில் திரு கே. ராமானுஜாச்சாரியாரின் ஆர்வத்தின் காரணமாகத் திருச்சியில் தேசியக் கல்லூரி தோன்றித் திரு சாரநாதன் அத்துடன் ஐக்கியமானபோது ஆசிரியர் குழுவில் திரு ராமய்யரும் இடம் பெற விரும்பினார். இத்தனைக்கும் சாரநாதன் ராமய்யரை நேரடியாகச் சந்தித்தது கூட இல்லை. மன்னார்குடியிலிருந்தும் திருநெல்வேலியிலிருந்தும் அவர் செவிகளுக்கு எட்டிய செய்திகள்தான் அவர் விருப்பத்துக்கு அஸ்திவாரமாக இருந்தன.

இந்தக் கட்டத்தில்தான் ஒரு சுவாரசியமான நிலை தோன்றியது. மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும் அந்த வேளையில் ஓர் ஆங்கில ஆசிரியர் தேவைப்பட்டது. மதுரையிலிருந்து ராமய்யருக்கு அழைப்பு வந்தது. நூறு ரூபாய் சம்பளம் கொடுக்க முன்வந்தார்கள். ராமய்யர் நூற்றிப் பத்து ரூபாய் கேட்டுப் பதில் எழுதினார்.

அதே நேரத்தில் சாரநாதனிடமிருந்தும் அழைப்பு வந்தது. அமெரிக்கன் கல்லூரி நூற்றி ஐந்து ரூபாய் கொடுப்பதாகத் தந்தி கொடுத்தது. ஏலக் கடையில் விலையை உயர்த்திக்கொண்டு போவது போன்ற சூழ்நிலை. ராமய்யர் யோசித்தார். சாரநாதனிடமிருந்து இரண்டாவது கடிதமும் மதுரையிலிருந்து நூற்றிப் பத்தே கொடுப்பதாக

இரண்டாவது தந்தியும் வந்தன. ராமய்யர் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். திருச்சி தேசியக் கல்லூரிக்கே 1919ம் ஆண்டில் வந்து சேர்ந்தார். அந்த ஆண்டிலிருந்து 1950ல் அங்கிருந்து ஓய்வு பெறும்வரையில் தம் சேவையை அந்தக் கல்லூரிக்கு இடைவிடாது அர்ப்பணித்தார்.

ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர், சர். டி. தேசிகாச்சாரியார் போன்ற பெரியோர்களின் விடாமுயற்சியாலும் உழைப்பாலும் தோன்றிய இந்தத் தேசியக் கல்லூரிக்கு இடை இடையே பல தடவைகள் பொருளாதார நெருக்கடிகள் தோன்றின. சாரநாதன், ராமய்யர் போன்ற ஆசிரியர்கள், தங்கள் மாதச் சம்பளத்தை மனமுவந்துகணிசமான அளவில் குறைத்துக் கொண்டார்கள். இந்தச் சம்பள வெட்டு பல வருடங்கள் தொடர்ந்து அமுலில் இருந்தது. ஆசிரியர்கள் தங்கள் சேவையைத்தான் பெரிதாகக் கருதினார்களே தவிரத் தங்கள் சொந்தக் கஷ்டங்களைப் பொருட்படுத்த வில்லை! அப்படி ஒரு காலம்!

தேசியக் கல்லூரியில் 1939ம் ஆண்டில், நுழைந்து இருபது வருடங்களுக்குப் பிறகு ராமய்யர் அந்தக் கல்லூரியின் உதவி முதல்வரானார். 1947லிருந்து 1950 வரை முதல்வராக வீற்றிருந்து ஓய்வு பெற்றார்.

1948ம் ஆண்டு நவம்பர் மாதம். கல்லூரியில் தேர்வுப் பரீட்சைகளுக்கான ஆயத்தம் செய்து கொண்டிருந்த வேளை. திடீரென்று மாணவர்களிடையேயிருந்து ஒரு கோஷம் எழுந்தது. 'தேர்வுப் பரீட்சை ஒழிக' என்பதுதான் அந்தக் கோஷம். முதல்வர் ராமய்யர் சக ஆசிரியர்களைக் கலந்து ஆலோசித்தார். இந்தக் கோஷத்துக்கு இடமே இல்லை என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். இதற்குள் கல்லூரி வாயிலில் உண்ணாவிரதமும், விடுதி மாணவர்களின் கலாட்டாவும் அதிகமாயின. 'இந்தச் சூழ்நிலையை மாணவர்கள் தாங்களாக உருவாக்கியதில்லை. அரசியலில் ஈடுபட்ட பெரியார்களின் கைப்பாவைகளாக அவர்கள் மாறி விட்டிருக்கிறார்கள். அவர்கள் விநியோகிக்கும் துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்படும் இடங்களிலிருந்தே இந்த விஷயம் தெளிவாகிறது' என்று நிச்சயித்த முதல்வர், மாணவர்களிடம் பேசிப் பார்த்தார். அவர்கள் காரியச் செவிடாக மாறினார்கள். கல்லூரிக் கமிட்டித் தலைவரிடம் விஷயத்தைச் சொன்னார். 'நீங்கள் போதிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுங்கள். அவசியமானால் நானே நேரில் வருகிறேன்' என்றார் அவர்.

''ஐயா! எந்தச் சந்தர்ப்பத்திலும் தாங்கள் இதில் தலையிட வேண்டாம் என்பதற்காகத்தான்* இப்போதே தங்களிடம் விஷயத்தைச் சொல்ல முன் வந்தேன். தாங்கள் அங்கு தலையிட்டால், முதல்வர் தம் திறமையில் நம்பிக்கை இழந்து உங்களை உதவிக்கு அழைத்தார் என்ற பேச்சு எழும். நானே இதைச் சமாளித்துக் கொள்வேன்'' என்று கூறி விட்டு வந்தார்.


மிகுந்த வேதனையுடன் ஒன்றிரண்டு உயர் போலீஸ் உத்தியோகஸ்தர்களின் உதவி கொண்டு உண்ணாவிரத மாணவர்களை அப்புறப்படுத்தினார். மாணவர்களின் பெற்றோர்களை வரவழைத்துப் பேசினார். அப்படியிருந்தும் 'போலீஸ் தர்பார், மாணவர்களுக்கு அடி உதை' என்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. ஓர் ஆசிரியரே மாணவர்களின் அனுதாபத்தைப் பெற அவர்களிடம் போய்த் தம் ஆட்சேபணையைப் பொருட்படுத்தாமல் கல்லூரி வட்டத்துக்குள் முதல்வர் போலீசை அனுமதித்ததாக வத்தி வைத்தார். உண்மையில் அவர்தான் முதல்வரிடம் ஒழுங்குப் பராமரிப்புக்குப் போலீஸ் தேவை என்று வற்புறுத்தியிருந்தார். சற்றுக் காலம் கடந்ததும் மாணவர்கள் நேரான வழியில் சிந்திக்கத் தொடங்கினார்கள். வேலைநிறுத்தம் வாபஸாகியது. தேர்வுப் பரீட்சையும் அவகாசம் கொடுக்கப்பட்டுப் பிப்ரவரி மாதத்தில் நடந்தது. கல்லூரிக்கோ, மாணவர்களுக்கோ, எந்தவித அவப் பெயரும் இல்லாமல் விவகாரம் முடிந்தது.

'வெள்ளையனே வெளியேறு' கோஷம் எழுந்த காலத்தில் ராமய்யர் தாற்காலிக முதல்வராக இருந்தார். வேலைநிறுத்தம் செய்யப் போவதாக மாணவர்கள் அறிவித்தார்கள். ''உங்கள் தேசிய உணர்ச்சியைத் தடை செய்ய எனக்கு உரிமை இல்லை. ஆனால் உங்களில் யாருக்கு வகுப்புக்கு வர விருப்பமில்லையோ அவர்கள் வெளியிலிருக்கலாம். உங்களோடு கலந்து கொள்ளாத மாணவர்களை நீங்கள் வற்புறுத்தக் கூடாது. சம்மதமா?'' என்று கேட்டார் முதல்வர். மாணவர்கள் அவரைப் புரிந்து கொண்டார்கள். நிலைமை பாராட்டத்தக்க வகையில் உருவாகி மறைந்தது!

திருச்சி தேசியக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்று ஓர் ஆண்டுக் காலம் சும்மா இருந்தார். அப்போதுதான் கொல்லம் நகரிலிருந்த ஸ்ரீ நாராயணா கல்லூரியிலிருந்து முதல்வர் பதவி ஏற்க அவரை அழைத்தார்கள். கேரள முன்னாள் முதல்மந்திரி திரு ஆர். சங்கர், கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவர். கல்லூரி ஆரம்பித்து மூன்றே ஆண்டுகள் ஆகியிருந்தாலும் முதல்வர்கள் யாரும் அங்கு நிலைத்து நிற்கவில்லை. ஒருவர் பின் ஒருவராய் மூவர் வந்து போய் விட்டார்கள். அப்படி ஓர் அசாதாரணமான சூழ்நிலை அங்கு நிலவியது.

ராமய்யர் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார். அவருடைய நண்பர்கள் அவரைப் பயமுறுத்தினார்கள். அவருடைய பெருமைக்குக் குந்தகம் விளையும் என்று அஞ்சினார்கள். ராமய்யர் இதை ஒரு சவாலாகவே ஏற்றுக்கொண்டார். 'என்னுடைய இத்தனை நாள் ஆசிரிய அனுபவம் எனக்குத் தோல்வி தேடித் தருமானால் நான் ஆசிரியனாக இருந்து பலனில்லை. அதைப் பரீட்சை செய்து பார்த்து விடலாம்' என்று கொல்லத்துக்குப் புறப்பட்டார்.

1951ம் ஆண்டிலிருந்து 1960ம் ஆண்டு வரை, ஒன்பது வருட காலம் அங்கு பெருமையுடன் முதல்வராகப் பணியாற்றி அறுபத்தி ஐந்து வயதை அடைந்த ஒரே காரணத்துக்காக ஓய்வெடுத்துக் கொண்



"தளி தளி..... தளிக்.....டக்கும்! ரெப்ரி சார்.'.. இச்க இச்க மூட்டனுர், இந்த ஆளு!"

டார். மாணவர்களுக்கும் சக ஆசிரியர்களுக்கும் உற்ற நண்பராக விளங்கி அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமானர்.

இங்கும் அவருக்குக் கடைசி ஆண்டில் 'வேலை நிறுத்தக் களம்' ஒன்று காத்திருந்தது. அரசியல் ஈடுபாடு கொண்ட சில பிரமுகர்கள் மாணவக் குழுக்களைக் கையில் போட்டுக் கொண்டு, கல்லூரியில் போராட ஒரு சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

'முன் அனுமதியில்லாமல் வகுப்புகளுக்கு மட்டம் போடும் மாணவர்கள் அபராதமாக இருபத்தி ஐந்து பைசாக்கள் கட்ட வேண்டும்' என்று முதல்வர் அறிக்கை விடுத்தார். 'ஆஹா! இது எங்கள் ஜீவாதார உரிமையையே பறிக்கிறது' என்று சீறு கொண்டு எழுந்தார்கள் மாணவமணிகள். 'பரவாயில்லை! மட்டம் போட்டு விட்டு மீண்டும் வரும் போதாவது நீங்கள் நடந்து போனதுக்கு அனுமதி கேட்டால் ஒப்புக் கொள்ளப்படும்' என்றார் முதல்வர். 'முடியாது! சுற்றறிக்கை வாபஸாக வேண்டும்' என்ற கோஷம் ஓங்கி எழுந்தது.

வேலை நிறுத்தக் கட்சியைச் சேர்ந்த மாணவர் தலைவன் தனிமையில் வந்து, "இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் விட முடியாது. எப்படியாவது 'ஸ்டிரைக்' பண்ணியாக வேண்டிய நிர்ப்பந்தம். நான் உடல் சரியில்லை என்று ஆஸ்பத்திரியில் போய்ப் படுத்துக் கொள்ளப் போகிறேன். என் நண்பர்கள் வேலை நிறுத்தம் செய்வார்கள்" என்று சொல்லி விட்டு முன்னேற்பாடாக ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டான். நண்பர்கள் வீராவேசத்துடன் கிளம்பினார்கள்.

இந்தத் தடவை கல்லூரி முதல்வர், போலீசாரைக் கல்லூரி வட்டத்துக்கு வெளியே நிறுத்தி விட்டார். மாணவர்களுக்கு ஏமாற்றம். அவர்கள், 'போலீஸார் உள்ளே வரவேண்டும். அதைச் சாக்காக வைத்துப் பிரசாரம் பண்ண வேண்டும்' என்ற ஆவலுடன் இருந்தார்கள். அதற்கு இடமில்லாமல் போகவே 'வேலைநிறுத்தம்' பிசுபிசுத்தது. மிகவும் ஓங்கிக் கூப்பாடு போட்ட ஐந்து மாணவர்களை மாத்திரம் கல்லூரியை விட்டு வெளியே அனுப்ப வேண்டியதாயிற்று. நிலைமை எந்தவிதச் சிக்கலுமில்லாமல் சீராகி விட்டது.

அவர்களில் ஒருவர் இன்று ஒவியத் துறையில் நுழைந்து நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறாராம். அவர் ராமய்யரைச் சென்னையில் சந்தித்துத் தாம் அன்று கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டது கல்லூரிக்கும் தமக்கும் நன்மையாகவே முடிந்தது என்று மகிழ்ச்சியடைந்தாராம்!

'ஸ்டிரைக்' நடத்திய அதே மாணவர்கள் தாங்களாகவே பணம் வசூலித்து, ராமய்யரின் வண்ண ஒவியத்தைத் தீட்டச் செய்து ஸ்ரீ நாராயணு கல்லூரியில் மாட்டினார்கள். எழுநூறு ரூபாய் பெறுமான அந்த முழு உருவ ஒவியம் அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு என்றென்றும் அவரைப் பசுமையாக நினைவூட்டிக் கொண்டிருக்கும்.

1926ம் ஆண்டில் திருச்சி தேசியக் கல்லூரியில், தேசிய புத்தகங்களுக்காக ஒரு வாசகசாலையையே தொடங்கினார். அந்த நாட்களில் கல்லூரிகளுக்குத் தேசிய இலக்கியங்கள் வாங்க அனுமதியோ சர்க்கார் பண வசதியோ கிடையாது. நண்பர்கள் பணமாகவும் புத்தகமாகவும் கொடுத்து உதவினார்கள்.

பல வருடங்களாகத் தாம் சேர்த்த அநேக உயர்ந்த புத்தகங்களை ராமய்யர், பல கல்லூரிகளுக்கும் அன்பளிப்பாக வழங்கி விட்டிருக்கிறார். இருக்கும் இடப் பிரச்னை அவர் இதயத்தை விசாலமாக்கி விட்டது.

சேவையிலே ஆர்வம் காட்டிய ராமய்யர் தம் தேவைகளைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட்டதேயில்லை. சம்பளக் குறைப்பும் உயராத சம்பளமும் அவர் சேவை நாட்கள் முழுதும் அவரைத் தொடர்ந்து வந்திருக்கின்றன. ஸ்ரீ நாராயணு கல்லூரியில் சேவை புரிந்த ஒன்பது ஆண்டு காலத்திலும் அவர் ஒரே சம்பளம்தான் பெற்று வந்தார்.

அந்தப் பெருந்தன்மையைப் பாராட்டும் வகையில் அவர் ஒய்வு பெற்றுக் கிளம்பியதும் அடையாள அன்பளிப்பாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் பண முடிப்புக் கொடுத்தார்கள். அதைவிடப் பன்மடங்கு பெருமை வாய்த்தது அந்த வேளையில் அவருக்கு அளிக்கப்பட்ட பாராட்டுப் பத்திரத்தில் காணப்படும் சில வரிகள்.

"வெகு சிரமமான காலத்தில் இந்தக் கல்லூரி இருந்தபோது இவர் முதல்வர் பதவி ஏற்றுக் கொண்டார். இன்று, கோனத்திலேயே அது உன்னத நிலையில் நிற்கும்போது அவர் ஒய்வு பெற்றுச் செல்கிறார்" என்ற வாசகம் எல்லா முதல்வர்களையும் வந்து அடையக் கூடியதல்லவே!

ஆங்கில மொழி வித்தகரான இவருடைய இன்றைய பொழுதுபோக்கும், அன்றைய தொழிலும், நல்ல முறையில் ஆங்கிலத்தை எப்படிக் கற்பிப்பது என்று ஆராய்ச்சி செய்வதுதான்! —**கோமதி ஸ்வாமிநாதன்**

இந்தியன் பாங்க் லிமிடெட்

**இந்தியன் பாங்கின் 58வது வருடாந்திரக் கூட்டத்தில்
சேர்மன் டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார், செட்டிநாடு Kt. D. Litt, M. L. C. அவர்கள்
பாங்கின் பங்குதாரர்களை வரவேற்று நிகழ்த்திய சொற்பொழிவின் முக்கிய அம்சங்கள்:**

கடந்த ஆண்டில் இந்தியன் பாங்க் வரவு செலவு லாப நஷ்டக் கணக்கு விவரங்களைப் பரிசீலனை செய்து பார்த்தால், **பாங்கின் முன்னேற்றம் பெருமிதம் கொள்ளத்தக்கதாக இருக்கிறது.** கடந்த ஆண்டு ரூ. 49.44 கோடியாக இருந்த டெபாசிட்டுகள் இந்த வருடம் 54.80 கோடியாக உயர்ந்துள்ளது. மொத்த வருமானம் ரூ. 3.18 கோடியிலிருந்து 3.59 கோடியாக வளர்ந்திருக்கிறது. பணித்துறைச் செலவு 13.8 சதவிகிதத்துக்கு உயர்ந்துள்ளது. பொதுவாக வட்டி விகிதம் உயர்ந்திருப்பதால் டெபாசிட்டுகளின் பேரில் செலுத்தப்பட்ட வட்டியும் 12.2 சதவிகிதத்துக்கு உயர்ந்துள்ளது. மொத்தச் செலவின் உயர்வுக்கு இந்த இரண்டும் பிரதான அம்சங்கள். கடந்த ஆண்டில் அஹமதாபாத், அருப்புக்கோட்டை, செம்பூர், குரோம்பேட்டை, குடியாத்தம், திருவான்மியூர், வில்லிவாக்கம் ஆகிய இடங்களில் கிளைகள் திறக்கப்பட்டன.

சென்ற ஆண்டு நிகழ்ந்த மிகவும் துக்ககரமான செய்தியான மதிப்புக்குரிய மாபெரும் தலைவர் பிரதமர் நேருவின் மரணத்தைக் குறிப்பிட்டு, அவரது புனிதமான நினைவுக்கு அஞ்சலி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பாங்க் டைரக்டர் டாக்டர் பி. வி. ராஜமன்னார் மத்திய சர்க்கார் நிதிக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதும், மற்றொரு டைரக்டர் ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர் ''பத்ம பூஷண்'' விருது பெற்றிருப்பதும் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் என்றார்.

கடந்த ஆண்டில் என்றும் இல்லாத அளவு விலைவாசி உயர்ந்து வாழ்க்கைச் செலவு அதிகரித்திருந்தது. சர்க்கார் நிலைமையைச் சமாளிக்க கொள்முதல், கையிருப்பு, அபிவிருத்தி, சட்டரீதியாக இல்லாத உணவுப் பங்கீடு முறை ஆகிய நடவடிக்கைகளைத் தற்கால சாந்தியாகத்தான் அமைத்தது. தொழில் துறையிலும் சாதனை எதிர்பார்த்த அளவு இல்லை. வேளாண்மைத் துறையில் தேக்கம், அன்னிய செலாவணி பற்றாக்குறை தொழிலாளர் பிரச்னைகள், உயர்ந்து கொண்டே போகும் வரி விகிதங்கள் இதற்கு முக்கிய காரணங்கள். பொதுமக்கள் முதலீடு செய்வதற்கு அனுகூலமான சூழ்நிலை இல்லாததால் தொழில் துறை அபிவிருத்தி மட்டுப்பட்டிருக்கிறது. எனவே புதிய தொழில் நிறுவ சர்க்கார் கையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இது ஓரளவுக்குச் சரி என்றாலும் இதையே எதிர்பார்த்து தனியார் துறை இயங்க வேண்டிய நிலை ஆபத்தானது. இதை சர்க்கார் உணர்ந்து பொதுமக்கள் முதலீடு செய்யும் வழியில் அனுபவ ரீதியான சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்றார்.

பல்வேறு காரணங்களால் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட வரிச் சலுகைகள் முதலீடு செய்பவர்களுக்குப் போதிய உற்சாகம் ஊட்டவில்லை. இந்தச் சூழ்நிலைமையில் யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா எவ்வாறு அதனுடைய நோக்கங்களை நிறைவேற்றச் செயல்படுகிறது என்று கவனிக்க வேண்டும்.


விலைவாசி உயர்வு கட்டுக்கடங்காமல் போவதைத் தடுக்க 1965 பிப்ரவரியில் ரிசர்வ் பாங்க் வட்டி விகிதத்தை என்றுமே இல்லாத வகையில் 6 சத விகிதத்துக்கு உயர்த்தியது. 1964 செப்டம்பரில்தான் 4½ சத விகிதத்திலிருந்து 5 சத விகிதமாக உயர்த்தப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது. கடந்த இரண்டு வருடங்களில் பெரிய அல்லது நடுத்தர அளவுள்ள ஷெட்யூல்ட் பாங்குகளுடன் கட்டாய ஏற்பாடு அல்லது தன்னிச்சையாக இணைத்துக் கொள்வதன் மூலமாக பாங்க் சிஸ்டம், மொத்தத்தில் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவால் கணிசமான பலன்களைச் சாதித்துள்ளது. கிளை விஸ்தரிப்புக் கொள்கை முறை தாராளமாக்கப்பட்டு பாங்க் இல்லாத இடங்களில் கிளைகள் திறக்கப்படுவதற்கு வற்புறுத்தப்பட்டது.

சிறு சேமிப்புகளைத் திரட்டுவதற்கான சக்தியுடைமை இருப்பது உண்மையாயினும், இத்தகைய பகுதிகளில் கிளைகள் ஏற்படுத்துவதில் பாங்குகளை அநேக பிரச்னைகள் எதிர்நோக்குகின்றன என்றார். இத்தகைய இடங்களில் டெபாசிட்டுகள் சிறு துளிகளாகவே குவிய முடியும். **சுய ஆதரவு ஏற்பட சில வருடங்களாகும்.** அதுவரையில் இத்தகைய கிளைகள் பராமரிப்பு — தற்போதைய உயர்ந்த ஊதியம் — மற்றும் நிறுவனச் செலவுகளைக் கவனித்தால் பாங்குகளின் லாபங்களில் ஒரு சுமையாக இருக்கும் என்று கூறினார்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் தொழில் வளம் பெருகி வருகிறது. சாதாரண பாங்குகள் நடைமுறை மூலதனம் வழங்கும் பணியைத்தான் பொதுவாகச் செய்து வருகிறது. மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப மத்திய கால கடன் போன்றவற்றையும் வழங்கும் வகையில் செயல்பட வேண்டும். டெபாசிட்டுகள் குறுகிய கால அளவுக்கு இருப்பதால் பாங்குகள் செய்யக் கூடியது ஓரளவுக்கே இருக்க முடியும். தற்போது தொழில்களுக்குப் போதிய கடன் வசதி அளிக்கக் கூடிய நிலையில் ''இந்தியன் பாங்க்'' இருக்கிறது என்றார்.

இறுதியில் சக டைரக்டர்கள் அளித்த ஒத்துழைப்புக்கும், ஸ்தல அட்வைசரி கமிட்டிகளுக்கும், காரியதரிசி, அதிகாரிகள், மற்ற சிப்பந்திகளின் சிறந்த சேவையைப் பாராட்டி மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

குறிப்பு: இது வருடாந்திர பொது மகாசபைக் கூட்ட நிகழ்ச்சிகளின் நடவடிக்கைக் குறிப்பாகக் கொள்ளக்கூடாது.



பாத்திரங்கள்:

வாசு — நடுத்தரக் குடும்பத் தலைவர்
விசாலம் — வாசுவின் மனைவி
ராதா — தம்பதியின் மகள்; கல்லூரி மாணவி
விச்சு — வாசுவின் சகோதரி மகன்; மணமாகாத இளைஞன்.
முனியன் — பூங்காக் காவலாளி

[ஒரு நாள் மாலை வேளை — வாசு அலுவலகத்தின் முன் பஸ்ஸுக்கு நிற்கையில் விச்சு ஸ்கூட்டரில் வருகிறான்.]

விச்சு (சட்டென்று ஸ்கூட்டரை நிறுத்தி இறங்கி வந்து): மாமா....!

வாசு: அட! விச்சுவா? வாசுவைப் பிராப்தி எப்போது வந்தது? சொல்லவே யில்லையே?

விச்சு: எழுபத்தைந்து சதவிகிதம்தான் வந்திருக்கிறது மாமா!

வாசு: ஓகோ! பின் ஸீட்டுக்குரியவர் வரவில்லை என்று சொல்கிறாயா?

விச்சு: அட, என்ன மாமா, தமாஷ் பண்ணுகிறீர்கள்! சொந்தமாக, இருபத்தைந்து சதவிகிதம் பாக்கி நிற்கிறது. உன் உதவி கிடைக்கவில்லை. வெளி உதவி நாடி...

வாசு (சட்டென்று): விஷயம் தெரிந்துகொண்டு என்னிடம் வந்து உன் உதவிக் கோரிக்கையைச் சமர்ப்பித்து என்னப்பா பிரயோசனம்?

விச்சு: இருநூ மந்திரியைப் பார்க்குமுன் உங்களிடம் ஒரு பேச்சு சொல்வது முறையில்லையா மாமா?

வாசு: எனக்கு ஆட்சேபமேயில்லை. ஆமாம், அப்பா உடம்பு எப்படி யிருக்கிறார்? ஆஸ்த்மா தொந்தரவு அதிகமாயிருப்பதாக அத்தை பஸ்ஸில் பார்த்தபோது சொன்னதென்று ராதா சொன்னாளே?

விச்சு: ஆமாம், மாமா! இப்போது ஒரு ரேகைகூட இல்லை. இப்போது பார்த்தால் இவருக்கா ஆஸ்த்மா என்று கேட்பீர்கள். அடித்துத் தூங்க வைத்த பச்சைக் குழந்தை மாதிரி தூங்குகிறார் மாமா!

வாசு: அப்படியா? ஆஸ்த்மாவுக்கு இவ்வளவு குணமான ட்ரீட்மென்ட் இருக்கிறதா, என்ன?

விச்சு: சும்மாவா? இருபதாம் நூற்றாண்டின் அற்புத சிகிச்சை மாமா! மனத்தத்துவ வைத்தியரிடம் அழைத்துப் போனேன்.

வாசு: அட, அப்படியா? இப்படி மேலே ஏறிவந்து பேசு. எனக்கு ரொம்ப நாட்களாக இந்த மன வைத்தியம் பற்றித் தெரிய வேண்டுமென்று ஆசை.

விச்சு: பழம் நழுவிப் பாலில் தான் விழுந்தது. போங்கள்! ஜீனியோ நமசிவாயம் என்று புதிதாக வந்திருக்கிறானே? திருவாரூர் தாண்டிக் கடற்கரை ஓரம் போர்டு போட்டுக் கொண்டிருக்கிறான். இந்தோ—பிரஞ்சோ, பிரஞ்சோ தமிழனோ எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். அபார ஜீனியஸ், மாமா ஜீனியஸ்!

வாசு: அட, அப்படியா?

விச்சு: ஆமாம், மாமா! உலகத்து சர்வ கலாசாலைகளெல்லாம் அவனுக்குப் பட்டம் கொடுத்தாச்சு. எக்கச் சக்கமாக ஆராய்ச்சி பண்ணி, இருபத்தாறு எழுத்தும் பட்டமாக்கிக் கொண்டிருக்கிறான்!

வாசு: எனக்கு ரொம்ப நாட்களாக ஒரு மனோதத்துவ வைத்தியரைப் பார்த்துப் பரிசோதனை செய்து கொள்ள வேணுமென்றுஎண்ணம் விச்சு. இவன் என்ன ஃபீஸ் கேட்கிறானோ?

விச்சு: பேஷாகச் செய்து கொள்ளலாம் மாமா, மகா அற்புதம். ஆளைப் பார்த்தவுடனே, தனிமையில்தான், ஆழ நெஞ்சுக்குள் இருந்து மூச்சு முட்டித் தத்தளிக்கும் எண்ணங்களை யெல்லாம் அப்படியே குடத்துக்குள் கைவிட்டுக் கொத்தவரங்காய் வற்றலை எடுப்பது போல் எடுத்து மேசைமீது போட்டுவிடுகிறான்!

வாசு: எனக்குக் கேட்கவே ஆச்சரியமாக இருக்கிறதே, விச்சு?

விச்சு: அப்பாவுக்கு. பாவம், சின்ன வயசிலே பஜ்ஜி பிட்டாய் சாப்பிட வேண்டுமென்று ஆசையாம். ஆனால் பாட்டியோ, அதெல்லாம் வாங்கக் கூடாதென்று கண்டிப்பாக உத்தரவு போட்டு விடுவாளாம். இந்த ஆசை அப்புறம் பெரியவரான பிறகு நிறைவேறாமலே நின்று போய் விட்டது. இல்லை, புல் பூண்டு பால் வேரூன்றி, ஆஸ்த்மாவுக்குக் காரணமாயிருந்திருக்கிறது.....

வாசு: அப்புறம்?

விச்சு: அவன் என்னைத் தனியே அழைத்து 'இது உன்

அப்பாவின் அடக்கப்பட்ட ஆசை. பிறர் நகைப்பார்களோ என்ற பயத்தில் மூடிக் கிடக்கிறது. அந்தப் பயத்தை விலக்கி, அந்த ஆசையை நிறைவேற்று. அப்புறம் ஆஸ்த்மா தொந்தரவிருந்தால் என்னைக் கேள் என்றான்.

வாசு: அப்புறம்?

விச்சு: அப்புறமென்ன? அவன்தான் அப்பாவின் உள்ளத்தை மூலை முடுக்கில்லாமல் அலசி விட்டானே? குழந்தையாக இருக்கும்போது பாட்டி. இப்போது அம்மா இரும்புப் பிடியாய்ப் பாதுகாக்கிறாள். இந்தப் பாதுகாப்பிலிருந்து அப்பாவுக்கு விடுதலை அளிக்க வேண்டும்.

வாசு: சுவாரசியமாய் இருக்கிறதே?

விச்சு: டாக்டர் வரச் சொன்னானென்று அம்மாவிடம் புளுகிவிட்டு, ராத்திரி எட்டு மணிக்கு அப்பாவைக் குஷியாய் அழைத்துக் கொண்டு போய் ஒரு குழந்தைப் பூங்காவில் விட்டேன். கைநிறையப் பஞ்சு மிட்டாய். சறுக்காம் பலகையில் சறுக்கிக் கொண்டு பஞ்சு மிட்டாயை அநுபவித்தார், பாருங்கள் மாமா..... (சிரிப்பு)

வாசு: சிரிப்பாக இருக்கிறது. நிஜம்தானா இதெல்லாம் விச்சு?

விச்சு: இதென்ன மாமா, அசட்டுக் கேள்வி கேட்கிறீர்கள்? பாருங்கள் மாமா, அந்த ஜீனியோ இன்னும் என்ன சொன்னான் தெரியுமா?

வாசு: என்ன சொன்னான்?

விச்சு: ரொம்பப் பேருக்கு மனதில் இது போன்ற குழந்தைப் பருவத்து அற்ப ஆசைகள் தடைப்படுவதால்தான் பலவகை நோய்கள், பயங்கள், கோளாறுகளெல்லாம் வருகின்றனவாம். அப்பா இப்போது அம்மா ஒன்று சொன்னால்கூடக் கேட்பதில்லை மாமா! சாதாரணமாகக் கிள்ளி எறிவதை விட்டு, வளரவிட்டுக் கொண்டு அவஸ்தைப்படுவதாகத் தோன்றவில்லை, மாமா!

வாசு: என்னை ரொம்பச் சிந்திக்க வைத்து விட்டாய் விச்சு! அந்த ஜீனியோ நமசிவாயம் என்ன கன்ஸல்டிங் ஃபீஸ் வாங்குகிறான் விச்சு? அதைச் சொல்லவில்லையே நீ?

விச்சு: கன்ஸல்டிங் ஃபீஸ் அதிகமாகத் தான் தோன்றும். ஒரு அபாய்ன்ட்மெண்டுக்கு ரூபாய் நூறு வாங்குகிறான். வெறும் பஞ்சு மிட்டாய் வைத்தியத்துக்கு இப்படி ஃபீஸா என்று மலைப்பாகத் தோன்றும். ஆனால், அப்படியே நூற்றுக்கு நூறு வெற்றி மாமா!

வாசு: நூறு ரூபாயா? ஏதோ பதினைந்து இருபதென்றால் விசாலத்துக்குத் தெரியாமல் சமாளிக்கலாம்.

விச்சு (இறங்கி): மாமா, அவன் ஒரு லட்சியப் பேர்வழி போலிருக்கிறது. வாங்கினால் நூறு ரூபாய் என்று. உளவழிச் சிகிச்சையை ஒரேயடியாக விலைவாசி உயரத்துக்கே வைத்திருக்க வில்லை. சாதாரணமானவர்களும் மனதைத் துப்புரவாக, ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள, மணி மணியாய், அருமையாய்ப் புத்தகம் ஒன்று எழுதியிருக்கிறான், மாமா!



வாசு (ஆவலுடன்) : தேவலையே?

விச்சு : என் கைவசம்கூட ஒரு பிரதி வைத்திருக்கிறேன். ஒரே பதிப்பில் எல்லாம் விற்று விட்டதாம். எனக்கென்று பத்து ரூபாய் கொடுத்து ஒன்று வாங்கினேன்.

வாசு (உடனே பர்ஸைத் திறந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து): இந்தா, பிடி, புத்தகத்தை எடு! நல்ல வேளை, வாட்ச்மேன் எவனோ பர்மா அகதியிடம் ஒரு பேனா வாங்கி வைத்துக் கொண்டு இருபது ரூபாய்க்குத் தருகிறேன் என்றான். பத்துக்குக் கொடுத்தால் வாங்கிக் கொள்ளுங்கள் என்று விசாலம் பணம் கொடுத்தாள்.

விச்சு (குழைந்து): உங்களிடம் பணம் எதற்கு மாமா ?

வாசு : பரவாயில்லை; புத்தகத்தை எடு!

விச்சு: சரி மாமா, நீங்கள் ரொம்பச் சொல்லும்போது.... (தோல் பையைத் திறந்து புத்தகத்தை எடுத்துக்கொடுக்கிறான்.)

வாசு : ''நீ யார்?'' அட, புத்தகத் தலைப்பே பிரமாதமாக இருக்கிறதே!

விச்சு: நான் வரட்டுமா? அப்புறம் வரேன், மாமா !

(ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டு வெற்றிப் புன்னகையுடன் பறக்கிறான்.)

2

[சில நாட்கள் சென்றபின் — மாலை ஐந்து மணி இருக்கும். ராதா முன்புறத்து அறையில் ஏதோ புத்தகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிறாள்.]

விச்சு (சப்தமின்றி வந்து கொண்டு மெல்லிய குரலில்): ராதா....!

ராதா: ஓ.... நீங்களா!

விச்சு (கேலியாக): ராதே உனக்குக் கோபம் — பாடட்டுமா?

ராதா: ஷ், என்ன விளையாட்டு? அம்மா கோபமாக இருக்கிறாள். உங்களைக் கண்டு எரிமலை வெடித்தாலும் வெடிக்கலாம்.

விச்சு: குழாயில் நீர் வரவில்லையோ ? பாலுக்கு 'க்யூ'வில் நின்றதால் தொல்லையோ?

ராதா (வாயை மூடி விழுந்து விழுந்து நகைத்து): இல்லை, அப்பாவின் புரட்சி...

விசாலம் (வந்து கொண்டே): விச்சுவா? எப்போது வந்தாய் நீ? ராதா, போய் ஸ்டவ்வில் வைத்த பாலைப் பார் !

(ராதா போகிறாள்)

விச்சு : என்ன மாமி சமாசாரம்? தலை வலியா ? முகம் ஒரு மாதிரி இருக்கிறதே ?

விசா: ஏன் விச்சு? ஆபீஸில் வருடாந்தரக் கணக்கு வழக்கு, என்றால், ஒரு நாளைப் பார்த்தாற்போல் தினமும் எட்டு மணிக்குத் தான் வர முடியுமா ? வந்த பிறகும் போய் விட்டுப் பத்து மணிக்குத்தான் திரும்பி வர முடியுமா? நான் கேட்கிறேன்.

விச்சு (திகைத்தாற் போல்): ஏன் மாமி ! மாமா தினமும் அவ்வளவு நேரம் கழித்தா வீட்டுக்கு வருகிறார்?

விசாலம்: உன் வயசாகிறது, இவரைக் கலியாணம் செய்து கொண்டு, இத்தனை வருஷங்களாக இல்லாத கணக்கா இந்த வருஷம் வந்திருக்கிறது? ஆறடித்தால் வீடு வருபவர், எட்டடித்த பிறகு வருகிறார்; அப்படி என்ன கணக்கு ?

விச்சு: கணக்கா ?

விசாலம்: அப்படிச் சொல்லி விட்டுத் தான், எங்கே சீட்டாடுகிறாரோ, எங்கே வெட்டி அரட்டை அடிக்கிறாரோ தெரியவில்லை. கேட்பதற்குச் சரியாய்ப் பதில் சொன்னால்தானே ? காலையிலே ஏதோ கேட்டேன், சண்டை போட்டு விட்டுச் சாப்பிடாமலே போய் விட்டார்.

விச்சு (அயர்ந்தாற்போல்): மாமாவா ? நிச்சயமாகவா மாமி? ...நான் நினைத்தது, கேள்விப்பட்டது சரியாகத்தான் இருக்கும் போலிருக்கிறது.

விசாலம்: என்ன?

விச்சு: கள்ளக் கணக்கு, மாமி, கள்ளக் கணக்கு. கறுப்புப் பணம் இதுகளைச் சேர்ந்த சமாசாரம்.

விசாலம் (திகைத்து மருண்டு): கறுப்புப் பணமா? இவரிடம் ஏது கறுப்புப் பணம் ? வெள்ளைப் பணத்துக்கே வழியைக் காணோம்?

விச்சு: மாமி, கறுப்புப் பணம் என்றால் நீங்கள் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ?

விசாலம்: அதுதான் எனக்கும் இப்போது புரியவில்லை. அங்கே சோதனை, இங்கே சோதனை என்றெல்லாம் பார்க்கையில் எங்கே கறுப்போ என்று பயமாக இருக்கிறது.

விச்சு: கறுப்புப் பணம் என்றால், பதுங்கி இருக்கும் பணம். அது பாத்ரூம் சுவரில் பதுங்கி இருந்தால் என்ன, பருப்பு டப்பாவுக்குள்ளோ, அப்பள சம்புடத்திலோ



பதுங்கி இருந்தாலென்ன என்று சகட்டு மேனிக்குக் கறுப்பாகச் சிலர் எண்ணுவதாகக் கேள்வி.

விசாலம்: புரியும்படி சொல்லேன் விச்சு? பஸ் சார்ஜுக்கு மேல் பணம் கொடுத்தால் கணக்கைக் காற்றிலே விடுவார். இவருக்கும் கள்ளக் கணக்குக்கும் என்ன சம்பந்தம் ?

விச்சு: இல்லே மாமி, நீங்கள் தப்பாக நினைக்கக் கூடாது. ஒரு பேச்சுக்குச் சொல்கிறேன். சம்பளம் வாங்கி வந்து உங்களிடம் கொடுத்து விடுகிறார். அவருக்குத் தெரியாமல், நீங்கள் என்றால் நீங்களில்லே, உங்களால் கணக்கில் ஏறுமாறு செய்ய முடியும். அவரறியாமல் பாத்திரச் சீட்டு, புடவைச் சீட்டு கட்டலாம். கடன் கொடுத்து வட்டி வாங்கலாம்; ஏமாந்து போனாலும் வெளியிட முடியாமல் இருக்கலாம். கணவர்களுடைய கணக்கில் வராத இத்தகைய கள்ளப் பணம் நிறையப் பதுங்கி யிருக்கிறதென்று சிலர் நிர்மானித்து ஒரு சங்கம் ஆரம்பித்திருக்கிறார்களாம் !

விசாலம்: என்ன அநியாயம் ?

விச்சு: பொறுங்க மாமி. இந்தச் சங்கத்துக்காரர்கள் சேர்ந்து, இந்தக் கள்ளப் பணத்தைக் கண்டுபிடித்துக் கொண்டு வர மனத் தத்துவ முறைப்படி சில வழிகளைக் கையாள யாரோ ஒரு மனத்தத்துவ டாக்டரிடம் பயிற்சி பெறுகிறார்களாம் இரகசியமாக.

விசாலம்: அட, கஷ்ட காலமே? உன் மாமாவுக்கு இப்படிப் புத்தி போகுமா ?

விச்சு: மாமி, என் காதில் பட்டதைச் சொல்கிறேன். நிசமா, பொய்யா, மாமா இதில் சேர்ந்திருக்கிறாரா என்பதை அறிய வேண்டியது உங்கள் பொறுப்பு. அப்பா இப்படிப் பயின்று ஆன்த்மாவை இழந்து விட்டுக் கொண்டார். அதனால்தான் எனக்குத் தெரிந்து உங்களிடம் சொல்லி வைக்க வந்தேன்.

விசாலம்: அப்பாவுக்கு ஆஸ்த்மா எப்போதும் உண்டே ? அவரும் சங்கத்தில் சேர்ந்திருந்தாரா என்ன ?

விச்சு: எப்போதும் இலேசாக இருக்கும். இப்போது, மூளைக்கே அல்லவா புரட்சியைக் கொடுக்க முற்றி விட்டது? நான் மனத் தத்துவ டாக்டரிடம் அழைத்துப் போன பிறகல்லவா, எல்லா இரகசியங்களும் தெரிய வந்தன. (போகிறான்)

விசாலம்: அட, பாவமே!

3

[அதிகாலை ஐந்து மணி; ராதா இப்போதும் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருக்கிறாள். வாயிற் கதவைத் திறந்து கொண்டு வாசு வெளியேறுகிறார்.)

விசாலம்: ராதா, நான் பால் வாங்க வரமாட்டேனு ? பால்காரன் வருவது சாக்கு. சமையலறையில் குடைந்து ஒரு பார்வை பார்த்து விட்டு, இந்த வேளையில் வாக்கிங் போகிறேன் என்று ஓடுகிறாரே? என்ன அநியாயம்?

ராதா: நீயும் அவரை விட்டிலிருக்க வொட்டாமல் எதாலும் பிடுங்கிக் கொண்டேயிருக்கிறாய்! (திடீரென்று நினைவுக்கு வந்தவளாய்): அம்மா, மறந்தே போனேனே ? நேற்று, மேனன் ஸ்டோரிலே ஒரு பில் கொடுத்தான். இருபது ரூபாய் பில்.

விசாலம் (அதிர்ந்து): என்னது? அவ விடம் ஒரு சாமானும் வாங்கவில்லையே?

ராதா: அப்பா வாங்கியிருக்கிறாரம்மா...? இதோ பார், பில்....

விசாலம் (பில்லை வாங்கிப் பார்த்து): ஸ்வீட், ஆரஞ்ச் டிராப்ஸ், நெஸில் சாக்லேட் இருபது ரூபாய்க்கு.... (கத்தி) இந்தக் குடும்பத்தில் இடி விழுந்தாச்சடி ! இந்தச் சதி யாருடையது தெரியவில்லையே ?

[சற்றைக்கெல்லாம் கதவைத் தள்ளிக் கொண்டு மூச்சிரைக்க வாசு ஓடி வருகிறார். ஓடிப் போய்ப் படுக்கையில் விழுகிறார்.]

ராதா: அம்மா! அப்பா வந்தாச்சு !

வாசு (படுக்கையில் போர்த்துப் படுத்தபடி இரைப்பு அடங்காமல்): வாசல் கதவைத் தாள் போடு ராதா, கத்தாதே!

முனியன் (வாசலில் நின்று): அம்மா ! அம்மா ! யாரது ஊட்லே....

விசாலம் (உள்ளிருந்து): இங்கே யாருமில்லே, போப்பா !

முனியன் (உரக்க): அட, என்னம்மா, நான் காந்தி பார்க் காவற்காரன். ஊஞ்சலை அறுத்துப் போட்டு வந்திட்டாரம்மா! இதே தொயிலாப் போச்சு, கூப்டம்மா சொல்றேன்!

ராதா: ஏனப்பா, சத்தம் போடுகிறாய் ? நீ தவறுதலாக வந்திருக்கிறாய். இந்த வீட்டிலிருந்து காலே வேளையில் பார்க்குக்கு யாரும் வரவில்லே; மாலையிலும் வரதில்லே. குழந்தைகளே இல்லே.

விசாலம் (உள்ளிருந்தபடியே): ஏ, ராதா! அவனிடம் போய் வாக்குவாதம் பண்ணாதே: காலோ அரையோ கொடுத்துப் போகச் சொல்லு ! தலைவிதி !

முனியன்: இன்னும்மா சொன்னே ? சங்கிலி என்ன, கன்னுக்குட்டித் தும்புன்னு நெனச்சிகினியா? ரூபா நாலாவுது! எடுத்து வைம்மா ! பொயுது விடிஞ்சா பேஜார் புடிச்ச பொயப்பாப் போச்சு !

ராதா: கத்தாதேப்பா, நான் கொடுத்து விடுகிறேன். போய்ச் சேரு !

(உள்ளே போய்ப் பணத்தை எடுத்து வந்து கொடுக்கிறாள்.)

ராதா: ஏனம்மா, நீ இப்படி அழுகிறாய்? அப்பா தூங்குகிறார் போல் இருக்கிறது. எழுந்து வா !

விசாலம் (சட்டென்று சுதாரித்துக் கொண்டு எழுந்து): நீ ஸ்டவ்வை மூட்டிக் காப்பியைப் போடு. நான் போய், ஸ்டவ் ஜோசியம் குப்பு மாமியைப் பார்த்து ஒரு வார்த்தை கேட்டு வரேன். (போகிறாள்)

வாசு (உள்ளேயிருந்து): ராதா!

ராதா: என்னப்பா! இதெல்லாம் என்ன நாடகம் ?

வாசு: என்ன ஏதென்று கேட்காமல் நீ போய் ஒரு டாக்டரைப் பிடித்து வா, போ!

ராதா: அடாடா! என்னப்பா, முழங் காலில் காயம் ?

வாசு (கடுமையாக): ராதா, நீ இப்படிக் கேள்வி கேட்டுக் கொண்டு நின்றால் உங்கம்மா குங்குமப் பொட்டு குப்பு மாமியை ஸ்டவ்வும் கையுமாகக் கூப்பிட்டுக் கொண்டு வரப்

இது போன்ற காபியை நீங்கள் குடித்திருக்க மாட்டீர்கள்



நெஸ்கா:.பே

மட்டுமே
காபியின் தனிச் சிறப்பை
முற்றிலும் பெற்றுள்ளது

நெஸ்கா:.பே உயர்ந்த ரக காபிக்கொட்டையிலிருந்து தயாரானது. அது தனிப்பட்ட முறையில் வறுக்கப்பட்டு, நவீன வழியில் திறம்பட தயாரிக்கப்படுகிறது. டின்னைத் திறந்தவுடன் புத்தம் புதிய காபியின் நறுமணம் உங்கள் மனதைக் கவரும். சுவைத்தால் தான் தெரியும், அதன் தனி ருசியும், மணமும். இன்றே வாங்கிப் பருகுங்கள்!



5
விநாடிகளில்
காபி
தயார்

நெஸ்கா:.பே உடனே கரையக் கூடிய தூய்மையான காபி. அது, கொதிக்க வைத்தல் முதலிய வழி முறைகளுக்கு முன்னதாகவே உள்ளாகிவிட்டது. ஒரு கரண்டி நெஸ்கா:.பே யை கோப்பையில் போட்டு வெந்நீர் ஊற்றுங்கள். அருமையான காபி உடனே தயார்! கொதிக்க வைப்பது, வடிகட்டுவது போன்ற எவ்வித கஷ்டமும் இல்லை. ஆகா, எத்தனை சுலபம் — எவ்வளவு இனிமை!

நெஸ்கா:.பே*

இந்தியாவின் இணையற்ற காபி ...
100% தூய்மையானது

*நெஸ்கா:.பே, நெஸ்லே இன்... குறிப்பிடும் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்...

NESTLÉ
ஒரு நெஸ்லே தயாரிப்பு

(WT-NCE-3308(R))



இன்றே பாருங்கள்!

ஆனால் இது...

வயது வந்தவர்களுக்கு மட்டும்

சித்ராலயா அளிக்கும்

ஸ்ரீதரின்... வெண்ணிற ஆடை

...ஈஸ்ட்மென் கலர்...

ஆனந்த் 70mm

புவனேஸ்வரி • மஹாராஜா

தென்னகமெங்கும்

போகிறான். எனக்கு நிஜமாகவே பைத்தியம் பிடிக்கப் போகிறது!

ராதா: சரி, அப்பா!

4

[வீட்டில் விசாலம் மகனைக் கோபிக்கிறாள்.]

விசாலம்: இப்படி ஒரு துப்பு கெட்ட பெண் இருப்பாளா? உடம்பும் மனசும் சரி யில்லாதவரைத் தனியாக அனுப்புவாளா? என்னென்ன விபரீதங்கள் கொண்டு வருவாரோ?

(விச்சு வருகிறான்)

ராதா (முகம் ஒளிர): அம்மா, அத்தான்!

விசாலம் (அழுகுரலில்): விச்சு... நீ சொன்னது போலவே ஆகி விட்டதே?

விச்சு: அடாடா.... என்ன மாமி, குழந்தை போல் அழுகிறீர்கள்? மாமா சௌக்யமாயிருக்கிறார். சொல்லவே வந்தேன்.

விசாலம் (கவலை விடுபட்ட நிமர்மகிழ்ச்சியுடன்): இருக்கிறாரா? நிசமாகவா? எனக்கு இத்தனை நேரம் உயிரே இல்லை விச்சு!

விச்சு: உங்களுக்கு ரொம்ப இளகிய மனசு மாமி, அதற்குள் அழுது விட்டீர்களே? ராதா, போய் ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வாயேன்!

விசாலம்: இப்போது எங்கே இருக்கிறார்? எப்படியிருக்கிறார்?

விச்சு: இங்கே வந்தால் அக்கம் பக்கம் விளம்பரமாகுமென்று அங்கேயே வைத்திருக்கிறேன், மாமி. அம்மாவும் அப்பாவும் திருப்பதிக்குப் போனார்கள். நான் சோப்பு வாங்கக் கடையில் நின்றேன். டாக்ஸியில் மாமா போல் இருந்தது. நிறுத்தி விட்டேன்.

விசாலம்: அப்புறம்?

விச்சு: ஒரு மாதிரியாகப் பேசினார். அப்போதே சந்தேகம் தட்டியது. அப்படியே வீட்டுக்கு அழைத்துப் போய் விட்டேன். அப்பாவைக் காட்டிய சைக்கியாட்ரிஸ்டிடம் அழைத்துப் போகலாம், மாமி. காலில் குத்திய முள்ளை எடுப்பது போல் எடுத்து எறிந்து விடுவான். நீங்கள் கொஞ்சமும் கவலையே பட வேண்டாம்.

விசாலம்: இந்த விஷயம் இரண்டாம் பேருக்குத் தெரிந்தால் கேவலமாகி விடுமே என்று தவித்துப் போனேன் விச்சு. ஸ்டேஷன் ஜோசியம் மாமியிட்டே கூட ஒன்றுமே சொல்லாமல்தான் வாக்குக் கேட்டேன். ஒரு வாரம் ரொம்பப் போதாதென்றான்!

விச்சு: அம்மா, அப்பாவுக்குக்கூடத் தெரியாமல் சமாளித்து விடலாம் மாமி, ஒரே ஒரு பிரச்னைதான்.

விசாலம்: என்ன அது?

விச்சு: அந்த ஜீனியோ நமசிவாயம் ஒரே பணம் பிடுங்கி. அந்த அப்பாய்ன்மெண்டாலும் குறைஞ்ச பட்சம் வேண்டியிருக்கும், இந்நூறு கறந்து விடுவான்.

விசாலம்: அந்த நூறு பெரிசா, மானம் பெரிசா இப்ப? நன்றாகக் குணமாக்கி விடுவாரோ இல்லையோ?

விச்சு: நானே உத்தரவாதம். பழையபடி ஆக்கி விடுவது மட்டுமல்ல. இது போல் இனி அரைகுறை விவகாரங்களில் பிரவேசிக்காமலும் பாடம் கற்பித்து விடுவார். சாயங்காலமே அப்பாய்ன்மெண்ட்ஃபிக்ஸ் செய்யட்டுமா, மாமி?

விசாலம்: நல்ல வேளையாகச் சமயத்தில் வந்தாயே? இரு. பணம் கொண்டு வருகிறேன்.

(போகிறாள்; ராதா தண்ணீருடன் வருகிறாள்.)

ராதா: இந்தாருங்கள்.

விச்சு: வெறும் பச்சைத் தண்ணீர்தானா?

ராதா: உங்களுக்கு இதுகூடக் கொடுக்கக் கூடாது. பாவம், அம்மா!... அவளை ஏமாற்றி!...


விச்சு: .....உஷ், அம்மா வருகிறாள்.

விசாலம்: இந்தா, நானூறு இருக்கிறது. பிறகு பார்த்துக் கொண்டு தருகிறேன். நீ சொன்னாற்போல் இங்கொன்றும் தெரிய வேண்டாம்.

விச்சு (பணத்தை எண்ணிப் பையில் போட்டவண்ணம்): கறுப்புப் பணமா மாமி, தாங்க்ஸ்!

விசாலம்: அவர் நல்லபடியாக வந்த பிறகல்லவா கறுப்பையும் வெளுப்பையும் சொல்லிக் காட்ட வேண்டும்?

விச்சு (சிரித்துக் கொண்டு): வரேன், மாமி நானே வந்து ரிஸல்ட் சொல்லுகிறேன். — வரேன் ராதா! (போகிறான்)



முதல் மீன்: இன்னிக்குத்தான் புதுசா வந்தாப்பல இருக்கே. எங்கே யிருந்து வந்தே நீ?

இன்னொரு மீன்: புழலேரியிலிருந்து குழாய் வழியா வந்தேன்.

முதல் மீன்: அடடே மறந்தே போயிட்டேன்; இன்னிக்குத் தொட்டியிலே தண்ணி மாத்துகிற நாளு இல்லே?

6

[வாசு படுக்கையில் சாய்ந்தபடி புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கிறார். விச்சு வருகிறான்.]

விச்சு: மாமா!....

(ரூபாய் நோட்டுகளைக் காட்டுகிறான்.)

வாசு (வியந்து): பணமா? ஏது? நீ போன காரியம் எப்படி?

விச்சு: அதுதான் மாமா, பணம், கறுப்புப் பணம்!

வாசு: கறுப்பா?

விச்சு: பதுங்கி இருந்த பணம், உங்களுக்குக் கறுப்புத்தானே? நான் ஸ்கூட்டருக்கு வேண்டும் என்றால் கொடுப்பாளா, நீங்கள் கேட்டால்தான் இருக்குமிடம் தெரியுமா? ஜீனியோ நமசிவாயத்திடம் உங்களுக்கு ட்ரீட்மெண்டுக்காக இப்போது கொடுத்திருக்கிறாள். மாமா, ஒரு வாரம் என் பேஷண்ட் நீங்கள்! இன் பேஷண்ட்! சாயங்காலமாக வந்து ஒரு நல்ல படமாகப் பார்க்க அழைத்துப் போகிறேன், சாக்லேட் டப்பியுடன்! வரட்டுமா, மாமா, இப்ப?

வாசு: அட பயலே! (சிரிக்கிறார்!)



கேட்காத கேள்வி

மகேஸ்வரி

"முதலிலேயே எச்சரித்து விடுகிறேன். எனக்கு ஆண் குழந்தைகளே கிடையாது. ஐந்தும் பெண்கள்தான். முதல் பெண்ணுக்கு இருபது வயது. பிறகு இரண்டு இரண்டாகக் குறைந்துக் கணக்கெடுத்துக் கொள்ள வேண்டியதுதான். இதை யெல்லாம் எதற்காக உன்னிடம் சொல்லுகிறேன் என்றால், அந்தரங்கக் காரியதரிசியாக முதலில் வருவது; பிறகு வீட்டு எஜமானரின் பெண்களுடன் திட்டமிட்டுப் பழகுவது. அதே காரணமாகக் கடைசியில் அந்த வீட்டின் மாப்பிள்ளையாகவே ஆகி விடுவது; இதெல்லாம் சினிமாக்களுக்கும், கதைகளுக்கும் ஒத்து வரலாம். நடைமுறைக்கு ஒத்து வராது? என்ன, நான் சொல்வது விளங்குகிறதா?" என்று கேட்டார் வேதசர்மா.

"விளங்குகிறது, சார்!" என்றான் பகபதி பணிவான குரலில்.

"உன் வேலையுண்டு, நீ உண்டு என்று நடந்து கொள்ள வேண்டும். சரிதானே?"

"சரி சார்!"

"சரி, போய் நாளைக்கு வா. நாளை முதல் உனக்கு இங்கே வேலை. இருநூறு ரூபாய் சம்பளம். போகப் போக அதிகரிக்கலாம்; அது உன் நடத்தையைப் பார்த்து."

ஆறு மாதங்களுக்குப் பிறகு.

"கமலம், உன் அபிப்பிராயம் என்ன?" என்று மனைவியிடம் கேட்டார் வேதசர்மா.

"பகபதியைப் பற்றித்தானே?"

"ஆமாம்."

"தங்கமான பையன். வீடு நிறையப் பெண்கள் நடமாடுகிறார்கள். ஒருத்தரையாவது கண்ணை விழித்துப் பார்க்க வேண்டுமே. ஊஹூம், கிடையவே கிடையாது. அவன் வேலையுண்டு. அவன் உண்டு" என்றாள் கமலம் உற்சாகமாக.

"ஏதேது...,... சர்டிபிகேட் ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கிறது போலிருக்கே!"

"உள்ளதைத்தான் சொன்னேன்..."

"சைட்! மூத்தவளுக்கு அந்தப் பெங்களூர் வரனை முடித்து விட்டேன். இரண்டாவதுக்கு இவனை முடித்து விடலாமா? கலியாணச் செலவு ஒன்றாகி விடும்....."

"தாராளமாக முடிக்கலாம். பையன் கண்ணுக்கும் ராஜா மாதிரி இருக்கிறான். கைக்கு அடங்கின சரக்கு!"

"அப்ப முடித்து விடுகிறேன்...."

"பகபதி! உனக்கு நூறு ரூபாய் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறேன்!"

"அப்படியா! நன்றி சார்!"

"உன் வேலை, உன் குணம் இரண்டும் எனக்கு ரொம்பப் பிடித்து விட்டன."

"மகிழ்ச்சி சார்!"

"மூத்த பெண்ணுக்குக் கலியாணம் நிச்சயமாகி விட்டது."

"ரொம்ப சந்தோஷம் சார்!"

"இரண்டாவது பெண்ணின் கலியாணத்தையும் சேர்த்து நடத்தி விடலாமென்று உத்தேசம்.....வரன்"

"ஏதேனும் காதில் விழுந்தால் தெரிவிக்கிறேன் சார்......"

"நோ! நோ!"

"வரன் பார்த்தாகி விட்டது!"

"அப்படியா, சார்! சந்தோஷம்."

"அந்த வரன் யார் தெரியுமா?"

"தெரியாது, சார்!"

"நீயேதான்!"

"என்ன!"

"ஆமாம். நாங்கள் முடிவு செய்து விட்டோம். உன்.... உன் வீட்டாரின் சம்மதம் தான் பாக்கி......"

"நான் இங்கே மனைவி சம்பாதிக்க வரவில்லை சார். பணம் சம்பாதிக்க வந்தேன். பெண் பார்க்க வரவில்லை சார்! வேலை பார்க்க வந்தேன்."

"அதெல்லாம் சரிதானப்பா. யார் இல்லையென்று மறுத்தார்கள்! இப்போது நிலைமை மாறலாம் அல்லவா?"

"அதெல்லாம் சினிமாக்களுக்கும், கதைகளுக்கும் ஒத்து வரலாம், சார்! வாழ்க்கைக்கு ஒத்து வராது....."

"நான் முதலில் சொன்னதை யெல்லாம் திருப்பிச் சொல்லுகிறாயா?"

"மன்னிக்க வேண்டும், சார்! நீங்கள் முதலில் சொன்னதையே திரும்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது...... நான் மணமானவன்...!"

"என்ன? இதை ஏன் முதலிலேயே என்னிடம் சொல்லவில்லை?"

"நீங்கள் கேட்கவில்லை. நானும் சொல்லவில்லை" என்றான் பகபதி.

"ஆமாம். நான் கேட்கவில்லைதான்." தலையில் அடித்துக்கொள்கிறார் சர்மா. அவனுக்குப் போய் நூறல்லவா சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4892
Registered as a Newspaper in Ceylon